விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 29 வியாழக்கிழமை (14.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 238

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# பொலிஸ்-பொதுமக்கள் படுவான்கரையில் மோதல்

## துப்பாக்கி சூடு; ஜீப் எரிப்பு; 11 பேர் காயம்



(மட்டக்களப்பு)

*மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்திலுள்ள பனையறுப்பான் கிராமத்தில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையிலான மோதலில் 7 பொலிஸாரும் 4 கிராமவாசிகளுமாக 11 பேர் காயமடைந்து அரசாங்க மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.*

காயமடைந்துள்ள கிராமவாசிகளில் தாயும் மகளுமாக இருவர், நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டில் காயமடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

சம்பவத்தின் போது பொலிஸ் வாகனமொன்றும் கிராமவாசிகள் சிலரால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவங்களை அடுத்து அந்தக் கிராமத்தில் ஏற்பட்ட பதற்ற நிலையையடுத்து அங்கு விரைந்த இராணுவத்தினரால் நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்

19 ஆம் பக்கம் பார்க்க....

## விசாரணைக்குழு நியமனம்; ஆணையை மீறிய செயற்பாடு

### இலங்கையை தண்டிக்க கூடாது என்கிறார் காரியவசம்



(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் குழுவானது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கப்பட்ட ஆணையை மீறிய செயற்பாடு என அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு குழு வொன்றை நியமிப்பதாயின் அந்தக் குழுவானது நாட்டை மீளக்கட்டியெழுப்பும் நோககிலானதாக அமைய வேண்டுமே

20 ஆம் பக்கம் பார்க்க....

## கொழும்பில் ஆர்ப்பாட்டத்திற்கு நீதிமன்றில் தடை

(கொழும்பு)

கொழும்பில் நேற்று எவ்வித ஆர்ப்பாட்டங்களையும் நடத்த முடியாது என்று மூன்று அமைப்புக்களின் மீது கொழும்பு நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிதுள்ளது.

முஸ்லிம்களின் தவாஹித் ஜமாத், பௌத்த அமைப்பான பொது பல சேனா மற்றும் சிஹல ராவய ஆகியவற்றின் மீதே இந்த தடையுத்தரவு

20 ஆம் பக்கம் பார்க்க....

## புகையிரதம் மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### கைத்தொலைபேசியால் ஏற்பட்ட கவனவீனம்

(மல்லாவி)

கைத்தொலைபேசியில் கதைத்துக் கொண்டு புகையிரதக்கடவையை கடக்க முற்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் புகையிரதத்துடன் மோதுண்டதில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலன் இன்றி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம இரவு 10 மணியளவில் கொழும்பு வெள்ளவத்தை புகையிரத கடவையடியில் இடம்பெற்றுள்ளது.


இதில் கிளிநொச்சி வர்த்தகர் சாந்தலிங்கம் சாந்தகுமார் (வயது 37) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவது,

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன்பாக வசிப்பிடமாக கொண்ட

20 ஆம் பக்கம் பார்க்க....

## சிறுத்தைக் குட்டிகள் முல்லைத்தீவில் மீட்பு



(முல்லைத்தீவு)

இலங்கைக்கே உரித்தான, அழிந்துவரும் நிலையிலுள்ள சிறுத்தை இனத்தைச் சேர்ந்த இர

20 ஆம் பக்கம் பார்க்க....

## ஆலோசனை நிபுணர்குழு அடுத்த வாரம் இலங்கைக்கு

(கொழும்பு)

காணாமல் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக் குழுவிற்கு ஆலோசனை வழங்கும் வெளிநாட்டு நிபுணர் குழுவினர், இலங்கைக்கு அடுத்த வாரம் வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டு நிபுணர் குழுவின் தலைவர் டெஸ்மன் டி சில்வா தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு சென்று மெக்ஸ்வல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவுடன் சந்திப்பு நடத்த உள்ளனர். டெஸ்மண்ட் டி சில்வா, டேவிட் க்ரேன் மற்றும் ஜிப்ரி நைஸ ஆகிய மூவர் அடங்கிய நிபுணர் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமை சட்டங்கள் தொடர்பில் ஆணைக் குழுவிற்கு ஆலோசனை வழங்

20 ஆம் பக்கம் பார்க்க....

## பாதுகாப்பு ஏற்பாடுகள் புதுடில்லியில் தீவிரம்

(புதுடில்லி)

இந்தியா சுதந்திரம் பெற்று 67 வருடங்கள் நிறைவடையும் நிலையில், 68-வது சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் நாடு முழுவதும் இடம்பெற்று வருகின்றன.

இந்தியாவின் சுதந்திர தினத்தித்தை முன்னிட்டு நாடு முழுவதும் கொண்டாட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், இந்திய முஜாகிதீன் அமைப்பு, விமானங்க

20 ஆம் பக்கம் பார்க்க....

## இந்திய மீனவர்களை விடுவிக்க ஜனாதிபதி மகிந்த உத்தரவு

(கொழும்பு)

நாளை வெள்ளிக்கிழமை 15ஆம திகதி அன்று கொண்டாடப்படும் இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கைக் காவலில் உள்ள இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு ஜனாதிபதி ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இந்த அறிவிப்பு சமூக வலைதளமான டுவிட்டரில் உள்ள ஜனாதிபதி ராஜபக்ஷவின் அதிகாரப பூர்வ கணக்கிலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. எனினும் எத்தனை மீனவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள் என்ற எண்ணிக்கையை அந்த அறிவிப்பு குறிப்பிடவில்லை.

இலங்கை சிறையில் இதுவரை 94 தமிழக மீனவர்கள் இருப்பதாகவும தமிழக மீனவர்களுக்கு சொந்தமான

20 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த, கோத்தாவை காப்பாற்றவே விசாரணை ஆணைக்குழு நியமிப்பு

### நாடகமாடுகிறது அரசு என்கிறார் மங்கள



(கொழும்பு)

வடக்கில் நடைபெற்ற போரில் காணாமல் போனவர்கள் குறித்து அறியவென கூறி ராஜபக்ஷ அரசு நியமித்துள்ள ஜனாதிபதி ஆணைக் குழு மகிந்தவையும் கோத்தபாயவையும் பாதுகாக்க நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளை கண்காணிக்க மகிந்த ராஜபக்ஷ அரசு மூன்று நிபுணர்களை நியமித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரை பாதுகாக்கவே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளருக்கு எதிராக சுமத்தப்படும் பாரதூரமான குற்றச்சாட்டுக்களில் இருந்து அவர்களை தப்புவித்து, அந்த குற்றச்சாட்டுக்க

20 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நள்ளிரவு வேளை வீடு புகுந்து

# இளம் குடும்பப் பெண் மீது சிப்பாய் வன்புணர்விற்கு முயற்சி

(பொற்பதி)

இரண்டு பிள்ளைகளின் தாயான இளம் குடும்பப் பெண்ணொருவரை பாலியல் வன் புணர்வுக்கு உட்படுத்த முயற்சித்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் இரவு மருதங்கேணிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் வடமராட்சி வெற்றிலைக் கேணிப் பகுதியில் உள்ள கடற்றொழிலாளர் ஒருவரின் வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது; சம்பவதினத்தன்று குறித்த பெண் வீட்டின் அறை ஒன்றில் தனது இரு பிள்ளைகளுடனும் பெண்ணின் கணவர் வீட்டு முற்றத்திலும் உறக்கத்தில் இருந்துள்ளனர். இவர்களது வீட்டின் கதவாக ஓலையால் வேயப்பட்ட தட்டி ஒன்றை வழக்கமாக பயன்படுத்தி வந்துள்ளனர்.

இவற்றை தெரிந்து வைத்திருந்த குறித்த கடற்படைச் சிப்பாய் இரவு 12 மணியளவில் வீட்டு வாசல் ஊடாக உட்சென்று அறையில் படுத்திருந்த குடும்பப் பெண்ணை பாலியல் வன்புணர்விற்குட்படுத்த முயற்சித்துள்ளார். சுதாரித்துக் கொண்ட குறித்த பெண் சத்த மிட்டு கூச்சலிட்டுள்ளார்.

இதனை அடுத்து பெண்ணின் கணவர், அயலவர்களின் உதவியுடன் சிப்பாயினை பிடித்து நையப்புடைத்துள்ளார். அத்தோடு பொலிஸ் அவசர அழைப்பிற்கு தெரியப்படுத்தப்பட்டது.

இதன்பின்னர் சம்பவ இடத்திற்கு சென்ற மருதங்கேணிப் பொலிஸார் சிப்பாயினை கைது செய்து பளைப் பொலிஸ் பிரிவிற்கு ஒப்படைத்தனர்.

தற்போது பளைப் பொலிஸார் குறித்த சிப்பாய்க்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இதேவேளை நேற்று புதன்கிழமை குறித்த பெண்ணின் வீட்டிற்கு சென்ற வெற்றிலைக் கேணி கடற்படை அதிகாரிகள் இருவர் இப் பிரச்சினையை பெரிதுபடுத்தாது விட்டு விடுமாறு கூறியதாக குறித்த பெண்ணும் பெண்ணின் கணவரும் தெரிவித்துள்ளனர். (செ-64)

# கத்தி முனையில் அச்சுறுத்தி நகை; பணம், பொருட்கள் திருட்டு

(மல்லாவி)

வாள், கத்தி என்பவற்றுடன் உள்நுழைந்த 5பேர் கொண்ட கொள்ளையர்கள் வீட்டில் உள்ளவர்களை கத்தி முனையில் அச்சுறுத்தி வைத்து தங்க நகைகள், ஒரு தொகை பணம் மற்றும் ஒரு தொகை பொருட்கள் என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இக் கொள்ளைச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் ஏ9 திருமுறிகண்டி என்னும் இடத்தில் உள்ள வீட்டுடன் இணைந்துள்ள செரமான் பல்பொருள் வாணிபத்தில் இடம்பெற்றுள்ளது.

கடையின் உரிமையாளரான பொன்னம்பலம் ஜெகநாதன் வெளிஊர் சென்றநிலையில் வீட்டில் அவரது பிள்ளைகளும் மனைவியும் இருந்துள்ளார்.

இச் சமயம் பார்த்து உள்நுழைந்த கொள்ளையர்கள் வீட்டில் உள்ளவர்கள் கட்டி வைத்து விட்டு, கத்தி முனையில் அச்சுறுத்தி வீட்டில் இருந்த மூன்றரை பவுண் நகைகளை கொள்ளை அடித்துள்ளார்.

ஏனைய நகைகள் எங்கே? தாலிக்கொடி எங்கே? என்று மேலும் கேட்டு மிரட்டியுள்ளனர்.

நகைகள் அடகு வைத்த சிட்டையை காட்டிய பின்பு கொள்ளையர்கள் வீட்டில் இருந்த ஒரு தொகை பணம் மற்றும் கடையில் இருந்த சோடா போத்தல் மற்றும் தண்ணீர் போத்தல்கள் என்பவற்றையும் எடுத்துக் கொண்டு வெளியேறியுள்ளனர்.

இத்திருட்டு சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தடய நிபுணர்கள் கைரேகை அடையாளப் பதிவுகளை வைத்த கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-15)

# வெளிநாட்டு தம்பதிக்கு அபராதம் விதிப்பு

(கொழும்பு)

விசா முடிவடைந்த நிலையில், இலங்கையில் தங்கியிருந்த வெளிநாட்டைச் சேர்ந்த கணவன் மற்றும் மனைவிக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

இவர்கள் கொள்ளுப்பிட்டி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்தனர்.

இருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதவான் திலின கமகே, அபராத தொகையை செலுத்திய பின்னர், சந்தேக நபர்களை நாட்டில் இருந்து வெளியேற்றுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் கொள்ளுப்பிட்டியில் உள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த போது, பொலிஸார் அவர்களை சோதனைக்கு உட்படுத்தினர்.

விசாரணைகளின் போது, இவர்களின் விசா அனுமதி முடிந்து பல மாதங்கள் கடந்திருப்பது தெரிய வந்துள்ளது. இதனையடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (செ-11)

# ஐ.நாவின் விசாரணை ஆச்சரியம்!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு இலங்கை சம்பந்தமாக மேற்கொள்ளும் விசாரணை தொடர்பில் கவனத்தில் கொண்டுள்ள கால கட்டம் ஆச்சரியத்திற்குரியது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு மற்றும நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் கவனத்தில எடுத்து கொண்ட விசாரணைக்கான கர்லகட்டத்தையும் தாண்டி ஐ.நா விசாரணைக்குழு வேறு காலகட்டத்தை தனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)


union assurance **வேலைவாய்ப்பு**

**இலங்கையில் முன்னணி வகிக்கும் கம்பனிகளில் ஒன்றானதும் மற்றும் 26 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள யூனியன் அசூரன்ஸ் கம்பனியின் சுன்னாக பிராந்திய கிளைக்கான பதவி வெற்றிடங்கள்.**

- முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் (A.D.O)
- முகவர் அபிவிருத்தி முகாமையாளர் (A.D.M)

- மேற்படி பதவிக்கான Basic Allowance 20500/- தொடக்கம் 39000/- வரை.
- ORC மற்றும் மேலதிக நன்மைகளும்
- Brilliant Starter Advisar Allowance
- மோட்டார் வாகனக் கடன் 1,500,000/- வரை
- மடிக்கணனி (Laptop), TAP

வீட்டுக் கடன் 1,000,000/- தொடக்கம் 5,000,000/-வரை

**மேற்படி பதவிக்கான தகைமை**

- எந்தவொரு காப்புறுதி நிறுவனத்திலும் குறைந்தது ஆறுமாத காலம் அல்லது அதற்கு மேல் வேலை செய்தவர்கள், செய்து கொண்டிருப்பவர்கள் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றலாம்.
- சந்தைப்படுத்தல் துறையில் (Marketing) முன்அனுபவம் இருப்பவர்கள் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றலாம்.
- காப்புறுதி ஆலோசகர் (I.A) மேற்படி பதவிக்கான தகைமை க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.

**குறிப்பு:** ஏற்கெனவே வேறு தொழிற்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் தமது வருமானத்தை மேம்படுத்த எமது நிறுவனத்தில் பகுதிநேரமாக வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும். பல்கலைக்கழக படிப்பை முடித்து வேலைக்காக காத்திருப்பவர்கள்தமது தொழில் தகைமையினைப் பெற்றுக் கொள்வதோடு வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

**காலம்:** வெள்ளிக்கிழமை 15.08.2014
**நேரம்:** முற்பகல் 10 மணி
**இடம்:** யூனியன் அசூரன்ஸ்
இல.160, 1/6 K.K.S வீதி,
சுன்னாகம். (சம்பத் வங்கிக்கு மேல்)

தொடர்புக்கு - 021-2242097 (சி-8163)



SPEED
PURIFIED DRINKING WATER




**சுத்தமான குடி தண்ணீர்**
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

**ஸ்ரீமுருகன்**
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(சி-8158)



**பணியாளர் தேவை**



- கணனியில் விரைவாக ரைப்பிங் செய்யக்கூடியவர்கள் - 1 (பெண்)
- புத்தகம் கட்டுனர் - 1 (பெண்) முன்னனுபவம் தேவையில்லை
- வெளிக்கள பணியாளர் - 1 (இருபாலாரும்) (மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்)

17.08.2014 ஞாயிற்றுக்கிழமை 9-12 வரை (Bio Data) வுடன் நேரில் வரவும்.

**சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்**
பலாலி வீதி, கோண்டாவில்.
(7283)



*ஸ்ரீ அம்மா பகவான் சரணம்*

**ஸ்ரீ கல்கி பகவதி பத்மாவதி தேவியின் 61-வது ஜென்மதினம் 15.08.2014**



அன்பர்களே!
ஸ்ரீ பகவதி பத்மாவதி தேவியின் 61-வது ஜென்மதின வைபவம் பிரதி சத்சங்கங்களிலும் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகிறது. பக்தர்கள் சத்சங்கங்களில் இணைந்து ஸ்ரீ பத்மாவதி தேவியின் அருளாசி பெற்று ஆனந்தப் பெருவாழ்வு பெறும் வண்ணம் அறியத்தருகின்றோம்.

*லோகா சமஸ்தா சுகினோ பவந்து*

ஸ்ரீ கல்கி பகவான் சத்சங்க ஒன்றியம்
யாழ். மாவட்டம்.
(7297)



**விற்பனையாளர் தேவை**

யாழ்.நகரில் உள்ள பிடவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.


குறிப்பு - யாழ் குடாநாட்டுக்குள் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும். (சி-8191)

**தொடர்புக்கு - 0775556904**



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532


# கண்ணீர் அஞ்சலி



அமரர் **நடேசு வரதராசா**
*(ஓய்வு பெற்ற தபால் ஊழியர்)*

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) சிரேஷ்ட ஆங்கில ஆசிரியர் திரு.வ.முரளீகரன் அவர்களது தந்தையார் **அமரர் நடேசு வரதராசா** (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) அவர்கள் 12.08.2014 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)** (சி-8190) **ஆசிரியர் நலன்புரிக் கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சட்டங்களை மீறியுள்ளது அரசாங்கம்

## ஐ.நா.குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாகிஸ்தான் அகதிகளை திருப்பியனுப்பியதன் மூலம் சர்வதேச சட்டங்களை இலங்கை அரசாங்கம் மீறியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான நிறுவனம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த அகதிகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் உரிய விசாரணைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்று ஐக்கிய நாடுகள் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அடைக்கலம் பெற்ற அகதிகளை பலாத்காரமாக திருப்பியனுப்புவதில்லை என்று இலங்கை அரசாங்கம் சர்வதேச சட்டத்தின்படி உடன்பட்டுள்ளது.

எனினும் அதனை மீறி பாகிஸ்தானிய அகதிகளை அது திருப்பியனுப்பியுள்ளமை தெளிவான உரிமை மீறலாகும் என்று ஐக்கிய நாடுகளின் அகதிகள் நிறுவனம் குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கை இந்த ஓகஸ்ட் முதலாம் திகதியில் இருந்து 88 பாகிஸ்தானிய அகதிகளை திருப்பியனுப்பியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் அகதி அமைப்பின் எட்வேட்ஸ் தெரிவித்தார்.

குறித்த அகதிகள் குடும்பங்களாக தடுத்து வைக்கப்பட்டு பின்னர் நாடு கடத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 11 பெண்களும் 8 சிறுவர்களும் அடங்கியிருந்தனர்.


இந்தநிலையில் தொடர்ந்தும் குறித்த அகதிகள் நாடு கடத்தப்படுவதை கண்டிப்பதாக எட்வேட் தெரிவித்தார்.

தமக்கு பாதுகாப்பில்லை என்று கூறி நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்கள் பாகிஸ்தானில் இருந்து வந்து .இலங்கையில் அடைக்கலம் கோரியிருந்தனர்.

இதேவேளை இலங்கையின் சிறைகளில் 71 ஆப்கானிஸ்தானியர்களும் இரண்டு ஈரானியர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக

# அமெரிக்க இராஜாங்க செயலரை இலங்கைக்கு வருமாறு அழைப்பு

## ஜீ.எல்.பீரிஸ் விடுத்தார்




கடந்த 30 ஆண்டு கால யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் நாட்டில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் நாடு அடைந்துள்ள அபிவிருத்திகளை நேரில் பார்வையிடுமாறு அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரிக்கு, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

மியன்மாரின் நேய் பை தாவோவில் அண்மையில் நடைபெற்ற ஆசியான் 21 மாநாட்டின் போது, வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியை சந்தித்த போது இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.


“இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளுமாறும், இங்குள்ள நிலவரத்தை நேரில் பார்வையிடுமாறும், அமெரிக்க வெளிவிவகார செயலர் ஜோன் கெரிக்கு அழைப்பு விடுத்துள்ளேன்” “இலங்கைக்கு வந்து யுத்தம் முடிவடைந்த 5 வருட காலப்பகுதியில் நாம் என்ன சாதித்துள்ளோம் என்பதை பார்க்குமாறு கேட்டேன்” என வெளிவிவகார



அமைச்சர் ஜி எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில் அவர் இந்த அழைப்பினை விடுத்துள்ளார். (6)

# கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.எல்.எம்.ஹஸன் காலமானார்



கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ்.எல.எம்.ஹஸன் மௌலவி (வயது 64) நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு சுகயீனம்காரணமாக கண்டியில் காலமானார்.

கடந்த பல மாதங்களாக சுகயீன முற்றிருந்த இவர், இந்தியாவிற்குச் சென்று சிகிச்சை பெற்று கடந்த வெள்ளிக்கிழமை நாடு திரும்பியிருந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு அவர் காலமானார்.

சிறந்த மார்க்க அறிஞரும் எழுத்தாளரும் அரசியல்வாதியும் சமூக சேவையாளருமான இவர் 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற கிண்ணியா பிரதேச சபை தேர்தலில் சுயேட்சையாக போட்டியிட்டு அரசியலுககுள் பிரவேசித்தார்.

1995 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டார்.

பின்னர் 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பில் திருகோண மலை மாவட்டத்தில் போட்டியிட்டு மாகாண சபை உறுப்பினராகத் வெற்றிபெற்று அந்த சபையின் சபை முதல்வராகவும் தெரிவு செய்யப்பட்டார்.2012 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் திரு கோணமலை மாவட்டத்தில்போட்டி யிட்டு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். (6)

## அமெரிக்காவின் சீ.ஐ.ஏ.உள்ளிட்ட

# வெளிநாட்டு உளவுப்பிரிவுகள் இலங்கையில் செயற்படுகின்றன!

(கொழும்பு)

வெளிநாட்டு உளவுப் பிரிவுகள் இலங்கையில் செயற்பட்டு வருவதாக தேசிய புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் சீ.ஐ.ஏ. உள்ளிட்ட பல்வேறு வெளிநாட்டு உளவுப் பிரிவுகள் இலங்கையில் இயங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளனர்.

அண்மையில் மருதானையில் நடைபெற்ற யுத்தத்தில் உயிரிழந்த மற்றும் காணாமற் போனவர்களின் பெற்றோர்களுக்கும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் இடையிலான சந்திப்பின் போதும் வெளிநாட்டு உளவுப் பிரிவினர் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊடகவியலாளர்கள் என்ற போர்வையில் வெளிநாட்டு உளவாளிகள் குறித்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்திப்பில் பங்கேற்ற வர்கள் மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாவீரர் குடும்ப உறுப்பினர்கள் செய்மதி தொழில்நுட்ப தொடர்பாடல் சாதனங்களின் ஊடாக ஜெனீவாவுடன் தொடர்பு கொண்டு, அனுபவங்களையும் முறைப்பாடுகளையும் பதிவு செய்து கொண்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை அமெரிக்கத் தூதரக உயர் அதிகாரியொருவர் மேற்கொண்டிருந்தார் என தேசிய புலனாய்வுப் பிரிவினர் குற்றம் சுமத்தியுள்ளனர். (6)

## இன்றைய இராசி பலன்

14.08.2014

(ஆடி 29, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 3.51 மணிவரை
உத்தரட்டாதி மாலை 6.35 மணிவரை
இராகுகாலம் 1.35- 3.05 மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை
சங்கடகர கணபதி விரதம்

வளவன்

**மீனம்** — திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றங்களைச் செய்யும் சூழ்நிலை உருவாகும், குடும்பத்தினரிடம் முன்கோபத்தைக் குறைப்பது நல்லது, போசன சுகமுண்டு.

**மேடம்** — கணபதியை வழிபட்டு காரியம் தொடங்கவேண்டிய நாள், தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை அமையலாம்.

**இடபம்** — செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய பொருட்சேர்க்கைக்கு அத்திவாரமிடுவீர்கள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், உறவினர் வருகையுண்டு.

**மிதுனம்** — மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்** — கோரிக்கைகள் நிறைவேறும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** — மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், புதிய திட்டங்கள் கைகூடும்.

**மகரம்** — பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டுவரலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**சிம்மம்** — வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள்.

**தனுசு** — செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், நேர்மையும் நாணயமும் கொண்ட நண்பர்களால் நன்மைகள் நடைபெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்** — தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறு துணைபுரியும், வியாபார விருத்தியுண்டு, திட்டமிட்ட காரியங்களில் புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**துலாம்** — நன்மைகள் நடைபெறும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், உற்சாகமான நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி** — குடும்பத்தினருடன் குதூகலப் பயணங்கள் ஏற்படலாம், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்மமான முறையில் குடும்பஸ்தர் மரணம்

குடும்பஸ்தர் ஒருவர் வீட்டில் உறங்கிய நிலையில் மர்மமான முறையில் மூக்கிலும், வாயிலும் இரத்தம் வடிந்த நிலையில் உயிரிழந்த சம்பவம் ஒன்று வடமராட்சி கரணவாய்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் கரணவாய் ஜே/350 கிராம சேவையாளர் பிரிவில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான எஸ்.இராமையா (வயது-30) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு தூங்கச் சென்றதாவும் நேற்று புதன்கிழமை இறந்து கிடந்ததாகவும் உயிரிழந்தவரின் மனைவியால் வைத்திசாலையில் தெரிவிக்கப்பட்டது.

தற்போது சடலம் மந்திகை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப் பட்டுள்ளது. (6-60)

# வெளிவாரி பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு விழா 29 ஆம் திகதி

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழக தொடர் தொலைக் கல்வி நிலைய உதவிப் பதிவாளர் எம்.எஸ்.ரணசிங்க அறிவித்துள்ளார்.

இப்பட்டமளிப்பு விழாவின் போது கடந்த அண்டு மார்ச் மாதம் வியாபார நிர்வாகமாணி (வெளிவாரி) பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கும் ஏப்ரல் மாதம் கலைமாணி பட்டப்படிப்பு இறுதிப் பரீட்சைக்கும் (வெளிவாரி) தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன என அவர் மேலும் அறிவித்துள்ளார். (6-19)

நன்றி-மிரர்




# வைத்தியசாலை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம்

## நோயாளர்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

சம்பள உயர்வு, தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்கல் போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து அரச வைத்தியசாலை ஊழியர்கள் நேற்றையதினம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இலங்கை சுவ் சேவை சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஏனைய சுகாதார அமைப்புக்களும் ஆதரவு வழங்கியிருந்தன.

நாடளாவிய ரீதியில் நடைபெற்ற இவ்வேலை நிறுத்தப் போராட்டம் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் நடைபெற்றிருந்தது.

03/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பி.எல். மற்றும் எம்.என்.பிரிவுகளைச் சேர்ந்த வைத்தியசாலையின் ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவை இதுவரை வழங்கப்படவில்லை.

தற்காலிக ஊழியர்களுக்கான நியமனங்கள் இதுவரையிலும் வழங்கப்பட்டு அரச சேவைக்குள் உள்வாங்கப்படவில்லை.

03/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சப்ரகமுவ மாகாண சுகாதார ஊழியர்களுக்கும் ஆயுள் வேத திணைக்களத்தின் ஊழியர்களுக்கும் பகிரப்பட்ட போதிலும் பி.எல் பிரிவினருக்கு உரித்தான 15 வருட நிலுவையான 50 ஆயிரம் ரூபா இதுவரை வழங்கப்படவில்லை.

இக்கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரியே அரச வைத்தியசாலை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதாக இலங்கை சுவசேவை சங்கம் அறிவித்துள்ளது.

அரச வைத்தியசாலை ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பினால் யாழ்.மாவட்டத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் பல இடையூறுகள் ஏற்பட்டிருந்தன.

வைத்தியசாலைகளின் நேர ஒழுங்கமைப்பு மற்றும் நிர்வாக ஒழுங்கமைப்புக்களில் நேற்றைய தினம் குளறுபடிகள் ஏற்பட்டிருந்ததோடு நோயாளர்களும் பாதிப்பை எதிர் நோக்கியிருந்தனர்.

மேலும் தமது கோரிக்கைகள் எதிர்வரும் நாட்களில் நிறைவேற்றப்படாவிட்டால் சுகாதார அமைச்சு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட போவதாக இலங்கை சுவ சேவை சங்கத்தின் செயலாளர் காமினி குமாரசிங்க அறிவித்துள்ளார்.(6-4)

# பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு 7,500 மில்லியன்

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் கடந்த 2010ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு மே மாதம் வரையில் சுமார் 7 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா பெறுமதியிலான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதனடிப்படையில், சமுர்த்தி வேலைத்திட்டத்திற்கு 4 ஆயிரத்து 14.25 மில்லியன் ரூபாவும், திவிநெகும திட்டத்திற்கு 49.24 மில்லியன் ரூபாவும், கமநெகும திட்டத்திற்கு 68.97 மில்லியன் ரூபாவும், வட, கிழக்கு சமூக விடுதிகள் அபிவிருத்தித் திட்டத்திற்கு 230.85 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன.

வடக்கின் துரித மீட்புத் திட்டத்திற்கு 1650.49 மில்லியன் ரூபாவும், உலக உணவுத்திட்டத்திற்கு 33.69 மில்லியன் ரூபாவும், மஹிந்த சிந்தனையின் கீழ் முன்பள்ளிகள் அமைத்தல் திட்டத்திற்கு 81 மில்லியன் ரூபாவும், மீள் எழுச்சித் திட்டத்திற்கு 628.04 மில்லியன் ரூபாவும், பரவலாக்கப்பட்ட மூலதன வரவு செலவுத் திட்டத்திற்கு 178.16 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டிருந்தது.

வடக்கின் வசந்தம் திட்டத்திற்கு 395 மில்லியன் ரூபா, போரால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திற்கான துரித திட்டத்திற்கு 2088.56 மில்லியன் ரூபாவும், வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 1755.45 மில்லியன் ரூபாவும் என செலவு செய்யப்பட்டுள்ளதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (6)




# குடிநீர் எடுக்கும் நிலையங்களை பாதுகாத்துக் கொள்ளுமாறு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வரட்சி நிலை காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர் மற்றும் நீர்த்தட்டுப்பாட்டுப் பிரச்சினைகள் தொடர்பில் நேற்றையதினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் உயர் மட்ட கலந்துரையாடலொன்று யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், மாவட்ட திட்டப் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், பிரதேச செயலர்கள், உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள், பிரதேச மக்கள் பிரதிநிதிகள், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின்போது, தீவகம் உட்பட அனைத்து பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள குடிநீர் மற்றும் நீர் தட்டுப்பாடு தொடர்பில் கலந்து கொண்ட அனைத்துத் தரப்பினரிடமும் கருத்துக்கள் அறியப்பட்டன.

வரட்சி நிவாரண நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் நீர் பிரச்சினையை தீர்த்துக். கொள்ளும் வகையில் உரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அனைத்துத் தரப்பினரும் தயாராக வேண்டியதன் அவசியத்தையும் மேலும் நீர் எடுக்கும் நிலைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டிய அமைச்சர் விசேட அமைச்சரவைப் பத்திரத்தினூடாக மேலும் நிதியொதுக்கீடுகளைப் பெறவும் தண்ணீர்த் தாங்கிகள் மற்றும் பவுசர்களை அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் பிரதேச செயலகங்களுக்கும் தேவைக்கேற்ப வழங்குவதற்கும் நடவடிக்கையினை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

தற்போதைய வரட்சி நிலை நீடிக்குமானால் அதற்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் உரிய ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பிலும் அமைச்சர் ஆலோசனைகளை வழங்கினார்..

இதேவேளை சுன்னாகப் பகுதியில் கழிவு எண்ணெய் நீரில் கலந்து வருகின்றமை தொடர்பிலும், வரட்சிக் காலத்திற்குள் உவர் நீர் கலக்காத வகையில் குளங்களை ஆழப்படுத்துதல் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

வரட்சி நிலை காரணமாக ஏற்பட்டுள்ள உடனடி நெருக்கடி நிலையை தவிர்ப்பதற்கு பிரதேச செயலகங்களும் உள்ளூராட்சி சபைகளும் இணைந்து செயற்பட வேண்டிய அவசியத்தையும் அமைச்சர் இக்கலந்துரையாடலில் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (6)



கொமர்ஷல் வங்கி சிறுசேமிப்பு கணக்கில் (அருணலு) சேமிப்பை பேணி வருகின்றவர்களும் கடந்த ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு 75 ஆயிரம் ரூபா பணப் பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கொமர்ஷல் வங்கி அச்சுவேலி கிளை வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது கொமர்ஷல் வங்கி வடமாகாண பிராந்திய முகாமையாளர் எஸ்.பி.ரஜீவன் உள்ளிட்ட விருந்தினர்கள் மாணவர்களுடன் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம்.

# பிரேசில் வாள்களை கைப்பற்றும் விசேட நடவடிக்கை ஆரம்பமானது

## யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணத்தில் பிரேசில் நாட்டு தயாரிப்பு வாள்களை கைப்பற்றுவதற்கான விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என யாழ்.காங்கேசன்துறை பொலிஸ்பிரிவு உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ரணவீர தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் கடந்த முறை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ்.மாவட்டத்தில் நடைபெறும் வாள்வெட்டுச் சம்பவங்கள் இருவாரங்களில் கட்டுப்படுத்தப்படும் என உறுதியளித்திருந்தார். இது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பிரேசில் நாட்டிலிருந்து சட்டவிரோதமாக யாழ்ப்பாணத்திற்கு பிரேசில் நாட்டில் தயாரிக்கப்பட்ட வாள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட வாள்கள் இங்கு கொலைகள் , கொள்ளைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பிரேசில் நாட்டு தயாரிப்பு வாள்கள் இதுவரை யாழ்.மாவட்டத்தில் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் பல வாள்கள் யாழில் தற்போதும் சமூகவிரோத நடவடிக்கைகளுக்கு பாவிக்கப்படுகின்றன. கொடூரக் கொலைகளுக்கும் இவையே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் வாள்களை இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள் தொடர்பில் புலனாய்வு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழிலுள்ள பெரும்பாலான இடங்களில் இவ்வாறான வாள் வெட்டுக் குழுக்களின் விபரங்கள் இரகசியமான முறையில் திரட்டப்பட ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் சிலநாட்களில் யாழில் வாள்வெட்டுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக நடவடிக்கையை பொலிஸார் ஆரம்பித்துள்ளதாக எஸ்.எஸ். பி.ரணவீர தெரிவித்தார்.

மேலும் பொதுமக்களும் தங்களுக்கு தெரிந்த தகவல்களை பொலிஸாருக்கு வழங்கி உதவுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (6-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்-இரணைமடு குடிநீர் விநியோகத்திட்டம்

# ஜனாதிபதி விசேட திட்டத்தை வகுத்து செயற்பட வேண்டும்





(யாழ்ப்பாணம்)

இரணைமடு- யாழ்ப்பாணம் குடிநீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு மாகாண சபை அரசியல் காரணங்களைக் கூறி இழுத்தடிப்புச் செய்து கொண்டிருக்கின்றது.

ஆனால் இரணைமடுக் குளத்தை புனரமைப்புச் செய்து, நீர்க் கொள்ளளவை அதிகரித்து வடமாகாணத்தின் பல பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவது காலத்தின் அவசியமாகும். வடக்கு மாகாண சபையைப் பொறுப்பேற்றிருப்பவர்கள் மேற்படி திட்டத்தை செயற்படுத்தவிரும்பாமலும், செயற்படுத்தத் தெரியாமலும் குடிநீர் விநியோகத் திட்டத்தை இழுத்தடிப்புச் செய்கின்றனர்.

எனவே மேற்படித் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி என்ற வகையில் விசேட திட்டமொன்றை வகுத்து வடக்கு மக்களின் குடிநீர்ப்பிரச்சினைக்கு நிலையான தீர்வைக் காணவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்றைய தினம் ஜனாதிபதி தலைமை யில் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் நேரடியாக கோரிக்கை விடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் அமைச்சர் தலைமையில் நடைபெற்ற யாழ். குடாநாட்டின் வரட்சி மற்றும் குடிநீர் தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது தொடர்பாக ஆராயும் விசேட கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபையை பொறுப்பேற்றிருக்கும் கூட்டமைப்பினர் இரணைமடு- யாழ்ப்பாணம குடிநீர் விநியோகத் திட்டத்தில் அக்கறை செலுத்தாமல் இந்த நிலை தொடருமாக இருந்தால் இரணைமடு- யாழ்ப்பாணம் குடிநீர் விநியோகத்திட்டத்துக்கான நிதி திரும்பிவிடக்கூடிய ஆபத்தும் ஏற்படக் கூடும்.

வழமையைவிடவும் இம்முறை வடமாகாணம் பாரிய வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளது. யாழ்.குடாநாடு மட்டுமல்லாது, கிளிநொச்சியிலும் பளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி போன்ற பகுதிகளும் வரட்சி குடிநீர் தட்டுப்பாட்டுக்கு முகம்கொடுத்துள்ளது இவ்விடயத்தில் வடக்கு மாகாண சபையினர் எவ்விதமான பங்களிப்பைச் செய்துள்ளனர் என்றும் வட மாகாண செயலாளரிடம் அமைச்சர் கேள்வி எழுப்பினார்.

எவ்வாறெனினும் மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள வரட்சி நெருக்கடிக்கு தீர்வு காண்கின்ற நடவடிக்கையில் பிரதேச செயலாளர்களும், பிரதேச சபைச் செயலாளர்களும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இந்த விசேட கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட திட்ட பணிப்பாளர், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகள், மாகாண ஆணையாளர் கமநல சேவைகள் அமைச்சு, பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைச் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (6)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 2
கி.பா: 26 ¼ உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Computer Systems Engineering / முகாமையாளர் (UK – PR)
தொ.இ: B/1676

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 59 செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L / தற்காலிக அரச ஊழியர், துடுப்பாட்ட பயிற்சியாளர்
தொ.இ: B/1678

பிறப்பு: 1975 இந்து
நட்ச்சத்திரம்: பூரம் 2
கி.பா: 11 ¼ செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்
தொ.இ: B/1679

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரோகினி 4
கி.பா: 31 ¾ செவ் 8 இல்
தகைமை/தொழில்: A/L / தனியார் வேலை (கனடா Not PR)
எதிர்பார்ப்பு: கனடா PR உள்ளவர் மட்டும்
தொ.இ: B/1682

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 39 ½
உயரம்: 4'10"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/2512

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா: 23 ½ சூரி செவ் 5 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/2517

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: பூசம் 1
கி.பா: 56 ¼
உயரம்: 150 cm
தகைமை/தொழில்: கலைப் பட்டதாரி/ஆசிரியர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/2525

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா: 21 ½
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: B.Com, HNDA / நிகழ்ச்சித்திட்ட, உதவியாளர்
தொ.இ: G/2527

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)


# இணைந்து செயற்படுமாறு இலங்கைக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

அரசாங்கமும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் இணைந்து செயற்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது,

அரசாங்கத்திற்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கும் இடையிலான கூட்டுறவை வலுப்படுத்திக் கொள்ள தேவையான ஒழுங்குகளை செய்ய விரும்புவதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் அறிவித்துள்ளது.

இலங்கை தேசிய மனித அபிவி ருத்தி அறிக்கை நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க நினைவு கேட்போர் கூடத்தில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்கத்திற்கும் ஏனைய தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக் கும் இடையில் ஓர் பிணைப்பை ஏற்படுத்த இந்த அறிக்கை வழியமைக்கும் என நம்புவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி சுபினாய் நெண்டி தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை எதிர்கால கொள்கை வகுப்பு மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகளுக்கு வழியமைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (6)


सत्यमेव जयते

**CONSULATE GENERAL OF INDIA**
**JAFFNA**

**INVITATION FOR INDEPENDENCE DAY IN JAFFNA**

ON THE OCCASION OF THE 68TH INDEPENDENCE DAY OF INDIA, A FLAG HOISTING CEREMONY WILL BE HELD ON FRIDAY, 15TH AUGUST , 2014 AT 0900 AM AT 14, MARUTHADY LANE, NALLUR, JAFFNA.

ALL INDIAN NATIONALS ARE CORDIALLY INVITED TO ATTEND.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை சீமெந்து ஆலையை உடைத்து தெற்கிற்கு இரும்பு ஏற்றும் நடவடிக்கை தீவிரம்

## இராணுவமும் துணைபோவதாக சஜீவன் குற்றச்சாட்டு

காங்கேசன்துறைசீமெந்து ஆலை இராணுவத்தின் துணையுடன் தென்பகுதியினைச் சேர்ந்தோரால் உடைக்கப்பட்டு கொழும்பிற்கு கடத்தப்படுவதாக வலி.வடக்கு உபதவிசாளர் எஸ்.சஜீவன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இச் சட்டவிரோத செயற்பாடு குறித்து வடக்கு மாகாணசபையும், வடக்கு மாகாண முதலமைச்சரும் விரைந்து நடவடிக்கையெடுக்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதும் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுமான வலி.வடக்கிலுள்ள 6 ஆயிரத்து 55 ஏக்கர் நிலப்பரப்பில் இராணுவம் தான் நினைத்தவற்றை செய்து வருகின்றது.

இப் பகுதியிலுள்ள நடேஸ்வராக் கல்லூரி, கோயில்கள் என்பவற்றினை அடையாளம் காண முடியாதவாறு தரைமட்டமாக உடைத்தெறிந்ததோடு பலாலி ஆசிரியர் கலாசாலையினையும் விடுவிக்காமல் தொடர்ந்தும் நிலைகொண்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் கடந்த சில நாட்களாக காங்கேசன்துறை சீமெந்து ஆலை இராணுவத்தின் துணையுடன் தென்பகுதியினைச் சேர்ந்தோரினால் உடைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு உடைக்கப்படும் பொருட்கள், தளபாடங்கள், உபகரணங்களின் பாகங்கள் என்பன தென்பகுதிக்கு கடத்தப்பட்டு வருகின்றன.

இங்குள்ள பெருமளவிலான இரும்புப் பொருட்களும் இரவோடு இரவாக இராணுவத்தின் துணையுடன் தென்பகுதிக்கு கடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தொடர்ந்து சென்றால் வலி.வடக்கில் உள்ள எதுவும் மிஞ்சப்போவதில்லை.

பொதுமக்களின் உடைமைகள் எதனையும் இராணுவம் அங்கு விட்டு வைக்கப்போவதில்லை.

ஆகவே இது விடயத்தில் வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னால் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் விரைந்து நடவடிக்கையெடுக்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

காங்கேசன்துறை சீமெந்து ஆலை இடிக்கப்படுவது குறித்தும் உயர்பாதுகாப்பு வலயத்தில் இயற்கை வளங்கள் இராணுவத்தினரால் சூறையாடப்படுவது குறித்தும் தனக்கு பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்ற வண்ணமுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை வலி.வடக்கில் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்ட 6 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பிற்கு சொந்தமான காணி உரிமையாளர்களினால் உச்ச நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# யுத்தத்திற்கு இஸ்ரேல் செய்த உதவிகளை இலங்கை ஒருபோதும் மறந்துவிட முடியாது

## அம்பலமாகும் உண்மை

இலங்கைக்கு இஸ்ரேல் யுத்த காலத்தில் செய்த உதவிகளை மறக்க காஸா மீதான இஸ்ரேலின் நடவடிக்கைகளை கண்டித்து கொழும்பில் முஸ்லிம் அமைப்புகள் நடத்தவுள்ள ஆர்ப்பாட்ட பேரணிக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ள பொதுபல சேனா அதற்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்றை நடத்தப் போவதாக தெரிவித்துள்ளதுடன் இலங்கைக்கு இஸ்ரேல யுத்த காலத்தில் செய்த உதவிகளை மறக்க முடியாது என குறிப்பிட்டுள்ளது.

இலங்கை தவ்ஹீத் ஜமாத் அமைப்பின் ஆர்ப்பாட்டத்தினை அரசாங்கம் தடைசெய்ய தவறிவிட்டது. அந்த அமைப்பு தனது ஆதரவை அதிகரிக்கவே இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. இவ்வாறான அமைப்புகளால் உருவாகக் கூடிய ஆபத்தை அரசாங்கம் உணராத பட்சத்தில் பொதுபல சேனா நடவடிக்கை எடுக்க தயங்காது என ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

காஸா நிலவரத்தை அவர்கள் தங்களது ஆதரவை அதிகரிப்பதற்காக பயன்படுத்த அனுமதிக்க முடியாது, காஸா நிலவரத்திற்காக இஸ்ரேலை பொறுப்பாளியாக்க வேண்டுமென கூறுபவர்கள் ஏன் சிரியா விடயத்தில் அமைதியாகவுள்ளனர் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (6)

# தடுப்பூசி ஏற்றப்படும்

யாழ்.மாநகர சபை எல்லைக் குட்பட்ட குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாகயாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

மேலும் வளர்ப்பு நாய்களுக்குரிய உரிமைக் கட்டணமாக 20 ரூபா அறவிடப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை தண்ணீர் தாங்கி வீதியிலும், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை முன்பாகவும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை 2 ஆம் குறுக்குத்தெருகுருநகர் அன்னை வேளாங்கண்ணி அருகாமையிலும் முற்பகல் 11 மணியிலிருந்து பிற்பகல் 1 மணிவரை குருநகர் சனசமூக நிலையம் முன்பாகவும் வைத்து தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (4-6)


# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 250 | 350 | 240 |
| தக்காளி | 60 | 60 | 80 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 110 | 80 | 120 |
| பூசணி | 25 | 40 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 100 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 50 | 50-70 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 100 |
| பயற்றங்காய் | 60 | 100 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 60 | 60 | 70 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 20 | 60 | 60 |
| போஞ்சி | 130 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 50 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 70 | 100 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 80 | 80 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 105

Search for people, places and things Nagendram Home

டொறின் மன்மதநாயகம்




தனபாலன் விசாகன்




சச்சி சங்கீத்





தனுஷன் மெண்டிஸ்




சிவசிதம்பரம் மகிழ்நன் சிவநாசிவ




கிருஷ்ணசாமி சங்கீர்த்தனன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பற்றிய ஒரு விளக்கப்பார்வை

ஒரு நாட்டின் பொதுக் கல்வி அமைப்பும் காலத் திட்ட வடிவமைப்பும் பிரயோகச் செயற்பாடுகளும் மாணவர்களின் எதிர்கால வளமான, தரமான வாழ்க்கைக்கு வளமூட்டுபவையாக விளங்க வேண்டும். அதாவது கலைத் திட்டம் மாணவர்கள் வளர்ந்தோராக முதிர்ச்சியடைவதற்கு ஆற்றவேண்டிய செயற்பாடுகளை கொண்டதாக இருக்க வேண்டும். அதாவது அடைய வேண்டிய அனுபவங்களைக் கொண்ட வழித்தடம் என பொப்பிற் (1918) குறிப்பிடுகிறார்.

கால மாற்றங்களுக்கும் உலகளாவிய போக்குகளுக்கும் ஏற்ப நாடுகளில் கலைத் திட்ட மாற்றங்கள் காலத்திற்குக் காலம் ஏற்படுத்தப்படுகின்றன. ஏறக்குறைய 10 வருடங்களுக்கு ஒருமுறை கல்வி மறுசீரமைப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கலைத் திட்ட உள்ளடக்கத்தில் பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தேசிய கல்வி இலக்குகள், நியமங்கள், விழுமியங்கள் கலைத்திட்டத்தில் முக்கியம் பெறுகின்றன.

இந்தவகையில் இலங்கையில் ஆரம்பக்கல்வி கலைத் திட்டத்திலும் காலத்திற்குக் காலம் மாற்றம் ஏற்பட்டு வந்தது. இதில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையும் அதன் கட்டமைப்புகளும் மாற்றம் பெற்று வந்துள்ளது.

1.1940 களில் மத்திய பாடசாலைகளில் பொருளாதார நிலையில் பின்தங்கிய சமூக மாணவர்கள் அனுமதி பெற்று கல்வி கற்க புலமைப்பரிசில்கள் வழங்கும் நோக்கத்துடன் இப்பரீட்சை அறிமுகம் செய்யப்பட்டது. ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் 15 புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

☞ விடுதி வசதியுடன் ஆங்கில மொழியில் இடைநிலைக் கல்வி வழங்கப்பட்டது.

☞ விவேகம், எண்கணிதம், தாய் மொழி என்பவற்றை பரீட்சிப்பதாக இப்பரீட்சை அமைந்திருந்தது.

2.1968 இல் இப்பரீட்சைக்கு பதிலாக ஏழாம் வகுப்பில் தேசிய புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.



## கல்வித் தரிசனம்

ஆண்டுக்கு 3000/= வருமானமுடைய பெற்றோரின் பிள்ளைக்கு மாதம் 30/= ரூபா புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டது.

3.1973 இல் மீளவும் 5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை அறிமுகம் செய்யப்பட்டது.

சித்திபெற்ற மாணவர்கள் மத்திய கல்லூரிகளில் (Central College) மட்டுமன்றி வேறு பிரபல பாடசாலைகளிலும் அனுமதிக்கப்பட்டனர்.

4.1992இல் மொழிப்பரீட்சை, கணிதப்பரீட்சை வினாப்பத்திரங்களில் 3,4,5ஆம் தர விடயங்கள் உள்ளடக்கப்பட்டன.

☞ புலமைப்பரிசில் தொகையும் அதிகரிக்கப்பட்டது.


☞ பிரபல்யமான பாடசாலைகளில் அனுமதி பெற இப்பரீட்சை உதவியது

☞ ஒரு தேசிய பாடசாலையின் அனுமதி பெறவும் தேசிய பாடசாலைக்கு மாறிச் செல்லவும் இது உதவியது.

5.காலப்போக்கில் உளச்சார்புப் பரீட்சை கைவிடப்பட்டது. சிங்களம்/ தமிழ், கணிதம் ஆகிய இரு பாடங்களுக்கான தரம் 4,5 பாடத்திட்டத்தின் அடிப்படையில் பரீட்சை அமைந்தது.

6.1995 முதல் உளச்சார்புச் சோதனை- வினாத்தாள் 1-45 நிமிடம் தரம் 1-5 வரை கற்பிக்கப்பட்ட சகல பாடங்களின் விடயத்தை உள்ளடக்கிய மற்றொரு வினாத்தாளாக (வினாத்தாள் II) 1 மணி 15 நிமிடம் அது அமைந்தது.

காலப்போக்கில் இது ஒரு போட்டிப்பரீட்சையாக மாற்றமடைந்துள்ளது. உண்மையில் இது இரண்டு பிரதான நோக்கங்களைக் கொண்டதாக இன்று விளங்குகிறது.



1.கல்விக்கான ஒரு ஊக்குவிப்பாக குறித்த விதமான மாணவர்களுக்கு மாவட்ட அடிப்படையில் உதவித் தொகை வழங்குவது.

2.தேசிய மட்டத்தில் பல்வேறு சிறப்புக்களையும் வளங்களையும் உள்ளடக்கிய பிரபல்ய பாடசாலைகளில் கல்வி கற்பதற்குரிய வாய்ப்புக்களை வழங்குவது

இன்று இப்பரீட்சை நாடு தழுவிய அளவில் நடத்தப்படுகிறது. வருடாந்தம் ஏறக்குறைய 3 இலட்சத்து 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள்.

இப்பரீட்சை இன்று பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

☞ பாடசாலை மட்டத்தில் தற்போது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

☞ மிகப்பெரிய போட்டிப் பரீட்சையாக மாறியுள்ளது.

☞ தனியார் கல்வி நிறுவனங்கள் தமது வருமானத்தை உயர்த்திக் கொள்வதற்கான ஒரு வழி முறையாக இது மாறியுள்ளது.

☞ பத்திரிகை நிறுவனங்கள் தமது பத்திரிகை விற்பனையை அதிகரிப்பதற்கான ஒரு உபாயமாக பயிற்சி வினாத்தாள்களை வெளியிடுகின்றன.

☞ வங்கிகள் தமது வாடிக்கையாளர்களை அதிகரிப்பதற்காக சித்தியடைந்த மாணவருக்கு பரிசில் வழங்குதல் மற்றும் பரீட்சைக்கு ஆதரவு வழங்குதல் போன்ற திட்டங்களைச் செயற்படுத்துகின்றனர்.

☞ சமூக கட்டமைப்புக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் இப்பரீட்சைக்கென போதுமானளவிற்கு கருத்தரங்குகளை ஏற்பாடு செய்துள்ளன.

☞ மாதிரி வினாத்தாள்கள், வழிகாட்டல் புத்தகங்கள் பெருமெடுப்பில் வெளியிடப்படுவதுடன் பயிற்சிப் பரீட்சைகள், விசேட கருத்தரங்குகள் போன்றவையும் இடம்பெறுகின்றன.

☞ மாணவர்கள் கற்கிறார்களோ இல்லையோ அன்றாடம் பயிற்சி வினாத்தாள்களுக்கு விடையளிக்க வழிப்படுத்தப் படுகிறார்கள்.

☞ புள்ளிகள் பட்டியல் படுத்தப் பட்டுவிளம்பரப்படுத்தப்படுகிறது

☞ பாடசாலை மட்டத்தில் புள்ளி அடைவு குறைந்த மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதை தவிர்த்தல், அனைவரும் தோற்ற இடமளிக்கப்படாமை போன்ற நிலைமைகளும் ஏற்படுகின்றன.

### மாணவர்கள் மட்டத்திலான தாக்கங்கள்

1.மாணவர்கள் உணவு உண்பதற்கும் தூங்குவதற்கும் நேரமற்ற நிலை உருவாகியுள்ளது.

2.மாணவர்கள் மனத்தாக்கங்களுக்கும் அழுத்தங்களுக்கும் உட்பட்டுள்ளார்கள்.

3.பிள்ளைப்பராயத்தின் இன்பமான நிலை இழக்கப்பட்டுள்ளது

4.பயிற்சி வகுப்புக்களுக்கென மாறிமாறி பெற்றோரால் ஏற்றி இறக்கப்படுகிறார்கள்.

5.புள்ளிகள் குறைந்தால் ஏச்சுக்கள், தண்டனைகள் வழங்குதல்

6.இயந்திரமயமான செயற்பாடுகளுக்கு மாணவர்கள் பழக்கப்படுகிறார்கள்.

7.ஓய்வு, விளையாட்டுச் செயற்பாடுகளில் வாய்ப்புக்கள் இல்லாத நிலை

8.உளச்சுமை, உள நோய்கள் ஏற்படுமளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

9.மகிழ்ச்சியைத் தொலைத்தவர்களாகக் காணப்படும் நிலை.

### சமூக மட்டத்திலான தாக்கங்கள்

1.வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்றவர்கள் கோல உடை தொப்பி அணிவித்து பாராட்டப்படுதல்

2.பத்திரிகையில் மாணவர்களை காட்சிப்படுத்தல்

3.பாடசாலை வாயில்களில் புகைப்படங்கள் காட்சிப் படுத்தல்

4.வங்கிகள் நிதிநிறுவனங்கள், பத்திரிகை நிறுவனங்கள் பதக்கம், பரிசு வழங்கல்.

5. பரீட்சை பெறுபேறுகளின் பின்னர் தரம் 6 இல் இம் மாணவர்கள் பலரது கவனிப்புக்குள்ளிலிருந்து கைவிடப்படல்.

6.வெட்டுப் புள்ளிக்கு கீழ் புள்ளி பெற்ற மாணவர்கள் எவராலும் கவனிக்கப்படாது விடப்படல்.

7.[illegible]

பெற்ற மாணவர்கள் கல்வியில் படிப்படியாக கவனம் குறைதல்.

இந்த நிலைமைகள் கல்வியில் சமவாய்ப்பு, சமசந்தர்ப்பம் அனைவருக்கும் கல்வி என்ற ஜனநாயக உரிமைகளுக்கு செயற்பாடுகளுக்கு முரணாக அமைந்துள்ளன.

### அண்மைக்கால செயற்பாடுகள்

தற்போதைய புலமைப்பரிசில் பரீட்சை இரண்டு வினாத் தாள்களை உள்ளடக்கியுள்ளது.

1.வினாத்தாள் I 45 நிமிடங்கள்-உளச்சார்பு

2.வினாத்தாள் II-1 மணி 15 நிமிடங்கள்-பொதுத் தேர்ச்சி

தற்போதைய வினாத்தாளில் மாணவர்களின் கற்றல், ஆற்றல்கள் மற்றும் உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணர்வதற்கு 14 திறன்கள் பயிற்றுவிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1.அவதானிப்பு

2.பிரதியீடு

3.அறிவுறுத்தல்களை பின்பற்றுதல்

4.காரண காரியங்களை இனம் காணுதல்

5.தூர வெளித் தொடர்புகளை இனம்காணல்

6.தொடர்பு காணல்

7.உள்ளக இடைத்தொடர்பு

8.எதிர்வு கூறல்

9.தகவல்களை ஒழுங்கமைத்தல்

10. மொழி பெயர்ப்பு

11.கோலங்களின் புலக் காட்சி

12.பொருள் உரைக்கும் ஆற்றல்

13.தர்க்கித்தல்

14.பிரச்சினை தீர்த்தல்

இத்தகைய திறன்களை மாணவர்கள் மத்தியில் பயிற்றுவிக்க வேண்டும். தற்போது பரீட்சைத் திணைக்களம் மாணவர்களுக்கு பல நல்ல சந்தர்ப்பங்களை வழங்கியுள்ளது.

I இரண்டு வினாத்தாள்களிலும் தலா 35 புள்ளிகள் பெற்று 70 புள்ளிக்கு மேல் புள்ளி பெறுவோருக்கு சான்றிதழ் வழங்கல்.

II தரம்5 இல் கற்கும் எல்லா மாணவரும் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்ற சந்தர்ப்பம் வழங்கல்


III விசேட தேவையுடைய மாணவருக்கான விசேட செயற்பாடுகள்.

IV கடந்த கால பரீட்சை வினாத்தாள்கள் நூல்களாக வெளியிடப்படல் போன்ற வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை

1.ஆரம்ப வகுப்புகளில் தேர்ச்சி மட்ட கலைத் திட்டத்தை வினைத்திறனுள்ள வகையில் அமுல்படுத்தல்

I முதன்மை நிலை 1 இல் (தரம்1-2) 40 அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் அடையப்படுதல்



பொன்னம்பலம் அருணகிரிநாதன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ். கல்வி வலயம்.

II முதன்மை நிலை 2 இல் (தரம் 3,4) 52 அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் அடையப்படுதல்

III முதன்மை நிலை 3 இல் (தரம்5) 55 அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் அடையப்படுதல்

இவை பாடசாலைகள் மூலமான வலுப்படுத்தலும் உறுதிப்படுத்தலும் என பெற்றோருக்கு இவை தொடர்பாக விளக்கமளித்தல்.

2.தேசிய கல்வி ஆணைக்குழுவில் இனங்காணப்பட்டவற்றை அடையக் கூடிய வகையில் பாடசாலையில் கற்றல், கற்பித்தல் நடைபெறுவதை வலுப்படுத்தி கண்காணித்து உறுதிப்படுத்தல்.

3.கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் அடிப்படைத் தேர்ச்சிகளை மாணவர்கள் வளர்ப்பதன் ஊடாக இலக்குகளை அறிந்து கொள்ளல்.

I.தொடர்பாடல் தேர்ச்சிகள்

1.எண்ணறிவு

2.எழுத்தறிவு

3.சித்திர அறிவு

4.தகவல் தொழில்நுட்ப தகைமை

II ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள் ஆக்கம், விரிந்த சிந்தனை, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், பகுப்பாய்வுச் சிந்தனை.

3.சூழல் தொடர்பான தேர்ச்சிகள் சமூகச் சூழல், உயிரியல் சூழல், பௌதீக சூழல்

4.வேலை உலகிற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

5.சமயமும் ஒழுக்கமும் தொடர்பான தேர்ச்சிகள்.

6.ஓய்வு நேரத்தை பயன்படுத்தல், விளையாட்டு பற் றிய தேர்ச்சிகள்.

7.கற்றலுக்கு கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகளை மாணவர்கள் அடைவதை உறுதி செய்வதே அணைத்து தரப்பினரு டைய பணியாக அமைய வேண்டும்.

வெறும் பரீட்சை பெறுபேறுகள் மட்டுமே கல்வியின் இலக் குகள் என்ற மாய கற்பனை எண்ணங்களை கைவிட்டு பயனுள்ள மனித வளத்தை உருவாக்குவதற்கு ஏற்றதாக எமது செயற்பாடுகள் பயனுள்ள விதத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எல்லா மாணவர்களும் தேர்ச்சிகளை அடைவதை உறுதிப்படுத்துவதும் செயற்பாடுகளில் பாடசாலைகளும் கல்வியாளர்களும் பெற்றோர்களும் இணைந்து பணியாற்றி எமது எதிர்கால சந்ததியை 21 ஆம் நூற்றாண்டுக்கு பொருத்தமாணவர்களாக ஆக்குவதற்கு முயற்சிப்போம்.

கல்வித் தரிசனம் பகுதிக்கு துறைசார்ந்தவர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3,2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

892

...வழியில் காட்டில் செடிகொடிகளும் பலவகை மரங்களும் நிறைந்திருந்தன. அந்தக் காட்சி பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமானதாயிருந்தது.

உயிர் பிழைத்தால் ஓட்டிக்கொண்டு வாருங்கள்; இறந்து போனால், அடக்கம் செய்துவிட்டுத் திரும்புங்கள் என்று உத்தரவிட்டுத் தன் பயணத்தைத்

மறுநாளே முதலாளியிடம் சென்று சஞ்சீவகன் இறந்துவிட்டது. அதை நல்லடக்கம் செய்துவிட்டு வந்தோம் என்று ஒரு பொய்யைக் கூறினார்கள்.

போல் உல்லாசமாகக் காடு முழுவதிலும் அது ஓடித் திரிந்தது. இது இவ்வாறு இருக்கையில் ஒரு சமயம் பிங்களகன் என்னும் சிங்கம் தன்னு

## குள்ள நரியின் குறும்பு!

யானைகள், எருதுகள், காட்டு எருமைகள், காட்டுப்பன்றிகள், மான்கள், புலிகள், சிறுத்தைகள், கரடிகள் முதலான விலங்குகள் நிறைந்த அந்தக் காட்டிலிருந்த அருவிகளிலிருந்து நீர் பெருகி ஆறாக ஓடிக்கொண்டிருந்தது.

பயணத்தின்போது வண்டியின் பாரம் அதிகமாக இருக்கவே சஞ்சீவகன் என்ற எருது மிகவும் களைத்துப்போய்விட்டது. வழியிலிருந்த ஒரு மலை அருவிப் பக்கம் வண்டி சென்றுகொண்டிருக்கும்போது சேற்றில் அதன் குளம்புகள் சிக்கிக் கொண்டதால் சஞ்சீவகன் அந்த இடத்திலேயே விழுந்துவிட்டது.

உடனே வண்டிக்காரன் பரபரப்புடன் வண்டியிருந்து இறங்கினான். வர்த்தமானனை அணுகி, முதலாளி, சஞ்சீவகன் களைப்புற்று சகதியில் விழுந்துவிட்டது என்று அவனிடம் தகவல் தெரிவித்தான்.

வர்த்தகமானன் தன் எருதின் நிலைகண்டு மிகவும் கவலைப்பட்டான். ஐந்து நாட்கள் அங்கேயே தங்கி சஞ்சீவகனைக் குணப்படுத்தப் பாடுபட்டான். அது குணம் அடையவில்லை. அதனால், அதைக் காப்பாற்றுவதற்குத் தேவையான தீவனங்களுடன் சில வேலையாட்களை அங்கேயே இருக்கச் செய்து விட்டு, முடிந்தவரை முயன்று பாருங்கள்.



தொடர்ந்தான்.

வேலையாட்கள் அந்தக் காட்டில் தங்குவதற்குப் பயந்து சஞ்சீவகனை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு

இதைக்கேட்ட வர்த்தமானன் தன் எருதுக்காக மிகவும் கவலைப்பட்டான். பிறகு மனதை ஆறுதல்படுத்திக் கொண்டு மதுராபுரி போய்ச் சேர்ந்தான்.

ஆனால், சஞ்சீவகனின் ஆயுள் மிகவும் கெட்டியாக இருந்ததனால் அது சாகவில்லை. தன்மீது பட்ட அருவியின் நீர்த்தி வலைகளாலும் தென்றலாலும் உடல் தேறி, மெதுவாக நடந்து யமுனை நதிக்கரையை அது அடைந்தது. அங்கு மரகதம் போல் பரவிக் கிடந்த புல்வெளிகளில் மேய்ந்து, சில நாட்களிலேயே அது தேவலோகத்து நந்தி போல பருத்துக் கொண்டே வந்தது. அது இப்போது முன்னை விட மிகவும் பலசாலியாகிவிட்டது. தன் வளைந்து வளர்ந்த கொம்புகளால் எறும்புப் புற்றுகளின் முகடுகளை முட்டிப் பெயர்த்து எறிந்து கொண்டு யானை

டைய பரிவாரங்கள் புடைசூழ யமுனை நதிக்கரைக்கு நீர் அருந்த வந்தது. அப்பொழுது சஞ்சீவகன் போட்ட முக்காரத்தைக் கேட்ட சிங்கம் பயந்துவிட்டது. இருந்தாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் சிறிது நேரம் தயங்கியபடி அங்கேயே அது நின்றுகொண்டிருந்தது. பிறகு தன் பரிவாரங்களுடன் தான் வழக்கமாகத் தங்கும் ஆலமரத்துக்குத் திரும்பியது பிங்களகன்.

அந்தக் காட்டுக்குப் பிங்களகன் தான் அரசன். அதன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வேலை செய்வதற்கென்று பல விலங்குகள் அதிகாரிகளாக சிப்பந்திகளாக பணியாட்களாக அங்கு இருந்தன.

மெய்க்காப்பாளர்கள், மத்திய அதிகாரிகள், பணியாட்கள் என்ற வகையில் நான்கு பிரிவுகளை அமைத்துக்கொண்டு அந்த பிங்களகன் என்னும் சிங்கம் ஆட்சி புரிந்து வந்தது.

காட்டிலுள்ள ராஜ்யங்கள், தலைநகரங்கள், பட்டினங்கள், சிற்றூர்கள், அங்காடிகள், குடியிருப்புகள், எல்லைப்புறப் பகுதிகள், மான்யங்கள், மடாலயங்கள், பொது இடங்கள் ஆகியவற்றை பிங்களகன் தனது நேரடிப் பார்வையின் கீழ் வைத்துக் கொண்டது.

தனக்கு மெய்க்காப்பாளர்களாகச் சில மிருகங்களை மட்டுமே அது நியமித்துக்கொண்டிருந்தது.

பல்வகை மிருகங்கள் கூட்டாக இணைந்து மத்திய அதிகாரிகளாக அதனிடம் பணி புரிந்து வந்தன.........

.................................... (தொடரும்)

## 08.2014 14 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1248 - உலக பாரம்பரியக் களங்களில் ஒன்றான ஜேர்மனியின் கொலோன் கதீட்ரல் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. இது 1880 இலேயே கட்டி முடிக்கப்பட்டது.
- 1900 -ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்கக் கூட்டுப் படைகள் பெய்ஜிங் நகரை ஆக்கிரமித்தன.
- 1908 - முதலாவது அழகுப் போட்டி இங்கிலாந்தின் போக்ஸ்டன் நகரில் இடம்பெற்றன.
- 1912 - நிக்கராகுவாவில் அமெரிக்க சார்பு அரசை அமைக்க அமெரிக்கக் கடற்படையினர் நிக்கராகுவாவை முற்றுகையிட்டனர்.
- 1921 - தன்னு துவா என்ற புதிய நாடு (தற்போதைய திவா) உருவாக்கப்பட்டது.
- 1937 - ஆறு ஜப்பானிய விமானங்கள் சீனாவினால் சுட்டு வீழ்த்தப்பட்டன.
- 1945 - பசிபிக் போர் முடிவுற்றது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: நட்பு நாடுகளின் விதிகளுக்கமைய ஜப்பான் சரணடைந்தது.
- 1947 - பிரித்தானிய இந்தியாவில் இருந்து ஐக்கிய இராச்சியத்தின் நிர்வாகத்தின் கீழ் பாகிஸ்தான் விடுதலை அடைந்து பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இணைந்தது.
- 1969 - வட அயர்லாந்துக்கு ஐக்கிய இராச்சிய இராணுவத்தினர் அனுப்பப்பட்டனர்.
- 1980 - போலந்தில் தொழிற்சங்கத் தலைவர் லெக் வலேசா தலைமையில் வேலை நிறுத்தம் தொடங்கப்பட்டது.
- 2006 - இஸ்ரேல் - லெபனான் போர் முடிவுக்கு வந்தது.
- 2006 - முல்லைத்தீவு செஞ்சோலை சிறார் இல்லம்மீது இலங்கை இராணுவத்தினர் நடத்திய விமானத் தாக்குதலில் 61 பாடசாலை சிறுமிகள் கொல்லப்பட்டு 60 பேர் படுகாயமடைந்தனர்.

பிறப்புக்கள்

- 1867 - ஜோன் கல்ஸ்வோதி, நோபல் பரிசு பெற்ற ஆங்கில நாவலாசிரியர் (இ. 1933)
- 1911 - வேதாத்திரி மகரிஷி, இந்திய ஆன்மிகத் தலைவர் (இ. 2006)
- 1959 - மேஜிக் ஜான்சன், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

இறப்புகள்

- 1941 - போல் சபாடியே, பிரெஞ்சு வேதியியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1854)
- 1953 - க. சிவபாதசுந்தரனார், யாழ்ப்பாணம் புலோலியூர் சைவப் பெரியார் (பி. 1878)
- 1958 - பிரெட்றிக் ஜோலியோ, பிரெஞ்சு இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1900)
- 1979 - என். எம். பெரேரா, இலங்கையின் மாக்சியவாதி
- 2004 - செஸ்லோ மிலோஸ், போலந்து எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1911)
- 2007 - இராம. திரு. சம்பந்தம், தினமணி முன்னாள் ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சச்சின்

## "சாதனை நாயகனின் சரித்திரம்"




...பல்வேறு யூகங்கள் மற்றும் சந்தேகங்களுக்கு இடையே ரசிகர்கள் செய்த புண்ணியம் சச்சின் இங்கிலாந்து பயணத்திற்கு தேர்வு செய்யப்பட்டான். மூன்று டெஸ்ட் போட்டிகள், இரு ஒருநாள் ஆட்டங்கள் மற்றும் அங்குள்ள கவுண்டிகளுடன் முதல்தர ஆட்டங்கள் என இரு மாதங்கள் முழுவதும் கிரிக்கெட் போட்டிகள். சச்சின் வருவதற்கு முன்பே இங்கிலாந்துப் பத்திரிகைகள் இவனைப் பற்றி பல கட்டுரைகள் எழுதி இருந்தன. இந்தியாவின் எதிர்கால நட்சத்திரம் மற்றும் காலம் கொடுத்த கொடை என்றும் பக்கம் பக்கமாக சச்சினைப் புகழ்ந்து எழுதியிருந்தன. எனவே, பலத்த எதிர்பார்ப்புகளுக்கு இடையே சச்சினின் மூன்றாவது இங்கிலாந்து பயணம் துவங்கியது. லீக் கிரிக்கெட் குழுவுடன் சச்சின் ஆடிய முதல் போட்டியில் 19 ரன்கள். யார்க்ஷையருக்கு எதிரான போட்டியில் சச்சின் ஆடவில்லை. ஹாப்ஷையருடன் ஆடிய முதல்தர போட்டியில் சச்சின் 32 மற்றும் 58 ரன்கள் எடுத்தும் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் தோற்றது. கெட்ண்ட் அணிக்கு எதிரான போட்டியில் 92 மற்றும் 70. சித்து மற்றும் ராமன் ஆகியோர்தான் வழக்கமாக





ஓபன் செய்வார்கள். அவர்களின் உடல் நலக்குறைவால் சச்சின் மற்றும் கிரண்மூர் இருவரும் முதன் முதலாக ஓப்பினிங் ஆட்ட நாயகர்களாக களம் இறங்கினர். இந்த போட்டி இந்தியாவை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது. ஸ்காட்லாண்டிற்கு எதிரான போட்டியில் 65 மற்றும் 10 அவுட் இல்லை. டெர்பிஷையருக்கு எதிரான போட்டியில் 105 ரன்கள். இப்படியாக ஒருநாள் போட்டி துவங்குவதற்கு முன்பு நடைபெற்ற கவுண்டிகளுக்கு எதிரான போட்டிகளில் சச்சின் தூள் கிளப்பினான். 1990 ஆம் ஆண்டு வெளியான இந்தியன் கிரிக்கெட் ஆனுவல் என்னும் பத்திரிகையில் சச்சின் விளையாட்டைப் பற்றி வானுயரப் புகழ்ந்தார் டெர்பிஷையர் கேப்டன் பார்னெட்.

ஜூலை 18 ஆம் திகதி ஒருநாள் போட்டிகள் துவங்கின. இங்கிலாந்து 229 ரன்கள் எடுத்தது. இந்தியாவின் வெற்றிக்கு மஞ்சுரேகர் (82) மற்றும் அசாருதீன் (55) காரணமாயினர். சச்சினால் 19 ரண்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. அடுத்த ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து 281 ரன்கள் எடுத்தது. மஞ்சுரேகர் (59), வெங்சர்கார் (54), அசாருதீன் (63) ரன்களுடன் திறமையாக ஆடி மீண்டும் இந்தியாவிற்கு வெற்றி தேடித் தந்தனர். சச்சின் 26 பந்துகளில் 31 ரன்கள் மட்டுமே எடுத்தாலும் தனது அதிரடி ஆட்டத்தினால் அனைவரையும் கவர்ந்தான்.

## உருவம் கண்டு எள்ளாமை வேண்டும்!

முதல் டெஸ்ட் போட்டி லார்ட்ஸ் மைதானத்தில் தொடங்கியது. இரு போட்டிகளில் தோற்றதால் இங்கிலாந்து கேப்டன் கூச் முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றே தீர வேண்டும் என்ற வெறியுடன் இருந்தார். இரண்டு ஒருநாள் போட்டிகளில் வெற்றி பெறவே அசாருதீனுக்கு அதீத நம்பிக்கை- ஓவர் கான்ஃபிடன்ஸ் ஏற்பட்டுவிட்டது என்றுதான் கூற வேண்டும். இல்லை என்றால் டாஸ் ஜெயித்து அசாருதீன் இங்கிலாந்து அணியை விளையாடக் கூப்பிடுவாரா? லார்ட்ஸ் மைதானம் கடைசியில் ஆடும் ஆட்டக்காரர்களுக்கு சாதகமாக இருக்காது. பௌலர்களுக்கே சாதகமாக இருக்கும். இதை உணர்ந்த அணியின் கோச் பேடி அசாருதீன் முடிவை ஆதரிக்கவில்லை. அவரை விடுங்கள்.

ஆட்ட நாயகன் விருது சச்சினுக்கு வழங்கப்பட்டது. பின்னர் நடைபெற்ற கொண்டாட்டங்களில் மேல்நாட்டு வழக்கப்படி அனைவரும் குடிப்பதற்கு ஷாம்பைன் வழங்கப்பட்டது. சச்சினின் வயதோ 17 தான். சச்சின் நெளிந்து கொண்டே சார் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் சட்டப்படி குடிக்க உரிமை. எனக்கு 17 வயதுதான் ஆகிறது என்றானாம்!

கே. ரமேஷ்

(தொடரும்)

# உங்கள் பிறந்த எண் 08 இல் கூட்டெண் 09 இன் பலன்கள்



65

### தோற்றம்

சனியுடன் செவ்வாய் சேர்ந்து வரும் ஆதிக்கம் இவர்களுக்கு. சராசரி உயரமாகக் கட்டுடலுடன் இருப்பார். சிவப்பாக இருப்பார். நீண்ட சதுரமாக முகம் இருக்கும். கூரிய பார்வையுடன் சற்றுப் பெரிய கண்கள் இருக்கும். சிவந்து காணப்படும். முகம் சதைப் பற்றுடன் நீண்ட மூக்கு எடுப்பாக, அழகான பருத்த உதடுகளுள்ள வாயுடன் இருக்கும். பற்கள் சற்றுப் பெரிதாக மேல் முன்னிரு பல பெரிதாக சரியாக வரிசையில் இருக்கும். கவர்ச்சியுடன் கம்பீரமும் சேர்ந்தே தோற்றம் அழகாக இருக்கும். தாடை உறுதியாக இருக்கும். ரெட்டை நாடிச் சரீரம் உடையவர்.

### குணம்

சாதுவாக அமைதியான முகத்துடன் இருக்கும் இவர்கள்; அநியாயத்தைக் கண்டால் பொங்கி எழுந்து போர் வீரராகி விடுவார். நாகரிகமும் இங்கிரமும் நல்லொழுக்கமும் உடைய இவர்களை நன்றி கெட்டவர் தூண்டிவிட்டுவிட்டால் முரடரைப் போல முன் கோபியைப்போலப் படுவார். உடல் மன பலம் இரண்டும் உள்ளவர். வெகுளித்தனமானவர். இவருடைய நேர்மை, நற்குணம் இவருக்கு வெற்றியைப் பிறரைத் தோற்கடித்து பெற்றுத் தரும். மக்களிடம் கவர்ச்சியைப் பெற்றிருப்பர்.

சிறுவயது முதல் உழைத்து பல சங்கதிகளைக் கற்று அதைத் தொழிலில் ஆற்றலாகக் காட்டி முன்னேறுவர்.

எந்தச் செயலையும் சோம்பலின்றிப் பக்குவமாகச் செய்வர். பெரிய வெற்றியைப் பிறர் பிரமிக்கும்படி அடைவர். தாம் பட்ட சிரமத்தை மறவாமல் தம்மிடம் வருபவருக்கும் உதவி செய்வார். இதனால் இவர் பெறும் நற்பெயர் இவருக்கும் நலம் தரும். புகழைக் கூட்டும். பொதுச் சேவையும் செய்வார்.

இளவயதில் தந்தையை இழப்பர். தொழில் திறமை, உழைப்பு என்னும் இரண்டு துடுப்புகளுடன் சமூக எதிர்ப்பில் எதிர் நீச்சலிடித்தே முன்னேறுவர். பிறர் இவருடைய கருணை உள்ளத்தை தவறாகப் பயன்படுத்தி இவரை ஏமாற்றுவர். 35 வயதுக்கு மேல் நிலையான முன்னேற்றம் கிட்டும். அதற்குப் பின்னும் நல்ல பெயரெடுக்க நினைத்து சிலர் ஏமாற்றம் தந்திரக்காரர் என உணராமலிருப்பார். பொதுத் தொண்டில் இடுபடுவார்.

வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் பட்ட அடி, பயங்கர அனுபவத்தால் விழித்துக் கொண்டு இவர் ஆற்றலால் மேலும் மேலும் நல்ல நிலையை அடைவர். தோல்வியும் துயரமும் இவர்களைப் பண்படுத்தும்.

யோகம், வேதாந்தம் இவரைக் கவரும். ஜோதிடம், போர்க்கலை, பிராணிகளைப் பழக்கல இவருக்குத் தெரியவரும்.

பிறந்த இடத்தைவிட்டு வேறிடம் சென்று பிரபலமும் புகழும் பொருளுமடைவர். கடின உழைப்பாலேயே இவர் கிட்டும் நன்றியற்றவர்களால் சூழப்பட்டிருப்பார். உள்ளேயும் வெளியேயும் நேரடி மறைமுக எதிரிகள் இவர்களுக்கு நிறைய ஏற்பட்டிருப்பர். கொலை செய்யும் அளவுகூட இவர்கள் எதிரிகளைப் பெற்றிருப்பர். விபத்தும் காயமும்கூட இவர்களுக்கு ஏற்படும்.

### குடும்பம்

இருப்பதைக்கொண்டு சிறப்புடன் வாழக் கூடியவர். வறுமையால் இவர் குடும்பம் பாதிக்கப்படும். காதல் விவகாரம் தோற்கும். வாழ்க்கை இவர்களுக்குப் பல தோல்விகளை தடைகளையே தரும். திருமணம் கூட மகிழ்ச்சியிராது. வியாதியாலோ வறுமையாலோ மனைவியை இழப்பர். மறுமணம் புரிவர். முறைப்படி புரியும் மணம் நிலைக்காது. இவர்களின் முரட்டுத்தனம் குழப்பமான நடத்தையும்கூடக் காரணமாகலாம். வாரிசுக் குறையும்கூட ஏற்படும். ஆனாலும் இவர்கள் புற வாழ்க்கை மிகப்பிரமாதமாக அமையும் சகோதர சகோதரிகள் நண்பர்கள் உறவாடுவர். மனம்விரக்தி அடைவர்.

### தொழில்

இவர்கள் கலை கலை சார்ந்த தொழிலுக்கு ஏற்றவராவர். நடிப்பு இயக்கம், கதை வசனம் எழுதுதல் போன்றவற்றில் நன்கு திறமை வரும்.

சிறந்த ராஜதந்திரிகளாக இருப்பர். திட்டம் போட்டுச் செய்யும் தொழில் சிறப்பாக இவர்களால் செய்யப்படும். அரசியலில் நுழைந்தால் மிக நல்ல இடம் கிடைக்கும். மேடைப்பேச்சாளராகவும் ஆவார். மத்பிரசாரகராக விளங்குவர்.

பொலிஸ், இராணுவம், மருத்துவத்துறை, சட்டத்துறையில் பணிபுரிந்தாலும் மேன்மையுறுவர். ஓவியம், ஜோதிடம் சண்டைகளிலும் கற்றுத்தருபவராகவும் மக்களுக்குப் பயன்படும் முறையிலும் பணிபுரியலாம்.

ஏற்றுமதி இறக்குமதி தொழில் புரியலாம். எரிபொருள் எலெக்ட்ரிக் எலெக்ட்ரானிக் பொருள் வியாபாரம் எண்ணெய் நிறுவனப் பணி இவர்களுக்கு மிகப்பொருத்தம்.

அரசாங்கத்துறை நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் மிகப்பெரும் அதிகாரிகளாக வரமுடியும். அறுவைச் சிகிச்சை புரியும் மருத்துவராக நர்சாக மனோதத்துவ மருத்துவராக வரமுடியும்.

### நோய்

உஷ்ண தொடர்பான நோய், வாதத் தொடர்பானவை, தலைவலி, கண்நோய் வரலாம். விபத்தும் இவரைப் பாதிக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் அலுவலகத்தில் பாரியளவில் முறைகேடு

பிரதமர் அலுவலகத்தில் பாரியளவில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் அரச நிர்வாக சேவையில், கடயைமாற்றிய 6 ஆயிரத்து 156 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு விஜயங்களை செய்துள்ளனர். புலமைப் பரிசில்கள், கருத்தரங்குகள், கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் போன்றவற்றுக்காக',இவ்வாறு அதிக எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளனர்.

ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பயணங்களை ஒரே ஆண்டில் மேற்கொள்ள பிரதமர் டி.எம். ஜயரட்ன அனுமதியளித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகச் சேவையைச் சேர்ந்தவர்கள் வெளிநாடு செல்ல முன்னர் பிரதமரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

2007 ஆம் ஆண்டு சுற்று நிருபத்தின் அடிப்படையில் இவ்வாறு அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

உயர்கல்வி அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளே அதிகளவில் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த ஆண்டில் பொழுது போக்கு நிகழ்வு ஒன்றை நடத்தி பரிசில் வழங்குவதற்காக இருபது மில்லியன் ரூபாவை பிரதமர் அலுவலகம் செலவிட்டுள்ளது.

கடந்த ஆண்டில் பிரதமர் அலுவலகத்தின் காகிதாதிகளுக்காக மொத்தச் செலவு 6.6 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இலங்கை குறித்த நன்மதிப்பை மேம்படுத்தும் செயற்றிட்டம் ஒன்றை மட்டுமே கடந்த ஆண்டில் பிரதமர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இந்த திட்டத்திற்காக இரண்டு மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இவ்வாறு பிரதமர் அலுவலகத்தில் நிதி பாரியளவில் விரயமாக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# மனித உரிமை பணியாளராக செயற்பட்டதை மறந்துவிட்டார்

## மஹிந்த மீது அரச சார்பற்ற நிறுவனங்கள் சீற்றம்

(கொழும்பு)

சட்டபூர்வமான நிகழ்வுகளை குழப்புவதற்காக பௌத்த பிக்குகளை பயன்படுத்தும் அரசாங்கத்தின் தந்திரோபாயத்தை இலங்கையின் முன்னணி அரசசார்பற்ற அமைப்புகள் கடுமையாக சாடியுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 1980 களில் சிவில் அமைப்புகளுடன் இணைந்து மனித உரிமைப் பணியாளராக செயற்பட்டதை மறந்துவிட்டார் எனவும் அந்த அமைப்புக்கள் குற்றம்சாட்டியுள்ளன.

ஒரு வார காலத்திற்கு முன்னர், பௌத்த பிக்குகளின் ஆர்ப்பாட்டத்தால் காணாமற் போனோரின் குடும்பத்தவர்கள் கலந்து கொண்ட கூட்டம் குழப்பப்பட்டது.

இந்தக் கூட்டம் குழப்பப்பட்ட மத மற்றும் சமூக நிலையத்தில் செய்தியாளர் மாநாடொன்றை, இலங்கையின் முன்னணி அரசசார்பற்ற அமைப்புகள் நேற்றுமுன் தினம் கூட்டாக நடத்தியுள்ளன.

இந்த செய்தியாளர் சந்திப்பில், கருத்துச் சுதந்திரத்தையும், ஒன்று கூடுவதற்கான சுதந்திரத்தையும், சட்டபூர்வமான நிகழ்வுகளை நடத்தும் உரிமையினை, பௌத்த பிக்குகளை பயன்படுத்தி குழப்புவதன் மூலம், அரசமைப்பு மூலமாக தங்களுக்கு உறுதி செய்யப்பட்ட அடிப்படை உரிமைகளை அரசாங்கம் மீறுவதாக குற்றம்சாட்டியுள்ளன.

நாடு ஆளப்படும் விதம் காரணமாக குறிப்பிட்ட கும்பல் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்பட்ட நிலையில் செயற்படுவதாக மனிதவுரிமை பணியாளர் நிமல்கா பெர்னாண்டோ குற்றம் சாட்டினார்.

சிவில் சமூக பணியாளர்கள் துரோகிகள் இலங்கைக்கு எதிராக போராடுகின்றனர் என்ற கருத்தை நிராகரித்த அவர் நாங்கள் ஒடுக்குமுறை அரசாங்கத்திற்கு எதிராகவே போராடுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (6)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

### தெய்வீக இசையரங்கு

நல்லூர்க்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வாக இடம் பெறவுள்ள இசையரங்கத்தில் பாடல் ரி.றொபேட்டும் வயலின் எ.ஜெயராமனும் மிருதங்கம் கெ.கஜனும் கடம் எம். மாதவனும் வழங்கவுள்ளனர்.

### குழுநடனம்

நல்லூர்க்கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்துக் குருமார் ஒன்றிய ஆதரவில் பிரம்மகான சபையினால் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வுகளாக ஸ்ரீ.நிவேதாவின் தனிநடனமும் சுபாஸ் சிவக்குமாரக் குருக்கள், மஹதி கைலாச ராஜீக்குருக்கள், ஸ்ருதி சிவகுமாரக் குருக்கள் ஆகியோரின் குழுநடனமும் இடம்பெறவுள்ளது.

### இசைப்பேருரை

நல்லூர்க்கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவமகா சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்ற கம்பராமாயண இசைப்பேருரை தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மாவால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இன்றையதினம் பரசுராமன் எனும் தலைப்பிலான இசைப்பேருரை இடம்பெறவுள்ளது.

### சொற்பொழிவு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சொற்பொழிவும் கலை நிகழ்வுகளும் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது. இன்றைய தினம் பொ.சந்திரசேகரம் வழங்கவுள்ள பெண்ணில் நல்லாளோடும் பெருந்தகை யிருந்ததே எனும் தலைப்பிலான சொற்பொழிவும் அராலி கோமாதா அறநெறிப் பாடசாலை, ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப்பாடசாலை, நீர்வேலி ஸ்ரீமுருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

### ஆன்மீக அருளுரை

நல்லூர் முருகப்பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணிக்கு நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் சின்மயா மிஷன் யாழ்.வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வழங்கப்பட்டு வருகின்றது. இன்றையதினம் மகிழ்ச்சியான மாணவப் பருவம் எனும் தலைப்பிலான அருளுரை இடம்பெறவுள்ளது.

### தெய்வீகக் கலையரங்கு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு வடமாகாண கல்வியமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் தெய்வீகக் கலையரங்கு தினமும் மாலை 4 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வருகின்றது. இதன் இன்றைய நிகழ்வுகளாக, யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவர்கள் வழங்கவுள்ள தீபாஞ்சலியுடனான விநாயகர் துதியும் காவடி [illegible] யா/ [illegible] கல்லூரி மாணவர்கள் வழங்கவுள்ள காவடி நடனமும் இடம்பெறவுள்ளது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் திருவடிக்கு இன்று பதின்நான்காம் திருவிழா



## வெண்பா

ஓசை ஒளியாலே ஊற்றாகும் உள்ளத்தின்
தேசையெலாம் நல்லூரிற் தேடலாம் - ஆசையுடன்
ஆணவமும் போகும் அமர்ந்து தியானிக்கக்
காணலாங் கந்தன் கழல்.

**வைத்திய கலாநிதி சி.இராசரத்தினம்**

## நல்லையம்பதி உறை மன்னவா போற்றி

அலங்காரக் கந்தா, ஆணவம் அழிப்பவனே
இலங்கைத் திருநாட்டில் ஈர்ப்பாய் அமர்ந்தவனே
உன் விழியால், உன்னருளால், ஊழ்வினை தீர்ப்பவனே
என்றென்றும் தொழுவோர்க்கு ஏற்றம் பல தருபவனே
ஐயா, நின்தாள் பணிந்தோர்க்கு ஒருநாளும் குறையில்லை
ஓங்கியே வாழ்ந்திடுவோம், ஔவைக்குப் பிடித்தவனே
சிவகுமாரா, எம் ஊழ்வினையகற்ற - பக்தி
ஓங்கியே வாழ்ந்திடுவோம்

**நல்லைச் செல்வி.**

## ஏறுமயில் ஏறிவரும் நல்லூரானே

ஆண்டாண்டாய் அலங்கார வாழ்வுனக்கு
மீண்டும் மீண்டும் அவல வாழ்வெமக்கு
வேண்டுதல்கள் உன் செவியில் ஏறலையா
வேலவனே வெற்றிதர மனமில்லையா
ஏறுமயில் ஏறிவரும் நல்லூரானே
கூறு பதிலை எமக்கு மனம் ஆறலையே

**புலோலியூர், வேல்நந்தன்.**

## சிங்கார வேலா நல்லூர்க் கந்தா

ஆறுபடைவீடுகொண்டாய் சிங்கார வேலா
நல்லை நகர் பதியினிலே நல்லூர் வேலா
அழகான மயிலோடு நல்லைநகர் வேலா
ஆடிவரவேணுமடா நல்லைப்பதிமுருகா
மாரிமழை பெய்ய வேணும் நல்லைநகர் நாதா
நல்லவரம் அருளிடடா நல்லைப்பதிவேலா

**திருப்பதி விமலா, தெல்லிநகர்.**

## பெரும்பேறு பெற்றார்

சிங்கை ஆரியன் மரபில் வந்தோம்
புவனேயபாகு புனைவித்த கோயில்
முந்தும் அன்பொடு கந்தன் உறையும்
மாடம் மண்டபம் சூழ்வீதி நல்லூர்
பக்தரொடு சித்தர் பாடி ஆடி வர
நாளொரு வண்ணமாய் வீதிவலம்
வருகின்ற முருகன் விழாக் கோலம்
கண்டாரே பெரும்பேறு பெற்றார்.

**சு.சிவராசா, நாவற்குழி.**

## நல்லைக் கந்தன் நனிவெண்பா

எண்ணிய எண்ணியாங்கெய்திடவே செய்திடுவான்
திண்ணியராயறநெறியிற் தேர்பவரை - வண்ணமயில்
ஏறிவரும் நல்லூரரான் எழிற்பாதம் பற்றிடிலோ
ஆறிமறையும் வினைகளாம்.

**கலாபூஷணம் சந்தக் கவிஞர் நவ.பாலகோபால்**

## ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட சர்வதேச நிபுணர் குழு நியமனமானது

# ஐ.நா.விசாரணையை பலவீனப்படுத்தும் சதி

## மன்னார் ஆயர் பகிரங்க குற்றச்சாட்டு

சமீபத்தில் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள ஐ.நா. மனித வுரிமை ஆணைக்குழுவின் செயற்பாடுகளை பலவீனப்படுத்தும் நோக்கிலேயே காணமற்போனோர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆணை விஸ்தரிக்கப்பட்டதாகவும். சர்வதேச நிபுணர்குழு நியமிக்கப்பட்டதாகவும் தான் கருதுவதாக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

காணமற்போனோர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவருக்கு தான் ஏன் அந்த ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க விரும்பவில்லை என்பதை தெளிவுபடுத்தி சமர்ப்பித்துள்ள கடிதத்திலேயே இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

யுத்தத்திற்கு முன்னரும் அதன் பின்னரும் தமிழ் மக்கள் எதிர்கொண்ட அநீதிகளுக்கு தீர்வு காணும் விடயத்தில் உள்ளூர் பொறிமுறைகளின் பங்களிப்பு குறித்து நான் ஏமாற்றமும் அடைந்துளளோன். கடந்த காலங்களில் உங்களது ஆணைக்குழுக்கள் போன்று பல ஏற்படுத்தப்பபட்டன. ஆனால் எவையும் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கும் விடயத்திற்கு தீர்வு கண்டதற்கான அறிகுறிகள் இலலை. ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அரசியல் உறுதிப்பாடின்மையே இதற்கு காரணம் என சுட்டிக்காட்டியுள்ளார்.

**உண்மைக்கும் நீதிக்குமான தீவிரமான அர்ப்பணிப்பு இல்லாத பட்சத்தில் நல்லிணக்கம் ஒருபோதும் ஏற்படாது சமாதானம் கானல் நீராகவே தோன்றும்**

இது குறித்து நான் பல வருடங்களாக அறிந்திருந்தும்- நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் தோன்றி சாட்சியமளித்தேன். தமிழ் மக்களும் நானும் சாட்சியமளித்த அந்த விவகாரங்கள் தொடர்பாக அரசாங்கம் தீவிரமான நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை.

இந்த அனுபவம் காரணமாக உங்கள் ஆணைக் குழு முன்னிலையில் தோன்ற எனக்கு முடியவில்லை. இந்த ஆணைக்குழு காணாமற் போனோர் ஆணைக் குழு என அழைக்கப்படுகிறது. இவர்கள் காணமற்போகவில்லை. பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டுள்ளனர். ஆகவே இது கூட உண்மையை மறுதலிக்கும் செயலாகவே எனக்கு தோன்றுகிறது. வடக்கு, கிழக்கில் தங்களது குடும்பத்தினரை இழந்த பலர் உங்கள் முன்னிலையில் தோன்றி தங்கள் துயரங்களை முன்வைத்திருப்பார்கள் என்பதை நான் அறிவேன்.

அவர்களை கண்டுபிடிப்பதற்கு உங்கள் ஆணைக்குழு உதவும் என்ற அவர்களின் எதிர்பார்ப்பே அதற்கு காரணம். அவ்வாறு செயற்படுவதன் மூலமாக அவர்கள் எதனையும் இழக்கப் போவதில்லை.

இதனை செய்வதால் தங்களுக்கு எந்த பலாபலனும் கிடைக்கப் போவதில்லை என அறிந்திருந்தும் அவர்கள் எங்கெல்லாம் சென்று தங்கள் துயரங்களை முறையிட முடியுமோ அங்கெல்லாம் செல்கின்றனர். இதுவே இந்த நாட்டின் தமிழ் மக்களின் பரிதாப நிலையாகும்.

இதேவேளை இந்த ஆணைக் குழுக்கள் காணாமற்போனவர்களை கண்டுபிடித்து கொடுப்பதற்கான தீவிர முயற்சிகளை மேற்கொள்ளாமல் அவர்களின் பொருளாதார நிலை குறித்து அறிவதிலேயே ஆர்வமாக இருப்பதாக அறிந்துள்ளேன். இதேவேளை காணாமற்போனவர்களின் குடும்பத்தினரை மரணச்சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளுமாறு ஊக்குவிக்கும் செயற்பாடொன்றை அராங்கம் முன்னெடுத்து வருகிறது. உங்கள் ஆணைக்குழுக்களின் அமர்வுகளிற்கு சமாந்தரமாக இது இடம்பெறுகின்றது.

உங்களது ஆணைக்குழுவின் ஆணை சமீபத்தில் விஸ்தரிக்கப்பட்டதற்கும். சர்வதேச நிபுணர்குழு நியமிக்கப்பட்டதற்கும் சமீபத்தில் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவின் செயற்பாடுகளை பலவீனப்படுத்துவதே நோக்கமாக இருக்க முடியும் என நான் கருதுகிறேன்.

உண்மைக்கும் நீதிக்குமான தீவிரமான அர்ப்பணிப்பு இல்லாத பட்சத்தில் நல்லிணக்கம் ஒருபோதும் ஏற்படாது சமாதானம் கானல்நீராகவே தோன்றும் என அவர் மேலும் தெரிவித்தார். (6)






சிறுவர்கள் மற்றும் வயது வந்தோருக்கான ஆங்கிலக் கற்கைநெறி பயிற்சியை மையமாகக் கொண்ட Northern Academic & Leadership Training Center தமது ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு அண்மையில் தியாகிகள் அறக்கொடை மண்டபத்தில் கல்வி கற்கும் மாணவர்களால் நடத்தப்பட்ட ஆங்கில கலை நிகழ்வுகளின் போது...

# அரசியலை நடத்திவரும் கோத்தபாய புதிதாக பிரவேசிக்க தேவையில்லை!

## ஜே.வி.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பாதுகாப்பு செயலாளர் புதிதாக அரசியலில் பிரவேசிக்கத் தேவையில்லை. இப்போதே அரசியலை தீர்மானிக்கும் ஒரு சக்தியாக செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றார் என குறிப்பிடும் ஜே.வி.பி. அரசியலையும் இராணுவ மயப்படுத்தி அனைவரின் வாயையும் மூடும் திட்டமே இவை அனைத்தும் எனவும் அக்கட்சி குற்றம் சுமத்தியது.

ஜனாதிபதி அழைத்தால் அரசியலுக்கு வருவேன் என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு தெரிவித்திருந்தார். இந்நிலையில் அரசாங்கத்தில் இருக்கும் சிலர் கொழும்பின் அரசியல் தலைமையினை பாதுகாப்பு செயலாளர் ஏற்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர். இவை தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் கருத்தை வினவிய போதே அக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

பாதுகாப்பு செயலாளரை அரசியலுக்கு வரவேண்டுமென சிலர் குறிப்பிட்டுள்ளனர். எனினும் பாதுகாப்பு செயலாளர் இன்று அவரின் வேலைக்கு அப்பால் அரசியலிலும் ஈடுபட்டு வருகின்றார் என்பதே உண்மை.

அவர் அரசியலுக்கு புதிதாக வர வேண்டிய அவசியம் இல்லை. அதேபோல் பாதுகாப்பு செயலாளரின் அரசியல் பிரவேசம் கடந்த மேல் மாகாண சபைத் தேர்தலின் போது விளங்கி விட்டது. மேல் மாகாண சபைத்தேர்தலின் போது ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரசார வேலைத் திட்டங்களுக்காக அரசியல் மேடைகளில் ஏறிய போதே அவரின் அரசியல் ஆசை வெளிப்பட்டுவிட்டது.

அதேபோல் இன்று அரசியல் செயற்பாடுகளில் பாதுகாப்பு செயலாளரின் தலையீடு மிக அதிகமாகவே உள்ளது. அரசியலில் மட்டுமல்லாது ஒருசில அமைப்புகளின் பின்னணியில் செயற்படுபவராகவும் கூட குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றது. இவை அனைத்தும் கூட அரசியல் பிரவேசத்திற்கான ஒரு ஆரம்ப செயற்பாடாகக் கூட இருக்க முடியும்.

நாட்டில் இன்று சிவில் சேவைகள் அனைத்தும் இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் சென்று விட்டது. இப்போது அரசியல் தலையீட்டின் மூலம் அரசியலையும் இராணுவ மயப்படுத்தி அனைவரதும் வாயை மூடவே அரசாங்கம் புதிய திட்டத்தினை உருவாக்குகின்றது. இவை தெரியாது அரச பங்காளிக் கட்சிகள் ஆதரவு கரம் நீட்டுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (6)

## நிலைப்பாட்டில் மாற்றமில்லை

(கொழும்பு)

ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச நிபுணர்கள் குழுவின் இந்திய மனிதவுரிமை செயற்பாட்டாளர் அவ்தாஷ் கௌஷல் நியமனம் தொடர்பாக இந்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படாது என கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடும் போது, தனிப்பட்ட தொடர்புகளின் அடிப்படையிலேயே இந்திய நிபுணர் உள்ளடக்கப்படுவதற்கு சாத்தியங்கள் உள்ளன.

இது இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாட்டைப் பிரதிபலிக்காது என அவர் மேலும் தெரிவித்தார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் என்ற வகையில் இலங்கையில் செயற்படும் மனித உரிமைகள் பாதுகாவலர்களின் நம்பகமான பாதுகாவலராக நவநீதம்பிள்ளை சேவையாற்றியுள்ளார்.

உரிமைகள். பாதுகாவலர்களின் நம்பகமான பாதுகாவலராக இவர் சேவையாற்றியுள்ளார்.

உயர் ஆணையாளர் என்ற முக்கிய பங்கை வகித்த இவர் உலகெங்கும் செயற்பட்ட மனித உரிமைகள் பாதுகாவலர்களை சிறந்த முறையில்

நிலவிய நிறவெறி ஆட்சியாளருக்கு சவாலாக மாறினார். நற்றல் மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட முதலாவது கறுப்பின சட்டவாளராக நவநீதம்பிள்ளை விளங்கியமை வெள்ளையின ஆட்சியாளர்களுக்கு சவாலாக உருவாகியது. இதன் பின்

னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இவர்மீது எந்தவொரு அரசாங்கமும் பழி சுமத்தவில்லை. நவநீதம்பிள்ளை, பாலஸ்தீனத்தின் மீது ஆதரவாகச் செயற்பட்டு இஸ்ரேலைக் கண்டித்தமை தொடர்பில் பாரபட்சமாக நடந்துகொண்டதாக ஐ.நா.

பட்டுள்ளனர் என்பதற்கு நம்பகமான சாட்சியம் உள்ளதாக மே 2009 இல் அவர் தெரிவித்திருந்தார். போரின்போது இழைக்கப்பட்ட மீறல்களுக்கும் அப்பால் ராஜபக்சாக்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட மீறல்களை ஐ.நா. விசாரணை

# எமது நாட்களில் நவநீதம்பிள்ளை ஒரு "கதாநாயகி"

இவ்வாறு இலங்கை மனித உரிமை செயற்பாட்டார் சுனந்த தேசப்பிரிய எழுதிய பத்தியிலிருந்து...........



ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் மிக நீண்டகாலமாக ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளராகப் பதவி வகித்த நவநீதம்பிள்ளை இம்மாத இறுதியில் தனது சேவைக்காலத்தை நிறைவு செய்கிறார். இவர் எங்களில் ஒருவர். ஏனெனில் இவர் கடந்த காலங்களிலும் தற்போதும்கூட மனித உரிமைப் பாதுகாவலராக சேவையாற்றி வருகிறார்.

2008 செப்ரெம்பரில் ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளராக நவநீதம்பிள்ளை நியமிக்கப்பட்டபோது இவர் ஒரு மனித உரிமைகள் பாதுகாவலர் என அறிமுகப்படுத்தப்பட்டார். இவர் அவ்வாறான ஒருவராகவே இப்பதவியிலிருந்து நீங்கிச் செல்கிறார்.

அண்மையில் ஜெனிவாவைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமை அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து நவநீதம்பிள்ளைக்கு மாலைநேர பிரிவுபசார விழா ஒன்றை நடாத்தின. "நான் இந்தப் பதவியை விட்டுச்செல்லும் போது உங்களுடன் மனித உரிமைகள் பாதுகாவலராக மீண்டும் இணைந்து கொள்வேன்" என பிரிவுபசாரநிகழ்வில்நவநீதம்பிள்ளை தெரிவித்திருந்தார்.

மனித உரிமைகளை மேலும் முன்னேற்றுவதற்கும் பாதுகாப்பதற்கும் ஒருபலமான பரந்தளவு வலைப்பின்னல் தேவைப்படுகிறது. இன்று, இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்சவின் அரசியல் திட்டமானது ஒரு சவாலாகக் காணப்படுகின்ற நிலையில் இவ்வாறானதொரு வலைப்பின்னல் மூலம் இதனைத் தீர்க்க முடியும். இவ்வாறானதொரு பலமான பரந்தளவு விரிவுபட்ட வலைப்பின்னல் இல்லாததாலேயே இலங்கையின் ஊடக, சட்ட மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் தொடர்ந்தும் இலக்கு வைக்கப்படுகின்றனர். நவநீதம்பிள்ளை எமக்கு உதவியுள்ளார். இலங்கையில் வாழும் அனைத்து மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கும் உதவியுள்ளார். அதாவது ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் எமது உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததன்மூலம் எமக்கு உதவியுள்ளார். மனித உரிமைகளுக்காக உயர் ஆணையாளர் என்ற வகையில் இலங்கையில் செயற்படும் மனித

பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளார். மனித உரிமைகளைப் பாதுகாக்கும் செயற்றிட்டத்தில் நவநீதம்பிள்ளை அவர்களின் பங்களிப்பு மிகப்பெரிய சாதனைகளை அடைந்துள்ளது.

செப்ரெம்பர் 12 அன்று இடம் பெறவுள்ள ஸ்ரீவோ பைக்கோ ஞாபகார்த்த கருத்தரங்கின்போது உரை நிகழ்த்துமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனால் நான் எனது நாட்டிற்குத் திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது. தென்னாபிரிக்காவில் மட்டுமல்லாது உலகெங்கும் அடக்கப்படும் மக்களுக்கு சார்பாக மனித உரிமைகள் பாதுகாவலர்களாக நாங்கள் செயற்பட வேண்டும். உலகெங்கும் செயற்படும் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தொடர்பானதகவலை என்னிடம்தயவுசெய்து பகிர்ந்து கொள்ளுங்கள் என ஜூலை 21 அன்று இடம்பெற்ற பிரிவுபசார நிகழ்வின் போது நவநீதம்பிள்ளை தெரிவித்தார். (ஸுவோ பைக்கோ என்பவர் தென்னாபிரிக்காவில் இடம் பெற்ற கறுப்பு நிறவெறிக் கொள்கைக்கு எதிரான அமைப்பில் செயற்பட்ட முதன்மை இளம் செயற்பாட்டாளராவார். இவர் வெள்ளை நிற ஆட்சியாளர்களால் சித்திரவதைப்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்)

**எமது நாட்களில் நவநீதம்பிள்ளை ஒரு கதாநாயகியாக உள்ளார்.**

நவநீதம்பிள்ளை சாதாரண ஒரு குடும்பத்தில் பிறந்தார். இவர் தனது முயற்சியால் கல்வி பயின்றார். நிறவெறி ஆட்சியை முடிவுக்குக்கொண்டு வருவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் இவர் தனது காலத்தையும் அறிவையும் செலவு செய்தார். மனித உரிமைகளுக்காக எவ்வித அச்சமுமின்றி போராடிய நெல்சன் மண்டேலா அவர்களின் பண்புகளை இவர் கடைப்பிடிக்கிறார். தனது 26 ஆவது வயதில் தென்னாபிரிக்காவில்

ணர், ஒரு மில்லியன் வரையான மக்கள் படுகொலை செய்யப்பட்ட றுவாண்டாவின் இனப்படுகொலையை விசாரணை செய்வதற்கான அனைத்துலக விசாரணைக் குழுவின் தலைவராகக் கடமையாற்றினார்.

ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் பதவியானது நவநீதம்பிள்ளை அவர்களது வாழ்வை அலங்கரித்தாலும் கூட, ஐ.நா மனித உரிமைகள் பேரவையை அலங்கரிக்கின்ற ஒருவராக இவர் சேவையாற்றியுள்ளார் என்பதே உண்மையாகும்.

இது ஒரு மகிழ்ச்சியான தருணம். ஏனெனில் அது ஆபிரிக்காவுக்குக் கிடைத்த அங்கீகாரமாகும். மனித உரிமை மீறல்கள் என்பது தொடர்பாக போதியளவு அறிவைப் பெற்றுள்ளதன் காரணமாக நான் இந்தப் பதவியை ஏற்கிறேன். எந்தவொரு நீதியும் வழங்கப்படாது. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நான் பல ஆண்டுகால அனுபவங்களைப் பெற்றுள்ளவன் என்ற வகையில் நான் இந்தப் பதவியை ஏற்கிறேன். இதனை நிறவெறிக்கு எதிரான போராட்டம் எனக்கு கற்பித்துள்ளது என 2008 இல் ஐ.நா மனித உரிமைகளுக்காக உயர் ஆணையாளராகப் பதவியேற்ற பின்னர் நவநீதம்பிள்ளை அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக அவர் இதனைத் திறம்பட முன்னெடுத்துள்ளார். உலகெங்கும் வாழும் அடக்கப்பட்ட மக்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் இடம்பெறக்கூடாது என்பதை இவர் தனது பதவிக் காலத்தில் வலியுறுத்தியுள்ளார். இவரது பதவிக்காலத்தில் மனித உரிமைகள் பேரவையானது, இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் சிவில் உரிமைச் சூழல் தொடர்பில் இடையறாத கவனத்தைச் செலுத்தியுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளராக நவநீதம்பிள்ளை பதவியேற்ற ஆண்டில் அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட்ட இலங்கை, ஐ.நாவில் தோற்கடிக்கப்பட்டது. ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் உறுப்புரிமையைப் பெறுவதற்கான முயற்சியில் இலங்கை தோல்வியடைந்தது. ஐ.நா பொதுச் சபையால் நியூயோர்க்கில் வழக்கப்பட்ட ஒரு வாக்கால் இலங்கை தோல்வியடைந்தது. இப்போக்கானது 2014 வரை தொடர்[illegible] எதிராக நவநீதம்பிள்ளையால் முன்

கண்காணிப்பகம் என்கின்ற அமைப்பு இவர்மீது குற்றம் சுமத்தியது தவிர வேறு சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

நவநீதம்பிள்ளை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் எனவும் மேற்குலகின் கையாள் எனவும் ராஜபக்ச அரசாங்கத்தால் குற்றம் சுமத்தப்பட்டார். ராஜபக்ச அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அடக்குமுறைக் கடப்பாட்டை நியாயப்படுத்துகிறது என்பது தெளிவாகும். தமிழீழ விடுதலைப் புலிகளும் மனித உரிமை மீறல்களைப் புரிந்துள்ளார்கள் என்பதை ஆரம்பத்திலிருந்தே நவநீதம்பிள்ளை மிகவும் ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளார் என்கின்ற காரணியை இலங்கை அரசாங்கம் மறைத்துள்ளது.

போர் வலயத்திலிருந்து பொது மக்கள் வெளியேறுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தடை விதித்திருந்தனர் என்கின்ற குற்றச்சாட்டை மிகச் சரியான வகையில் விசாரணை செய்ய வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள், பலவந்தமாக மக்களைப் படையினர் இணைத்தமை, மக்கள் மத்தியில் ஆயுதங்களைப் பயன்படுத்தி மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியமை தொடர்பில் அறிக்கைகள் வெளிவந்துள்ளன. போர் வலயத்தை விட்டுத் தப்பிச் செல்லும் மக்கள்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டமை, இடம்பெயர்ந்த மக்களிருந்த சோதனைச்சாவடியில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் மேற்கொண்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன என மே 2009 இல் மேற்கொள்ளப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் சிறப்புத் தொடர்பில் அவர் அறிவித்திருந்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த தலைவர்கள் தவிர அனைத்து தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் மன்னிப்பு வழங்கப்படும் என இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால், போர்க் குற்றங்கள், இனப்படுகொலை, மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் தீவிர மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை மேற்கொண்டவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதானது அனைத்துலகச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படவில்லை என நவநீதம்பிள்ளை அவர்கள் வலியுறுத்தியிருந்தார்.

போரின் போது குற்றங்களில் ஈடுபட்ட இரு தரப்பினரும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என நவநீதம்பிள்ளை எப்போதும் வலியுறுத்தியுள்ளார்.

அனைத்துலக விசாரணை மட்டுமே ஒரேயொரு தீர்வு என்பதை சாட்சிப்படுத்தும் தீவிர மனித உரிமை மீறல்களில் இரு தரப்பினரும் ஈடு

செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவே நவநீதம்பிள்ளையின் அணுகுமுறையின் முக்கிய பங்கு காணப்பட்டது. ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் என்ற பதவியை ஏற்றுக் கொண்ட பின்னர் நவநீதம்பிள்ளை அவர்கள் இலங்கையில் நிலவிய மனித உரிமைச் சூழலை அனைத்துலகின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

போருக்குப் பின்னரான அபிவிருத்திகள் தொடர்பான நவநீதம்பிள்ளையின் நிலைப்பாடு சரியானது என்பதை வரலாறு எமக்குத் தற்போது காண்பிக்கின்றது. போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு ராஜபக்ச அரசாங்கமானது தனது சொந்த விசாரணைக்குழுவை அமைத்தது. ஐந்து ஆண்டுகள் என்பது வரலாற்றில் மிகச் சிறிய வரலாறாகும். இன்று இலங்கையில் நிலவும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான நம்பகமான விசாரணைக்கு எவ்வித இடைவெளியும் இல்லை என்பதை கடந்த ஐந்து ஆண்டுகால செயற்பாடுகள் காண்பிக்கின்றன. வன்முறைகள் தொடர்பான பட்டியல் நீண்டு செல்கிறது ஆனால், இவை தொடர்பாக இன்னமும் நம்பகமான விசாரணை மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள ராஜபக்சாக்களை அழிக்கும் ஆவியாகவே மனித உரிமைகள் காணப்படுகின்றன. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த அனைவரும் இன்று இலங்கையுடன் வர்த்தக சங்கங்கள், மாணவர் அமைப்புகள், சிவில் அமைப்புகள் மற்றும் அரச படைகள் போன்றன தொடர்பைப் பேணாதிருக்க வில்லை. தாம் சுடப்படலாம் என்கின்ற அச்சத்தில் வாழும் சிறைக் கைதிகள்கூட ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் முறையிடுமாறு தமது குடும்பத்தினரை வலியுறுத்துகின்றனர்.

இலங்கையில் போருக்குப் பின்னர் படுகொலை செய்யப்பட்டவர்கள், இலங்கையில் இன்றும் தொடரும் அடக்குமுறை ஆட்சி போன்றவற்றுக்கு எதிராக நீதி மற்றும் பொறுப்பளித்தல் கோரிப் போராடும் ஜனநாயகப் போராட்டத்தின் நிலைத்திருக்கும் கோபுரமாக நவநீதம்பிள்ளை விளங்குகிறார். அவர் தனது எதிர்காலத்தில் வெற்றியடைய நாம் அனைவரும் வாழ்த்துவோம்.

வரலாறானது நீதி மற்றும் மனித உரிமைகளின் பக்கம் நிற்கின்றதே தவிர, அடக்குமுறை ஆட்சியாளர்கள் மற்றும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு சார்பாகக் காணப்படவில்லை.

-**இணையம்**-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களை பாதுகாக்க நடவடிக்கை

## பாதுகாப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் தகவல்



(கொழும்பு)

நாட்டில் அதிகரித்து வரும் சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்தவும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும் சிறுவர்களது நலன் கருதியும் அவர்களைப் பாதுகாப்பதற்காக மாகாண மட்டத்தில் பாதுகாப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

இந்த பாதுகாப்பு நிலையங்களை அமைப்பதற்காக 226 மில்லியன் ரூபா நிதி ஒதுககப்பட்டுள்ளது.

வட மாகாணம், கிழக்கு மாகாணம், வட மத்திய மாகாணம், ஊவா மாகாணம், மேல்மாகாணம், மத்திய மாகாணம் போன்ற ஆறு மாகாணங்களிலும் இந்த நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தச் செயற்றிட்டத்திற்கான காசோலையை அந்தந்த மாகாணங்களுக்கான செயலாளர்களிடம் திஸ்ஸ கரலியத்த வழங்கி வைத்தார்.

வடக்கு மாகாணத்தில் கோப்பாய், மருதங்கேணி மற்றும் கரையோர பகுதிகளிலும் இந்த பாதுகாப்பு மத்திய நிலையங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. (6)

# விமர்சனங்களைத் தடுக்க நீதிமன்ற உதவி பெறப்படும்

## கல்வி அமைச்சு



(கொழும்பு)

பரீட்சை நடைபெறும் காலத்தில் அந்தப் பரீட்சைகள் தொடர்பில் விமர்சனம் செய்யப்படுவதனை தடுக்க நீதிமன்றின் உதவி நாடப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பரீட்சை நடைபெறும் காலத்தில் இவ்வாறு விமர்சனம் செய்யப்படுவதனால் மாணவர்களின் மன நிலைமை பாதிக்கப்படுகின்றது.

உச்ச நீதிமன்றின் உத்தரவு ஒன்றை பெற்றுக் கொள்ளும் முயற்சியில் கல்வி அமைச்சு ஈடுபட்டுள்ளது.

பாடசாலை பரீட்சைளை சீர்குலைக்கும் நோக்கில் வேண்டுமென்றே செயற்படும் நபர்களுக்கு எதிராக பரீட்சைகள் சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கக் கூடிய சாத்தியங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, அமைச்சர் பந்துல குணவர்தன, பரீட்சைகள் ஆணையாளர் ஜே.புஸ்பகுமாரவிடம் கோரியுள்ளார்.

பரீட்சைகள் நடைபெறும் காலத்தில் பரீட்சைகள் தொடர்பில் தேவையற்ற விமர்சனங்களை வெளியிடுவது பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் உளவியலை மோசமாக பாதிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட தேவைகளுக்காக இவ்வாறு கருத்து வெளியிடப்படுவதாகவும் இதனால் மாணவர்களின் வாழ்க்கையே பாதிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# ஹெரோயின் விற்பனை; பொலிஸார் அதி தீவிரம்

## இருவர் கைது

(கொழும்பு)

பொறளை பொலிஸ் உத்தியோகத்தர்கள் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவதாக ஊடகமொன்று குற்றம் சுமத்தியுள்ளது. பொறளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் இரண்டு கான்ஸ்டபிள்கள் இவ்வாறு போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பொறளை பொலிஸாரினால் மீட்கப்பட்ட இரண்டு கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

போதைப் பொருள் கடத்துவதற்காக பயன்படுத்தப்பட்டது என்ற சந்தேகத்தின் பேரில் மீட்கப்பட்ட அலியான் ரக அதி சொகுசு வாகனமொன்றைப் பயன்படுத்தி போதைப் பொருள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களை கைது செய்துள்ளனர். பொறளை வனாத்தமுல்ல நாகவத்தைப் பிரதேசத்தில் ஆறு கோடி ரூபா பெறுமதியான பதினொரு கிலோ ஹெரோயின் போதைப் பொருளையும் 33 இலட்சம் ரூபா பணம், போதைப் பொருளை கடத்திய அதி சொகுசு வாகனம் என்பனவற்றை பொறளை பொலிஸார் கடந்த ஜூலை மாதம் 15 ஆம் திகதி மீட்டிருந்தனர்.

இதில் இரண்டு கிலோ கிராம் எடையுடைய போதைப் பொருள் களவாடப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. போதைப் பொருளை எடுத்துச் சென்ற வாகனம் விபத்துக்குள்ளானதால் சம்பவம் அம்பலத்திற்கு வந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்களின் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (6)

# ஆடைகளற்ற நிலையில் ஆணொருவரின் சடலம்

(கொழும்பு)

பதுளை -லெஜர்வத்தை தோட்டத்தில் நேற்று முன்தினம் ஆணொருவரின் சடலத்தை பதுளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

லெஜர்வத்தை தோட்டத்தை சேர்ந்த 46 வயதுடைய சூரிய பிள்ளை திருச்செல்வம் என்பவரது சடலமே நிர்வாண நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் உடைகள் களைந்தெறியப்பட்டே கொலை செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (6)

# இன்று ஒரு தகவல்

## கடிதம்

ஒரு ஆன்மீகப் பெரியவர் இருந்தார். அவரிடம் எத்தனையோ நல்லபழக்கங்கள் இருந்தது. அவரிடம்நான்பார்த்து ஆச்சரியப்பட்ட ஒரு பழக்கம் என்ன தெரியுமா?

கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் போடுவதுதான்.

இவ்வளவுக்கும் அவர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஊருக்குப் போய் பக்திப் பிரசங்கம் செய்து கொண்டிருப்பார்.

கடிதம் போடுபவர்கள் தெரிந்தவர்களாக இருந்தாலும் சரி, தெரியாதவர்களாக இருந்தாலும் சரி உடனே ஒரு "காட்"டில் இரண்டு வரி எழுதிப் போட்டுவிடுவார். போட்டவர்கள் மனதில் நிறைந்து விடுவார்.

நம்மில் பலருக்கு அந்தப் பழக்கம் இல்லை! பதில்போட வேண்டும் என்று நினைத்தே காலத்தைக் கடத்தி விடுவோம். நாம் போடுவதற்குள் அவரே புறப்பட்டு நேரில் வந்து விடுவர்.

மனித நேயத்தைக் காட்டுவதற்கு "கடிதம்" ஒரு முக்கியமான சாதனம் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டும் அவ்வளவுதான்.

இன்றைக்கு ஒரு கடிதம் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். இன்றைக்கே அதற்கு ஒரு பதிலை எழுதிப் போட்டு விட்டால், அவர் நெஞ்சில் நாம் ஒரு தனி இடத்தைப் பிடித்து விடுவோம்.

இன்னொரு விடயம்: கடிதத்தில் இடம் தாராளமாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்டு அதில்போய் புராணமெல்லாம் எழுதிக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

அதே நேரத்தில் "நலம், நலமறிய அவா" என்ற இரண்டு வார்த்தையில் முடித்துக் கொண்டு, "இப்படிக்கு" என்று எழுதி கையெழுத்துப் போட்டாலும் அது நன்றாக இருக்காது.

ஒரு கடிதம் "வளவள" என்று நீளமாகவும் போகக்கூடாது. இரண்டு வரியிலும் முடியக் கூடாது. அளவாக கருத்தோடு இருக்க வேண்டும்.

அலுவலக கடிதங்களை "ரைப்" அடிக்கலாம். வேறொருவர் உங்களுக்காக கையெழுத்துப் போடலாம். ஆனால் மனைவிக்கோ-நண்பர்களுக்கோ எழுதும் கடிதங்களை நீங்கள் உங்கள் கைப்படவே எழுத வேண்டும். அது தான் மரியாதை!

ரைப்ரைட்டர் கடிதங்களில் "இதயம்" தெரியாது இயந்திரம் தான் தெரியும்! கடிதத்தில் எந்த விடயத்தையும் மிகைப்படுத்தக் கூடாது... படிப்பவர்கள் மனம் புண்படக்கூடாது. திட்டி எழுதவும் கூடாது.பின்னர் அது இடைஞ்சலாகக் கூட முடியலாம். எதிரான சாட்சியாகவும் அமையலாம்!

நீங்கள் விளையாட்டாக ஒருவரைக் "கொன்று விடுவேன்" என்று தமாஷாக "கடிதம்" எழுதுகிறீர்கள்; அந்த ஆசாமியை நிஜமாகவே ஒருவர் "கொன்று விடுகிறார்."

அதன் பின்னர் நீங்கள் எழுதிய கடிதம் பொலிசுக்கு கிடைக்கிறது. என்ன ஆகும் என்று யோசித்துப் பாருங்கள். நீங்கள் நிரபராதி என்று நிரூபித்து விடலாம்... இருந்தாலும் அவஸ்தை அவஸ்தை தானே!

வரும் கடிதங்களை ஒரே இடத்தில் ஒழுங்காக அடுக்கி வைக்க வேண்டும். பத்திரப்படுத்த வேண்டியதை பத்திரமான இடத்தில் வைக்க வேண்டும்.

இது யார் கண்ணில் படப்போகிறது என்று நீங்கள் அலட்சியமாக இருக்கலாம்-ஆனால் பட்டுவிடும்... அதன் பின் உங்களுக்கு தான் கஷ்டம்!

இன்னொரு முக்கியமான விடயம்: ஆண்கள் பெண்களுக்கு எழுதும் சமயத்திலும் பெண்கள் ஆண்களுக்கு எழுதும் சமயத்திலும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

வார்த்தைகளுடைய அர்த்தம் மாறிவிடாமல் ஜாக்கிரதையாக எழுதவேண்டும். யதார்த்தமாக நீங்கள் எழுதியிருந்தீர்கள். படிக்கும்போது அதில் புதிதாக ஒரு அர்த்தம் இருப்பதுமாதிரி தோன்றும்.

நான் அந்த அர்த்தத்தில் எழுதவில்லை என்று. அதன் பின் அல்லாட வேண்டியிருக்கும்! யாருக்கும் எழுதும் கடிதமாக இருந்தாலும் சரி... எழுதி முடிந்ததும் ஒருமுறை படித்துப் பார்த்து விடுவது நல்லது. சின்ன எழுத்துப் பிழைகூட விபரீதமான அர்த்தத்தை உண்டாக்கலாம்.

ஒரே சமயத்தில் பல கடிதங்கள் எழுதும் போது கவரும் கடிதமும் மாறிப்போய் விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

முகவரி எழுதும் போது அவசரமில்லாமல் தெளிவாக எழுத வேண்டும். சரியான அளவுக்கு முத்திரை ஒட்டவேண்டும். வாங்குபவன் DUE கட்டிக் கொள்ளட்டும் என்று விட்டு விடக் கூடாது. ஒரு தபால் பெட்டிக்கு முன்னால் ஒருவர் பரிதாபமாக முழித்துக் கொண்டிருந்தார். "என்ன நடந்தது?" என்று கேட்டார் இன்னொருவர்.

"ஒரு தப்பு நடந்து விட்டது சேர். ஒரு கவரை இந்தப் பெட்டிக்குள் போட்டு விட்டேன். அந்த கவருக்குள் வைக்க வேண்டிய கடிதத்தை வைக்க மறந்து விட்டேன்!" என்றார்.

இதைக் கேட்டதும் மற்றவர், "நான் கவருக்குள் கடிதத்தை வைத்து ஒட்டி சரியாகத்தான் போட்டேன். இருந்தாலும் ஒரு தவறு நடந்து விட்டது என்றார்.

"அது எப்படி?" என்றார் மற்றவர்.

"விலாசம் எழுத மறந்துவிட்டேன்!" என்றார் அவர்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறிப்பு பால வேலையில் நிதி மோசடி; அரச அதிபர் நடவடிக்கை எடுப்பாரா?








(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுமாவட்டகரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள குமாரபுரம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள முறிப்பு-உடுப்புக்குள வீதி மூன்று கிலோ மீற்றர் தூரத்தை கொண்டதாகும்.

குறித்த கிராம சேவையாளர் பிரிவில் 352 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவர்கள் அனைவரும் 2011 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப் பட்டவர்களாவர்.

முறிப்பு-உடுப்புக்குள வீதியின் இரு மருங்கிலும் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

குறித்த வீதியின் மையத்தில் பாலம் ஒன்று 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அக்ரட் (ACTED) நிறுவனத்தினால் அமைக்கப்பட்டது.

அமைக்கப்பட்ட பாலம் அவ்வாண்டின் இறுதிப் பகுதியிலேயே இடிந்து விழுந்தது.

குறித்த பாலம் அமைக்க அந் நிறுவனம் ஆறு இலட்சம் ரூபா நிதியொதுக்கீடு செய்து முறிப்பு கிராம அபிவிருத்தி சங்கத்திடம் ஒப்படைப்பதாக அக்ரட் நிறுவனத்தினால் மக்களிடம் கூறப்பட்டது.

இவற்றினை புறந்தள்ளிவிட்டு தென்னிலங்கையைச் சேர்ந்த ஒப்பந்தகாரர்களிடம் குறித்த பால வேலையை அக்ரட் நிறுவனம் ஒப்படைத்தது.

ஆனால் கட்டி முடிக்கப்பட்ட பாலத்தின் வேலைகளை மதிப்பீடு செய்த போது அது 3 இலட்சமாகக் காணப்பட்டது.

பாலத்திற்காக ஒதுக்கப்பட்ட ஆறு இலட்சம் ரூபா நிதியும் இப்பால வேலைக்கு பூரணமாக பயன்படுத்தப்படவில்லையென இதன் மூலம் தெரியவந்தது.

மிகுதி நிதிக்கு என்ன நடந்தது என மக்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

குறித்த பால வேலையில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றது வெளிச்சத்திற்கு வந்தது.

கொக்கிளாய், கருநாட்டுக் கேணி, கொக்குத் தொடுவாய், செம்மலை, நாயாறு, அலம்பில் ஆகிய இடங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் முல்லை.மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சென்று வர குறுந்தூர பாதையாக இதனை பயன்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை உடுப்புக்குளம், சிலாவத்தை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் குமுழமுனை தண்ணிமுறிப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள தமது சொந்த விவசாய காணிகளுக்கு சென்று வர குறித்த பாதையினையே பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் முறிப்பு தமிழ் வித்தியாலய மாணவர்களும் இப்பாலத்தைக் கடந்தே பாடசாலைக்கு சென்று வருகின்றனர்.

மழை காலங்களில் பாலத்தை மூடி வெள்ளம் பாய்வதால் பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் அவ் வழியாக பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டு வருகிறது.

மாரி காலங்களில் வீட்டிலிருந்து மாணவர்கள் நிற உடையுடன் அப்பாலத்தினூடாக சென்று மறு கரையில் பாடசாலை சீருடை அணிந்து செல்லும் நிலை காணப்படுகிறது.

தற்போது பாலம் இடிந்து இரு வருடங்கள் கடந்துள்ள நிலையில் முறிப்பு கிராம மக்களால் இடிந்த பாலம் தொடர்பாக முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர், கரைதுறைப் பற்று பிரதேச செயலர், கிராம சேவையாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே இவ்விடயம் தொடர்பில் முல்லை.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கவனத்தில் எடுத்து மாரி காலத்திற்கு முன்னர் இப்பாலத்தையும் மூன்று கிலோ மீற்றர் வீதியையும் புனரமைத்து தருமாறு கிராம மக்களால் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. (2-267)

## விபத்துக்குள்ளானவர் கோமா நிலையில்


வவுனியா பூந்தோட்டம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கியவர் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த 7 ஆம் திகதி வவுனியா பூந்தோட்டம் பகுதியில் வீதியால் துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்த ஒருவர் மீது மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் மோதியதில் துவிச்சக்கர வண்டியில் வந்தவர் தலையில் காயமடைந்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேற்படி நபர் கோமா நிலைமைக்கு உள்ளாகியுள்ளார்.

இச் சம்பவத்தில் சிக்கி கோமா நிலைமைக்கு உள்ளானவர் வவுனியா மகாறம்பைக் குளத்தைச் சேர்ந்த எஸ்.கனகரட்ணம் (வயது 67) என்பவராவார். (2-250)




## மதகினை புனரமைத்து வீதியை செப்பனிடுவது எப்போது?



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சாந்தபுரத்தையும் முல்லை. மாவட்ட செல்வபுரத்தையும் இணைக்கும் இவ் இரண்டு பிரதான வீதியானது கடந்த 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் இடம்பெற்று இதுவரைகாலமும் புனரமைக்கப்படாது காணப்படுகிறது.

சாந்தபுர வீதியில் கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம் அமைந்துள்ளது. குறித்த பாடசாலைக்கு மிக அருகில் உள்ள வீதியை ஊடறுத்து மதகொன்று அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது இம்மதகு சேதமடைந்து பல மாதங்களாக கவனிப்பாரின்றி போக்குவரத்திற்கு இடையூறாக அமைந்துள்ளது.

இவ்வீதியூடாக, கனரக வாகனங்கள், நோயாளர் காவு வண்டி, பாடசாலை மாணவர்கள் என பல தரப்பினர் பயணித்து வருகின்றனர்.

இவ்வீதியானது கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்டதாகும்.

இது தொடர்பாக கிராம அமைப்புக்கள், நலன்விரும்பிகள் என பல தரப்பினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் அதற்கான நடவடிக்கைகள் இதுவரைகாலமும் மேற்கொள்ளப்படவில்லையென பயணிகளால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

எனவே மழைகாலம் அண்மித்து வருவதால் குறித்த வீதியினை புனரமைத்து மதகினை சீர்செய்யுமாறு மக்களால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கப்படுகிறது. (2-27)

## கிராம அபிவிருத்தி சங்கத்தினால் வேலைத்திட்டங்களில் நிதி மோசடி

### விசாரணைக்குழுவினால் அம்பலம்

(மல்லாவி)

ஒட்டுசுட்டான்பிரதேசசெயலகபிரிவிலுள்ள பண்டாரவன்னி கிராமத்தில் கடந்த ஆண்டு கிராம அபிவிருத்தி சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட 27 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா நிதி மோசடி முல்லை.மாவட்ட அரச அதிபரினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினால் உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் முல்லை.மாவட்ட பொலிஸாரினால் இதற்கான விசாரணைகள் நடைபெற்று வந்த வேளை வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனின் பணிப்புரைக்கமைய உடன் விசாரணைகளை நிறுத்தி ஒட்டுசுட்டான் பதில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் மீள ஆரம்பிக்குமாறு தனக்கு பணிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியன் முல்லை.மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகருக்கு அவசர கடித மூலம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

மேற்படி பண்டார வன்னி கிராமத்தில் கிராம அபிவிருத்தி சங்கத்தின் கடந்த 2013 ஆம் ஆண்டு நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட 151 பொதுமக்களுக்கான மலசலகூடங்கள் அமைத்தல் மற்றும் மணல் விற்பனை உட்பட பல பொது வேலைத்திட்டங்களில் நிதி மோசடி இடம்பெற்றதாக முல்லை.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனுக்கு மேற்படி கிராம மக்கள் வழங்கிய முறைப்பாட்டினையடுத்து அரச அதிபர் முல்லை.கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் விசாரணைகுழு ஒன்றை அமைத்தார்.

அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட குழு கணக்காய்வு செய்த போது மலசலகூடம் அமைத்தலின் போது 22 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாவும் மற்றும் மணல் விற்பனை மூலம் 5 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 27 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா நிதி மோசடி செய்யப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து முல்லை. மாவட்ட பொலிஸாரிடம் அரச அதிபரின் பணிப்புரைக்கு அமைய ஒட்டுசுட்டான் பதில் பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் முல்லை.பொலிஸார் கடந்த 10 ஆம் திகதி 151 மலசலகூடங்கள் அமைத்து கொடுக்கப்பட்ட பொது மக்களிடமிருந்து வாக்கு மூலங்களைப் பதிவு செய்தனர்.

இந்நிலையிலேயே தற்போது குறித்த வழக்கை இடைநிறுத்தி மீளவும் ஒட்டுசுட்டான் பதில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருடன் இணைந்து முல்லை.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரை விசாரித்து இதுதொடர்பான அறிக்கையொன்றை வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினூடாக அனுப்பி வைக்குமாறு வடமாகாண மீன்பிடி போக்குவரத்து கிராம அபிவிருத்தி அமைச்சர் பணித்துள்ளதாக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளரினால் முல்லை.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரை நியமியுங்கள்

## முல்லை. அரச அதிபருக்கு மக்கள் கோரிக்கை

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தர கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு அப்பகுதி மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகத்திடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர்.

அக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் வன்னி யுத்த இடப்பெயர்வின் பின்னர் 5 ஆயிரத்து 600 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளனர்.

இந் நிலையில் கிராம மட்டங்களில் கிராம அபிவிருத்திகளை முன்னெடுத்து செல்வதற்காக பல கிராம அபிவிருத்திச் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன.

இச் சங்கங்கள் ஊடாக பொது மக்களுக்கான சமூக வேலைத் திட்டங்களான மணல் விற்பனை, அரைக்கும் ஆலைகள், எண்ணெய் ஊற்றும் ஆலைகள், சுழற்சி முறை கடன் திட்டங்கள், கிணறு அமைத்தல், மலசல கூடங்கள் அமைத்தல் ,உள்ளூர் வீதிகள் புனரமைப்பு செய்தல் உட்பட பலதரப்பட்ட வேலைத் திட்டங்கள் அரசாங்கத்தினாலும் பல சமூக அமைப்புக்களாலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க பல இலட்சக்கணக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

அவ்வாறு நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டு நடைபெறும் வேலைத் திட்டங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்களினால் சீரான முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றதா என்பதை கண்காணிக்கவும் கிராம மட்டங்களில் எவ்வாறான உதவிகள் தேவையென்பதையும் கண்டறிந்து பிரதேச செயலகர் ஊடாக முல்லை மாவட்ட அரச அதிபருக்கு எடுத்துரைக்க வேண்டிய பொறுப்பு இக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு காணப்படுகின்றது.

எனவே இவற்றினை கருத்தில் கொள்ளும் போது தமது பிரதேசத்திற்கு நிரந்தர கிராம உத்தியோகத்தர் இல்லாதிருப்பது வேதனையளிக்கின்ற விடயமாகும் .

இதனால் தாம் பாதிக்கப்படுவதாகவும் அதனால் நிரந்தரமாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரை விரைவில் நியமித்து தருமாறு அக் கோரிக்கையில் மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# கருத்தரங்கும் வினாவிடை பாடநூல் வழங்கலும்

(மல்லாவி)

துணுக்காய், முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு ஆகிய கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் இருந்து இவ்வாண்டு க.பொ.த (சா/த) தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் சித்தி வீதத்தை அதிரிக்கும் நோக்குடன் கொழும்பைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணி வே.தேவசேனாதியின் அனுசரணையுடன் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடங்களுக்கான இலவச கருத்தரங்கும் இலவச வினா விடை பாடநூல்கள் வழங்கலும் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் நடைபெறுமென துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

குறித்த செயலமர்வில் பிரபலமான ஆசிரியர்கள் கணிதம், வரலாறு, விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் உட்பட ஏனைய பாடங்களுக்கு கருத்துரைகளை ஆற்றவுள்ளனர்.

அத்தோடு கடந்த 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சை பாடங்களான கணிதம், வரலாறு, தமிழ், விஞ்ஞானம் கடந்த 17 வருடங்களாக கணித பாடத்தில் நடைபெற்ற மேற்படி பரீட்சை புத்தகங்கள் உட்பட அனைத்து பாடங்களின் வினாவிடைப் புத்தகங்களுக்கும் இலவசமாக வழங்கப்படவுள்ளாக அவர் தெரிவித்துள்ளார். (2-15)

# கட்டுப்பாடுகள் விதிக்குமாறு அந்தணர் ஒன்றியம் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியாவில் அறநெறி வகுப்புக்கள் இடம் பெறுகின்ற போது தனியார் கல்வி நிலையங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்குமாறு அந்தணர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

வவுனியா நகரப்பகுதியில் இயங்குகின்ற தனியார் கல்வி நிலையங்களை கட்டுப்படுத்தி அறநெறி வகுப்புக்கள் நடத்த உதவி செய்யுமாறு வடமாகாண முதலமைச்சர் சி.வி விக்கினேஸ்வரன், வடமாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜாவிடம் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அறநெறி வகுப்புக்கள் நடைபெறுகின்றபோது தனியார் பிரத்தியேக வகுப்புக்களை தடைசெய்வது தொடர்பாக வவுனியா அந்தணர் ஒன்றிய பிரதிநிதிகள் வடமாகாண முதலமைச்சரையும் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவையும் சந்தித்து கலந்துரையாடி வேண்டுகோள் கடிதம் ஒன்றை கையளித்துள்ளனர்.அதில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

எமது இன, மத, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பேணும் வகையில் பிரதி ஞாயிறு பௌர்ணமி விடுமுறை தினங்களில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை அறநெறி வகுப்புக்கள் நடைபெறுவது நாங்கள் அறிந்ததே.

இவ் வகையில் அறநெறி வகுப்புக்கள் நடைபெறும் நேரங்களில் தனியார் கல்வி நிலைய வகுப்புக்கள், பிரத்தியேக வகுப்புக்கள், கலை வகுப்புக்கள் நடைபெறுவது அறநெறி வகுப்புக்களின் செயற்பாடுகளுக்கு பெரும் தடையாக இருந்து வருகின்றது.

ஆகவே அறநெறி வகுப்புக்களை தடையின்றி நடத்துவதற்கும் மாணவர் வருகையை முழுமையாக்குவதற்கும் பிரதி ஞாயிறு பௌர்ணமி விடுமுறை தினங்களில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை அனைத்து தனியார் கல்வி நிலைய வகுப்புக்கள், பிரத்தியேக வகுப்புக்கள், பிற கலை வகுப்புக்களை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள் கின்றோம்.

மேலும் தங்களுடைய மாகாண சபைகளுக்கு அதற்குரிய அதிகாரம் பூரணமாக உள்ள காரணத்தினாலும் ஏற்கனவே வேறு மாகாண பிரதேச சபைகளில் இத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வரு வதாலும் வடமாகாண சபையில் இத் தீர்மானத்தையும் அதனூடாக நடவடிக்கையையும் நடைமுறைப்படுத்துமாறு கேட்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-250)

# திருப்பணி உண்டியல் பணம் திருடர்களால் அபேஸ்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மலையாளபுரம் கற்பகபுரி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் திருப்பணி உண்டியலில் இருந்த பல இலட்சம் ரூபாய் பணம் திருடர்களால் களவாடப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கடந்த செவ்வாய் கிழமை இரவு இடம்பெற்றது. இது தொடர்பாக தெரியவருவதாவது,

மேற்படி ஆலய திருப்பணி உண்டியல் தூக்கிச்செல்லப்பட்டு ஆலய பின்புற பகுதியில் வைத்து உடைக்கப்பட்டு அதனுள் இருந்த பல இலட்சம் ரூபாய் பணம் களவாடப் பட்டுள்ளது.

குறித்த ஆலயத்திற்கு தினசரி நூற்றுக்கணக்காண பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்வது வழமையாகும்.

சுமார் இரு வருடங்களுக்கு மேலாக திருப்பணி உண்டியல் பணம் ஆலய பரிபாலன சபையினரால் எடுக்கப்படாது இருந்த நிலையில் திருடர்கள் இதனை அவதானித்து வைத்து களவாடியுள்ளனர்.

இவ் ஆலயத்திற்கு இரவு நேர காவலாளி ஒருவர் நியமிக்கப் பட்டுள்ள நிலையில் உண்டியல் பணம் களவாடப்பட்டுள்ளது.

இக் களவு தொடர்பாக பரிபாலன சபையினரால் கிளிநொச்சி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து உண்டியலில் இருந்த கைரேகை அடையாளங்களை பதிவு செய்துள்ளதுடன் புலன் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (2-15)

# பிரிவுத்துயர் பகிர்வு

### சண்முகநாதன் சிவதயாளன்



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் சிவதயாளன் கடந்த 4 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு Hillington Community Center,Walter Pomeny Hall,Royal Lane,Uxbridge UB8 3QU,UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### இராஜதுரை லஜீவன்



யாழ். புத்தூர் வடக்கு ஏரந்தனையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Neuilly Sur marne ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராஜதுரை லஜீவன் கடந்த மாதம் 28 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10:30 மணிக்கு Institut Medical-Legal,2 Place mazas Paris 75012(Ligne(5) arret-Quai de la Rapee)என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### மகேந்திரம் சுகணன்



ஜேர்மனி Mullheim ஐ பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரம் சுகணன் கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு Hau ptfriedhof, Mulheim an der Ruhr ZeppelinstraBe, 132 45470 Mulheim an der Ruhr Germany என்னும் முகவரியில் நடைபெறும்.

### திருமதி பாலசுப்ரமணியம் ஜேன்யோகமணி



யாழ். சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் ஜேன் யோகமணி கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி நாளை மறுதினம் சனிக்கிழமை St.Marguerite D'Youville, 2490 Sandalwood Pkwy E Brampton, ON L6R 3A4 Canada.என்னும் முகவரியில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி செல்லத்தம்பி செல்லம்மா



அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி செல்லம்மா(ஓய்வு பெற்ற ஆசிரியை- யாழ். பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி) கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு South London Crematorium Rowan Road London SW16 5JG London என்னும் முகவரியில் நடைபெறும்.

### திருமதி தில்லைநாதன் மங்கையர்க்கரசி



காரைநகர், பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் 764, கே.கே.எஸ்.வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதன் மங்கையர்க்கரசி கடந்த 11 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 9 மணிக்கு தட்டா தெருவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### மாதர் தம்பித்துரை



அச்சுவேலி தெற்கு விக்கினேஸ்வரா வீதியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு, பருத்தித்துறை பிரதான வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாதர் தம்பித்துரை கடந்த 11 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு அச்சுவேலி தெற்கு, முழக்கன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் வன்முறையிலிருந்து தப்பியோடும் யாஸிடி மக்கள்









யாஸிடி இன மக்கள் ஆயிரக்கணக்கானோர் சிரியா எல்லைக்கருகே உள்ள சிஞ்சார் மலையின் வறண்ட முகடுகளில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர். சிலர் நடந்தே சிரியா எல்லையைக் கடந்திருக்கின்றனர். தங்கள் சொந்த ஊரான சிஞ்சாரைப் பிடித்த, ஈராக்கின் கிளர்ச்சிக்குழுவான இஸ்லாமிய அரசு என்ற அமைப்பின் தீவிரவாதிகள் செய்யும் வன்முறையிலிருந்து தப்ப அவர்கள் இவ்வாறு இடம்பெயர்கின்றனர். (6)

## இந்திய வீரர்கள் 20 பேர் மாயம்

### அதிர்ச்சி தகவல்

(புதுடில்லி)

நாட்டின் எல்லைப்பகுதிகளில் பணியமர்த்தம் செய்யப்பட்டிருந்த 20 இந்திய வீரர்கள் காணாமற் போனதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்கீழ் வெளியுறவுத்துறை அமைச்சகத்திடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, 1996 முதல் 2010 வரை இவர்கள் காணாமற்போனது தெரியவந்துள்ளது.

இவர்களில் 18 பேர் ஜம்மு - காஷ்மீரில் இருந்தும் 2 பேர் குஜராத்தில் இருந்தும் காணாமற்போயிருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தனது பதிலில் தெரிவித்துள்ளது.

காணாமற்போனவர்களின் பெயர்கள் மற்றும் காணாமற்போன நாட்களை பட்டியலிட்டுள்ள வெளியுறவு அமைச்சகம், அவர்கள் காணாமற்போனதன் பின்னணியில் உள்ள காரணங்களையோ, அவர்களின் தற்போதைய நிலை குறித்தோ எதுவும் குறிப்பிடவில்லை. (6)

## 130 இராணுவ ஆலோசகர்களை ஈராக் அனுப்பியது அமெரிக்கா

ஈராக்கில் அரசுக்கு எதிராக 'ஐ.எஸ்.ஐ.எஸ்.' தீவிரவாதிகள் போரிட்டு வருகின்றனர். மொசூல் உள்ளிட்ட ஈராக்கில் வடக்கு மற்றும் மேற்கு பகுதியில் உள்ள நகரங்களை பிடித்து தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

இவர்களின் முன்னேற்றத்தை தடுக்க ஈராக்குக்கு அமெரிக்கா இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. ஆனால் படைகளை அனுப்ப அமெரிக்கா மறுத்து விட்டது. அதே நேரத்தில் ஈராக் படைகளுக்கு பயிற்சி அளிக்கவும், போர் யுத்திகளை வழங்கவும் 250 இராணுவ ஆலோசகர்களை அனுப்பி வைத்தது.

தற்போது குர்தீஷ்தானில் பல இடங்களை தீவிரவாதிகள் பிடித்துள்ளனர். அங்கு தங்கியிருந்த யாஷிடி பூர்வீக குடி இன மக்கள் மற்றும் கிறிஸ்தவர்களை வெளியேற்றினர். சுமார் 50 ஆயிரம் பேர் அங்குள்ள சிஞ்சர் மலையில் தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் மேலும் 130 இராணுவ ஆலோசகர்களை ஈராக்குக்கு அமெரிக்கா அனுப்பியுள்ளது. அவர்கள் குர்தீஷ்தான் தலைநகர் இர்பிலை சென்றடைந்துள்ளனர். அங்கு தங்கி குர்தீஷ் படை வீரர்களுக்கு போர் ஆலோசனைகளை வழங்குவார்கள்.

இந்த தகவலை அமெரிக்க இராணுவ அமைச்சர் சக் ஹகெல் தெரிவித்துள்ளார். (6)

## மோடி - பிரணாப் புகழாரம் சூட்டினர்

பாராளுமன்றத்தில் சிறப்பாக சேவையாற்றிய எம்.பிக்களுக்கு விருது வழங்கும் விழா பாராளுமன்ற வளாகத்தில் உள்ள பாலயோகி அரங்கத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

2010,2011,2012 ஆம் ஆண்டுகளின் சிறந்த எம்.பி.க்களுக்கான விருது அருண் ஜெட்லி, கரண் சிங், சரத் யாதவ் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இவ்விழாவின் போது தலைமை உரையாற்றிய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, முதன்முதலாக பாராளுமன்றத்தில் நுழைந்த போது வாசற்படியின் தரையில் விழுந்து வணங்கிய பிரதமர் மோடியின் பண்பினை இவ்விழா மேடையில் ஜனாதிபதி பாராட்டினார்.

பின்னர் ஜனாதிபதிபிரணாப் முகர்ஜியின் மூளை எந்த வகை 'சாப்ட்வேரால்' செய்யப்பட்டது என்று தெரியவில்லை என்று மோடி வியந்தார்.

அவருடன் அரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்தால் ஒரு நல்ல புத்தகத்தை படித்த மனநிறைவு ஏற்படுகிறது என்றும் பிரதமர் புகழாரம் சூட்டினார். (6)

## காஸா மனிதவுரிமை மீறல் - ஐ.நா.குழு நியமித்தது

மத்திய தரைகடல் நாடுகளான இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்திற்கும் இடையே நடைபெற்று வரும் சண்டையில், இஸ்ரேலின் தாக்குதலால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள காஸா பகுதியில் நடைபெற்றதாக கூறப்படும், மனித உரிமை மீறல்கள் மற்றும் போர் குற்றங்களை விசாரிக்க, மூன்று நபர் குழுவை, ஐ.நா., மனித உரிமைகள் ஆணையகம் நியமித்துள்ளது.

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், ஆயிரத்து 948 பாலஸ்தீனியர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பான்மையினர் அப்பாவி பொதுமக்கள். 4.25 இலட்சம் பாலஸ்தீனியர், அகதிகள் முகாம்களில் தங்க வைககப்பட்டுள்ளனர் 12 ஆயிரம் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இந்த தாக்குத[illegible] நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் குறித்து விசாரிக்க, ஐ.நா., மனித உரிமை ஆணையகத்தில் முடிவு செய்து, மூன்று நபர் குழுவை அமைத்துள்ளது. இதற்காக, நேற்று நடந்த வாக்கெடுப்பில், இந்தியா உட்பட, 29 நாடுகள் வாக்களித்தன. விசாரணை குழு அமைக்கத் தேவையில்லை என, அமெரிக்கா மட்டும் வாக்களித்தது. [illegible] நாடுகள், வாக்கெடுப்பில், பங்கேற்கவில்லை. விசாரணை குழுவில், லண்டனைச் சேர்ந்த, பிரிட்டன் - லெபனான் மனித உரிமை பெண் வழக்கறிஞர், அமல் அலாமுதீன், சர்வதேச கிரிமினல் சட்ட பேராசிரியர் வில்லியம் ஸாபாஸ், ஐ.நா., சபையின் சிறப்பு தகவல் தொடர்பாளர், செனெகல் நாட்டைச் சேர்ந்த டவ்டவ் டைனே ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த ஆண்டு

இந்தக் குழு, 2015 மார்ச் மாதத்தில், ஐ.நா., மனித உரிமைகள் அமைப்பு கூட்டத்தில், அறிக்கை அளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கிடையே, பெண் வழக்கறிஞர் அமல் அலாமுதீன், தன்னால் இந்த குழுவில் இணைந்து பணியாற்ற முடியாது என தெரிவித்து, பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி ஆபரணம் அல்ல. ஆடை! நற்பண்புகள் தாம் உலகின் மகிழ்ச்சியான ஆதாரம் என்ற என்ற உண்மையை மனிதன் உணர்ந்து கொண்டால் போதும்.

– போப்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk


## எங்கள் இளம் சமூகம் பயணிக்கும் பாதை மாறிவிட்டதா?

மாணவர்களிடம் இறை உணர்வை – இறை சிந்தனையை ஏற்படுத்திவிடுங்கள். அது அவர்களை நேர்மையாளர்களாக – பண்பாளர்களாக வாழ வைக்கும். இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் அவர்கள் நேற்றையதினம் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்கள் மற்றும் அதிகாரிகளுடனான சந்திப்பில் வடக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கூறிய இக் கருத்தை அதிபர்கள் மட்டும் அன்றிப் பெற்றோர்களும் மாணவர்களும் அறிய வேண்டும் என்பதற்காக அவரின் கருத்தை இவ் விடத்தில் மீள வலியுறுத்துவது பொருத்துடையது எனக் கருதுகின்றோம்.

உலகில்எவ்வளவுதான்சட்டங்கள், யாப்புகள் கொண்டு வரப்பட்டாலும் மனிதர்களைப் பண்படுத்துவது இறை சிந்தனை என்பதை எவரும் மறுத்து விடமுடியாது. அதிலும் கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் அவர்கள் கூறுவது போல் மாணவர்களி டையே இறை சிந்தனையை நாம் ஏற்படுத்தி விடுவோமாக இருந்தால் அது மிகப்பெரும் வெற்றியாகும்.

இன்று மாணவர்கள், இளைஞர்கள் தொடர்பில் எங்களிடம் மிகுந்த கவலைகள் உண்டு. தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் வாழ்கின்ற பிள்ளைகளா? இப்படி நடந்து கொள்கிறார்கள் என்று நினைந்து நெஞ்சத்தால் வேதனைப்படும் அளவில் இன்றைய கள நிலை மைகள் அமைந்துள்ளன. எனவேஇத்தகையகளநிலைமைகளில்எங்கள் பிள்ளைகள் மீது நாம் கொள்ளக் கூடிய அக்கறைப்பாடும் கண்காணிப்பும் அதிகமாகத் தேவைப்படுகின்றது.

சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகளை நெறிபிறழாமல் வளர்த்தெடுப்பதில் பெற்றோர்கள் கவனம் செலுத்தவில்லையோ! என்று நினைக்கும் அளவில் நிலைமைகள் அமைந்திருப்பதை நாம் காண முடிகிறது.

எனவேதான் எங்கள் மாணவர்களிடையே இறை சிந்தனையை ஏற்படுத்துவது என்பது முக்கியத்துவம் பெறுகிறது. இங்கு இறைசிந்தனை என்பது தனித்து வழிபாட்டை மட்டும் பிரதிபலிக்காது. மாறாக எங்கள் பண்பாடு, கலாசாரம், பெரியவர்களை மதித்தல், பிறருக்கு உதவும் பெருந்தன்மை என்ற பல்பரிமாணங்கள் இறை சிந்தனை என்ற சொற்பதத்திற்குள் பொதிந்துள்ளன.

இறை சிந்தனை என்பது ஏற்பட்டு விடுகின்றபோது; இசையில், இயலில், நாடகத்தில் என்றவாறான இரசனையும் அதன் ஊடாக, தனக்குள் இருக்கக் கூடிய பேராற்றலை வெளிப்படுத்தும் தெய்வீகத்தன்மையை ஒவ்வொரு மாணவரும் அடைய முடியும்.

இப்போதெல்லாம் நல்லூர் மகோற்சவ காலத்தில் நல்லூர்ப் பெருமானின் ஆலயச் சூழல் முழுவதிலும் தெய்வீக நிகழ்வுகள் நடந்தவண்ணம் உள்ளன.

தெய்வீக இசை நிகழ்ச்சிகள், கதாப் பிரசங்கங்கள், அருளுரைகள், இயல் சார்ந்த நிகழ்வுகள், கூட்டுப்பிரார்த்தனைகள் என்றவாறு தெய்வீகத்தை வலிமைப்படுத்தும் நிகழ்வுகள் நடந்த வண்ணம் உள்ளன.

எனினும் அந்த நிகழ்வில் பங்கு பற்றுகின்றவர்கள் – அதனை இரசிக்கின்றவர்களின் எண்ணிக்கையை பார்க்கும் போது நாங்கள் எங்கே போய்க்கொண்டிருக்கின்றோம் என்ற கேள்வி எழவே செய்யும்.

இசை நிகழ்வு நடைபெறும் போது, இசைத்துறையைக் கற்கின்ற மாணவர்கள் அந்த நிகழ்ச்சியை பார்வையிட்டால் கூட, மண்டபம் நிறையும் அளவில் சனக் கூட்டமாகிவிடும். ஆனால் இசைத்துறையில் பயில்கின்ற மாணவர்கள் எவரையும் இந்த நிகழ்வுகளில் மருந்திற்கும் காணவில்லை.

இசையைக் கற்கும் ஒரு மாணவன் இசை நிகழ்ச்சியில் பங்குபற்ற விருப்பமற்றவராக இருப்பாராயின் அவர் கற்கின்ற இசை என்பது அவரின் திறனை ஒருபோதும் வெளிப்படுத்தாது என்பதை அடித்துச் சொல்ல முடியும்.

இங்குதான் கல்வி அமைச்சின் செயலாளர் கூறிய கருத்தை நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். அதிலும் பெற்றோர்கள் இது தொடர்பில் சிந்திப்பதும் இசை நிகழ்வுகளில் தங்கள் பிள்ளைகளை பங்கேற்க வைப்பதும் அவசியமாகின்றது.

# தமிழ் ஊடகவியலாளர்களை சுதந்திரமாக செயற்பட அரசு அனுமதிக்க வேண்டும்

## திணிப்பதும் தடுப்பதும் முறையல்ல என்கிறார் மனோ

(கொழும்பு)

தமிழ் ஊடகவியலாளர்கள் உண்மையை கூற வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார். இது மிக நல்ல ஒரு கருத்து. ஆனால், உண்மையை கூறுவதற்கு தமிழ் ஊடகவியலாளர்கள் முதலில் சுதந்திரமாக செயலாற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.

இளம் தமிழ் ஊடகவியலாளர்கள், வடக்கிலிருந்து கொழும்புக்கு வந்து தங்கள் சக சிங்கள ஊடகவியலாளர்களுடன் தொழில் உறவு கொள்ள முடியாதுள்ளது. பொலிஸ் அவர்களை வழியில் தடுத்து, கஞ்சா கடத்தினார்கள் என்று சொல்லி, நள்ளிரவில் சிறை பிடிக்கிறது.

அப்படியும் துணிந்து தடையை மீறி அவர்கள், கொழும்புக்கு வந்து சட்டபூர்வ செயலமர்வு ஒன்றை நடத்தினால், அரசின் இனவாத அடியாட்கள் ஆர்ப்பாட்டம் செய்து அவர்களை திருப்பி அனுப்புகிறார்கள்.

சுதந்திர தமிழ் செய்தியாளர்களுக்கு, தலைநகரில் ஊடக செயலமர்வு நடத்த உரிமை இல்லை. ஆனால், தமிழ் ஊடகவியலாளருக்கு என்று அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் செயலமர்வு நடத்துகிறது. இதை இங்கேயிருந்து போய் அஸ்வர் எம்.பி.நடத்துகிறார்.

இனி அரசாங்கத்தின் செய்திகளை மாத்திரம்தான், தமிழ்த் தொலைககாட்சிகள், ஊடகங்கள் கூற வேண்டும் என்பதுதான் அரசின் திட்டமா? என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு சிங்கள, தமிழ் மொழிகளில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

அரசு தரப்பு செய்திகளுக்கு சுதந்திர தமிழ் ஊடகங்கள் முழுமையாக இடம் தருகின்றன. அதை எதிரணி தரப்பு தடுகக முடியாது. தடுக்கவும்கூடாது. அரசுக்கு உளேயும், வெளியேயும் சில கடித தலைப்பு அமைப்புகள் உள்ளன.

இவை நாட்டுக்கும், வீட்டுக்கும் கேடு விளைவிப்பவை. ஆனால், அரசாங்கத்தின் அமைச்சர்கள், அதிகாரபூர்வ பேச்சாளர்களின் செய்திகளையும், கருத்துகளையும் நாங்கள் செவிமடுக்க, பார்க்க, வாசிக்க விரும்புகின்றோம். அவற்றை வெளியிடுங்கள் என்றுதான் சுதந்திர தமிழ் ஊடகங்களுக்கு நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

ஆனால், எதிரணி செய்திகளை அரசு தரப்பு தடுக்க முயலுகிறது என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது. அரசின் செய்திகளை மாத்திரம் வெளியிட அரசாங்க ஊடகங்கள் உள்ளன. எல்லா அரசு காலததிலும் அவை அவ்வந்த அரசுகளின் செய்திகளை மட்டுமே வெளியிட்டு வருகின்றன.

ஆனால், அந்நிலைமைக்கு சுதந்திர தமிழ்ஊடகங்களும்போக முடியாது. இன்று ஊடகங்கள், உண்மையை மறைத்து பொய்களை மாத்திரம் சொல்ல முடியாது. பொய் சொன்னால் ஊடகம், செய்தி சந்தையில் நிலைக்க முடியாது.

கடந்த கால பாரம்பரிய ஊடக நியமங்கள் இன்றைய நவீன காலத்தில் மாறிவிட்டன. இன்று யூரியுப், முகநூல், டுவிட்டர், வட்ஸப், வைபர் என்று சமூக தளங்கள் பல வந்துவிட்டன. ஆகவே பொய்கள் உடனடியாக அம்பலத்துக்கு வந்துவிடும்.

இந்த நாட்டிலே இன்று சட்டபூர்வ ஊடக செயலமர்வுகள் நடத்த முடியாது. ஊடக மாநாடுகள் நடத்த முடியாது. ஜனநாயக ஆர்ப்பாட்டங்கள் நடத்த முடியாது. செயல மர்வுகளுக்கு எதிராக அடியாட்கள் ஆர்ப பாடடம் செய்கிறார்கள். ஊடக மாநாடு களை அதே அடியாட்கள் அடாவடி யாக உள்நுழைந்து குழப்புகிறார்கள்.

ஜனநாயக ஆர்பாட்டங்களுக்கு எதி ராக பொலிஸ் நீதிமன்ற தடை உத்தரவை பெறுகிறது. ஆனால், தீவிரவாத கட்சி களுக்கு இனவாத கூட்டங்களை நடத்த அதே பொலிஸ் இடம் தருகிறது.

கொல்லப்படும் பாலஸ்தீன மக்களுக்கு ஆத ரவு தெரிவித்து நேற்று நடைபெற விருந்த ஆர்பாட்டம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல, பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாக எவரும் ஆர்ப்பாட்டம் நடத்த கூடாது என பொது பல சேனை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவை அனைத்துக்கும் பின்னால் இருந்து இனவாத அடியாட்களை ஏவி விடும், அந்த மர்ம கை யாருடையது?

நான் இது தொடர்பில், பொதுபல சேனா ஞானசார தேரரை குறை சொல்லமாட்டேன். சட்ட நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்க்கும் பொலிஸ் மா அதிபரையும் குறை சொல்லமாட்டேன்.

இவர்கள் கருவிகள். இவற்றுக்கு இந்த அரசாங்கமே பொறுப்பு கூற வேண்டும். இந்த மர்ம கை அரசாங்கத்தின்கை.

இந்த கையை நாம் ஜன நாயக ரீதியாக உடைக்க வேண்டும். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் உடைத தெறிய வேண்டும் என தனது உரையல் மனோ

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**14.08.2014 இற்கான வினா**

**''எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே. அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம் அதுவாதலாலே அதிசயம் மெத்த உண்டு''**

**1.இத்திருப்பாடலை பாடியவர் யார்?**

**2.ஆசான் என்பவர் யார்?**

**அவர் அருந்தவம் செய்த இடம் யாது?**

**13.08.2014 இற்குரிய கேள்வியும் விடையும்**

**''ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய'' என்ற கந்தபுராண பாடல் வரிக்கு அமைய, முருகன் உதித்த (தோன்றிய) தினம் எது?**

வைகாசி விசாகம்

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்


இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

## சத்திய தரிசனம்



### ஆன்மீகத்தின் அடிப்படை

- எப்போதும் தெய்வ சிந்தனையும், தன்னம்பிக்கையும் கொண்டவராக இருங்கள். மற்றவர்களுக்கும் பயனுள்ள விதத்தில் வாழுங்கள்.
- பண்டிதனானாலும், செல்வந்தனாக இருந்தாலும் முடிவில் கடவுளின் அருளை பெற்றால் மட்டுமே வாழ்வு முழுமை பெறும்.
- பிறருடைய சுதந்திரத்தில் ஒருபோதும் தலையிடாதீர்கள். மற்றவர்களின் வாழ்வில் குறுக்கிடாமல் இருப்பது மேலான பண்பு.
- ஆசைகளை அடக்குதல், புலன் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துதலுமே ஆன்மிக வாழ்வின் அடிப்படை



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஏற்கவேண்டிய சில நல்ல குணங்கள்

- ஒரு நிர்வாகப்பொறுப்பை அதிர்ஷ்டத்தினால் அல்ல புத்திக்கூர்மையால் மட்டுமே நிர்வகிக்க முடியாது.
- எந்தப் பிரச்சினையிலும் நாம் முடிவெடுக்கவேண்டும். முடிவு எடுக்காமல் பிரச்சினையை அதன் போக்கில் விட்டுவிடக்கூடாது.
- எக்காரணம் கொண்டும் எல்லாம் நமக்குத் தெரியும் என்றோ பிறருக்கு ஒன்றும் தெரியாது என்றோ அகம்பாவம் கொள்ளக்கூடாது.
- தன்கீழ் வேலை செய்பவரை வீட்டிலும் அலுவலகத்திலும் நன்கு நடத்த வேண்டும்.
- எல்லாம் தெரிந்ததைப்போல் பேசக்கூடாது. எல்லோருக்கும் எல்லாம் தெரிவதில்லை.
- நாம் யாரையும் வேண்டியவர் என்றோ எதிரியாகவோ ஆக்கிக்கொள்ளக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூப்பந்தாட்ட போட்டி முடிபுகள்



வடமாகாண பூப்பந்தாட்டச் சங்கம் உலகத் தமிழ் பூப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்திய பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு:

**ஒற்றையர் ஆட்டம்**

**15 வயது ஆண்கள்**

முதலாமிடம் எம்.கீர்த்தனன் (யாழ். இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் ஆர்.சுலக்ஷன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), மூன்றாமிடம் கே.கவிலவன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்).

**15 வயது பெண்கள்**

முதலாமிடம் ஆர்.றொக்ஷனா (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் ஏ.சானுகாகனி (யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் ஆர்.ராகவி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**19 வயது ஆண்கள்**

முதலாமிடம் எஸ்.சுகதீபன் (உடுவில் மான்ஸ் வித்தியாலயம்), இரண்டாமிடம் வை.பிரணவன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), மூன்றாமிடம் என்.தர்சானந்தா (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்).

**19 வயது பெண்கள்**

முதலாமிடம் எம்.ஜெயகருணா (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் எச்.நட்ரசா (யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் எஸ்.கதுஷா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**திறந்த போட்டி**

**ஆண்கள்**

முதலாமிடம் ரி.துஷாந்தன் (உடுவில் மான்ஸ் வித்தியாலயம்), இரண்டாமிடம் எல்.ஆர்.ரெமின்சன் (உடுவில் மான்ஸ் வித்தியாலயம்), மூன்றாமிடம் கே.சற்குணசீலன் (உடுவில் மான்ஸ் வித்தியாலயம்).

**பெண்கள்**

முதலாமிடம் என்.ஹன்னா நட்ரசா (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் எம்.ஜெயகருண்யா (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் ஆர்.நிஷாதாரணி (யாழ்ப்பாணம்).

**40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்**

முதலாமிடம் பி.இராஜேஸ்வரன் (வவுனியா), இரண்டாமிடம் ஜே.மோகன் (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் ஆர். சேவியர் (கிளிநொச்சி).

**40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள்**

முதலாமிடம் மேரிநிர்மலா ஹரிகரன் (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் மைதிலி சின்னப்பு (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் ரூபி இராஜரத்தினம் (யாழ்ப்பாணம்).

**இரட்டையர் ஆட்டம்**

**15 வயது ஆண்கள்**

முதலாமிடம் கே.கவிலவன், ஆர்.சுலக்ஷன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் எம்.விஜயதீபன், ஏ.நிமல்ராஜ் (உடுவில் மான்ஸ் வித்தியாலயம்), மூன்றாமிடம் எம்.கீர்த்தனன், ஆர்.அபிசதன் (யாழ்.இந்துக் கல்லூரி).

**15 வயது பெண்கள்**

முதலாமிடம் ஏ.சேனுகானகா, ஆர்.றொக்ஷனா (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் எம்.சாருஜா, ரி.பவித்திரா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), மூன்றாமிடம் எஸ்.கேதுஜா, ஆர்.ராகவி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**19 வயது ஆண்கள்**

முதலாமிடம் ஏ.ஆர்.ஜோன்சன், வை.பிரணவன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் எஸ்.லுஜித், கே.கனிஸ்ரன் (உடுவில் மான்ஸ் வித்தியாலயம்), மூன்றாமிடம் கே.கஜேந்திரன், கே.துஷன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்).

**19 வயது பெண்கள்**

முதலாமிடம் எம்.யோய்காருண்யா, எச்.ரதுஷா (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் எஸ்.சாமினி, எஸ்.கஜானி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), மூன்றாமிடம் பி.தமிழினி, என்.டிலக்ஷனா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

**திறந்த போட்டி**

**ஆண்கள்**

முதலாமிடம் ரி.துஷாணந்தன், எல்.ஆர்.றெமின்ஷன் (உடுவில் மான்ஸ் வித்தியாலயம்), இரண்டாமிடம் எம்.அன்ரனி, க.லுசிந்தன் (மன்னார்), மூன்றாமிடம் எல்.கிஷோக், கே.சற்குணசீலன் (மட்டக்களப்பு).

**பெண்கள்**

முதலாமிடம் எம்.ஜெய்கருண்யா, எச்.நட்ரசா (யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் மைதிலி சின்னப்பு, மேரி நிர்மலா (யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), மூன்றாமிடம் ஆர்.நிஷாதாரணி, எஸ். அனுசா.

**40 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்**

முதலாமிடம் எஸ்.சதானந்தன், ஆர்.சேவியர் (கிளிநொச்சி), இரண்டாமிடம் ஏ.மோகன், எஸ்.திருமாறன் (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் பி.இராஜேஸ்வரன், என்.சுதாகரன் (வவுனியா).

**40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள்**

முதலாமிடம் மைதிலி சின்னப்பு, மேரிநிர்மலா ஹரிகரன் (யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் என்.சொர்ணம்பிகை, ரூபி இராஜரத்தினம் (யாழ்ப்பாணம்). (க)



புத்தூர் கதிர் கல்வி நிறுவனம் - புத்தூர் மரதன் ஓட்ட நிகழ்வில் மூன்று பிரிவுகளிலும் வெற்றிபெற்ற மாணவர்களை வெற்றிக்கேடயங்களுடன் தங்கப்பதக்கம் அணிவிக்கப்பட்ட நிலையில் நிற்பதனை படத்தில் காணலாம்.

# ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியன்

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

இதில், ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இப் போட்டியில், முதல் மூன்று நேர் சுற்றுக்களையும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம், 25:23, 25:21, 25:22 என்ற நேர் செற்களில் வென்று சம்பியனாகியது.

# சிம்பாவேயை வென்ற தென்ஆபிரிக்கா

தென்ஆபிரிக்கா - சிம்பாவே இடையே டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஹறாரே நகரில் நடைபெற்றது.

முதல் இனிங்சில் சிம்பாவே 256 ரன்களும், தென்ஆபிரிக்கா 397 ரன்களும் சேர்த்தன. 141 ரன்கள் பின்தங்கிய நிலையில் 4 ஆவது நாளில் தனது 2 ஆவது இனிங்சை ஆடிய சிம்பாவே அணி 181 ரன்களில் சுருண்டது. அதிக பட்சமாக சிபான்டா 45 ரன்கள் எடுத்தார்.

தென்ஆபிரிக்க தரப்பில் டேன் பீட் 4 விக்கெட்டுகளும், ஸ்டெயின், மோர்னே மோர்கல் தலா 3 விக்கெட்டுகளும் கைப்பற்றினர். புதுமுக சுழற்பந்து வீச்சாளரான டேன் பீட் ஏற்கனவே முதலாவது இனிங்சிலும் 4 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார். இதன் மூலம் அறிமுக டெஸ்டில் அதிக விக்கெட்டுகளை (மொத்தம் 8 விக்கெட்) சாய்த்த தென்ஆப்பிரிக்க சுழற்பந்து வீச்சாளர் என்ற சிறப்பை அவர் பெற்றார்.

பின்னர் 41 ரன்கள் இலக்கை நோக்கி ஆடிய தென் ஆபிரிக்க அணி 10.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டுக்கு 44 ரன்கள் எடுத்து 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (க)

# கம்பர்மலை யங்கம்பன்ஸ் வெற்றி



ரதனின் அபார ஆட்டத்தில் கரவைச் சுடர் விளையாட்டுக் கழகத்தை 8:1 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றது கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம்.

தும்பளை நற்கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டி வல்வெட்டித்துறை றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகமும் கரவைச் சுடர் விளையாட்டுக் கழகமும் மோதின.

ஆட்டத்தின் தொடக்கம் முதல் இறுதிவரை யங்கம்பன்ஸ் அணியின் கை மேலோங்கி இருந்தது. ஆட்டம் ஆரம்பமாகி 7 ஆவது, 11 ஆவது நிமிடங்களில் ரதன் அடுத்தடுத்து இருகோல்களைப் பெற்றார்.

அடுத்த 4 ஆவது நிமிடத்தில் அந்த அணியின் முன்னணி வீரர் மத்திய பகுதியில் கிடைத்த பந்தொன்றை அங்கிருந்தே உதைத்து அழகான கோல் ஒன்றை போட்டு பார்வையாளர்களைப் பரவசப்படுத்தினார். இந்த கோலே இந்த சுற்றுப் போட்டியின் மிகவும் அற்புதமான கோல் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

தொடர்ந்து தர்சன் இரண்டு கோல்களையும் ரதன் மேலும் இரண்டு கோல்களையும் நிரோசனும் சேர்த்து கோல்களைப் பெற 8:1 என்ற கோல்களை பெற்று வெற்றி பெற்றது யங்கம்பன்ஸ் அணி. கரவைச் சுடர் விளையாட்டுக் கழகம் சார்பாக இராசன் ஒரு கோலைப் பெற்று ஆறுதல் அளித்தார். (க)

# சச்சின், டிராவிட்டை பார்த்து திருந்துங்க

இங்கிலாந்து அணிக்கெதிரான 4 ஆவது டெஸ்ட் தோல்வியை முன்னாள் வீரர்கள் பலரும் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றனர்.

இந்திய அணியின் மோசமான வரலாறு இந்த தொடரில் கண்டிப்பாக மாறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்திய அணியின் இந்த மோசமான நிலைமை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

2 ஆவது டெஸ்ட் போட்டியின் வெற்றி நம்பிக்கையளித்த போது, இப்படியா 3 ஆவது மற்றும் 4 ஆவது டெஸ்ட் போட்டிகளில் ஒட்டு மொத்தமாக சரணடைவது என பல வீரர்களும் திட்டி வருகின்றனர்.

இது குறித்து முன்னாள் விக்கெட் கீப்பர் விஜய் தாகியா கூறுகையில்,

3 ஆவது டெஸ்ட் போட்டியில், இங்கிலாந்து பந்து வீச்சாளர் மொயீன் அலிக்கு எதிராக தடுப்பு ஆட்டத்தில் [illegible] இந்திய அணி வீரர்கள் விக்கெட்டை பறிகொடுத்தனர்.

எனவே நான்காவது டெஸ்ட் போட்டியில் அவருக்கு எதிராக அடித்து ஆட முயன்றனர். ஆனால் அப்போதும் அவுட் தான் ஆனார்கள்.

விராட் கோலி தன் மீது மிகுந்த அழுத்தத்தை கொடுத்து வருகிறார். வெளியில் இருந்து வரும் அழுத்தத்தை தாண்டி அவருக்கு அவரே நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளார். இந்த போட்டித்தொடரில் ஒரே மாதிரியான வகையில் விராட் கோலி அவுட் ஆகிவருகிறார்.

சிறந்த துடுப்பாட்டக்காரரான அவர், உத்தி ரீதியில் தோல்வியடைந்து அவுட் ஆவதாக நான் நினைக்கவில்லை. அவரது மனது கலக்கத்தில் இருப்பதால் தான் இது போன்று அவுட் ஆகிறார்.

இந்த நேரத்தில் தான் இளம் வீரர்கள் சச்சின் டெண்டுல்கரையும், ராகுல் டிராவிட்டையும் நினைவில் நிறுத்த வேண்டும். ஜாம்பவான்களான அவர்கள் இருவருமே ஒரே மாதிரி பந்து வீச்சில் தொடர்ந்து அவுட் ஆவதை விரும்புவதில்லை.





உடனடியாக தங்கள் விளையாட்டை மாற்றிக்கொண்டு விடுவார்கள். அந்த ஒழுக்கம், அர்ப்பணிப்பு அனைத்து வீரர்களுக்கும் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து விடைபெற தயாராகும் மஹேல




இலங்கை கிரிக்கெட் அணியின் தூண்களில் ஒருவர் மஹேல ஜெயவர்த்தன. வலதுகை துடுப்பாட்ட வீரரான இவர் பந்தை நேர்த்தியாக அடித்து ஆடுவதில் வல்லவர். களத்தில் நிலைத்து விட்டால் ஸ்கோர் சீராக உயர்வதை தடுக்க முடியாது.

இலங்கை அணியின் தலைவராகவும் சில ஆண்டுகள் பணியாற்றி இருக்கும் மஹேல ஜெயவர்த்தன, பாகிஸ்தானுக்கு எதிராக கொழும்பில் இன்று தொடங்கும் (ஓகஸ்ட் 14-18) 2-வது டெஸ்டுடன் சர்வதேச டெஸ்ட் அரங்கில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

இது அவரது கடைசி டெஸ்ட் என்பதால் மைதான பகுதியில் ஜெயவர்த்தனவின் ஏராளமான கட்-அவுட்டுக்கள் வைக்கப்பட்டுள்ளன.

17 ஆண்டுகள் இலங்கை அணிக்காக சீரிய பங்களிப்பை அளித்த அவரை வழியனுப்பி வைக்க இலங்கை கிரிக்கெட் சபை சிறப்பு ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

இதனால் ஜெயவர்த்தன இப்போதே ஒரு விதமான உணர்ச்சி பெருக்கில் காணப்படுகிறார்.

இதுவரை அவர் 148 டெஸ்டில் விளையாடி 34 சதத்துடன் 11 ஆயிரத்து 756 ஓட்டங்களையும், 420 ஒருநாள் போட்டிகளில் 16 சதத்துடன் 11 ஆயிரத்து 681 ஓட்டங்களையும் குவித்துள்ளார்.

ஒருநாள் போட்டி, டெஸ்ட் போட்டி ஆகிய இரண்டு வடிவிலான கிரிக்கெட் போட்டிகளிலும் 11 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் சேர்த்த 5-வது வீரர் ஜெயவர்த்தன ஆவார்.

சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), ரிக்கி பொன்ரிங் (அவுஸ்திரேலியா), கலிஸ் (தென்னாபிரிக்கா), சங்கக்கரா (இலங்கை) ஆகியோர் ஏற்கனவே இந்த சிறப்பை பெற்றவர்கள் ஆவர்.

2006-ம் ஆண்டு கொழும்பில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்டில் ஜெயவர்த்தனே 374 ஓட்டங்களைக் குவித்தார் இதுவே டெஸ்ட் போட்டிகளில் அவரது அதிகபட்ச ஓட்டமாகும். டெஸ்டில் வலக்கை ஆட்டக் காரர ஒருவர் எடுத்த அதிகபட்ச தனி நபர் ஓட்டம் இதுதான். இந்த போட்டியில் அவரும், சங்கக்கராவும் இணைந்து 3-வது விக்கெட்டுக்கு 624 ஓட்டங்களைத் திரட்டினர்.

இது டெஸ்டில் ஓர் ஜோடி குவித்த அதிகபட்ச உலக் சாதனையாக இன்றளவும் திகழ்கிறது. 1997-ம் ஆண்டு கொழும்பில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் தனது 20-வது வயதில் அறிமுகமான ஜெயவர்த்தன, சொந்த மண்ணிலேயே தனது டெஸ்ட் வாழ்க்கையை முடித்துக் கொள்கிறார்.

இதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால் இதே ஓகஸ்ட் 14-18-ந் திகதிதான் (1948-ம் ஆண்டில) கிரிக்கெட்டின் பிதாமகன் அவுஸ்திரேலியாவின் டொன் பிரட்மன் டெஸ்டில் ஆடிய கடைசி நாட்கள் ஆகும்.

ஜெயவர்த்தன கூறுகையில், ஓய்வு முடிவை எளிதாக எடுத்து விடவில்லை. ஆனால் விலகுவதற்கு இதுவே சரியான நேரமாக நம்புகிறேன்.

அணியில் இளம் வீரர்கள் தற்போது சிறப்பாக விளையாடி வருகிறார்கள். மத்யூசும், அணித்தலைவர் பணியில் தன்னை வலுவாக நிலை நிறுத்திக் கொண்டு விட்டார்.

எனவே அணியில் எனது பணி நிறைவடைந்து விட்டது. இலங்கை அணிக்காக 17 ஆண்டுகள் விளையாடியது எனக்கு கிடைத்த மிகப் பெரிய கௌரவமாகும் என்றார்.

சகவீரர் சங்கக்கரா கூறுகையில், நான் மட்டுமல்ல, இலங்கை ரசிகர்கள், எங்கள் அணியினர் ஏன் ஒட்டுமொத்த கிரிக்கெட் உலகே ஜெயவர்த்தன போன்ற சிறந்த வீரரை இழப்பதை நினைத்து வருந்துவார்கள்.

அவரது இடத்தை நிரப்ப நீண்ட காலம் பிடிக்கும். அவரது நேர்மை, அர்ப்பணிப்பு உணர்வு, பலம், யுக்திகள் மீது ஒவ்வொரு வீரர்களும் மதிப்பும், மரியாதையும் வைத்திருக்கிறார்கள். அணியில் அவரே எப்போதும் தலைசிறந்த வீரர் என்றார். ஜெயவர்த்தனவின் தந்தை செரிநாத் ஜெயவர்த்தன கூறிய தாவது,

காலி டெஸ்டில் மஹேல ஜெயவர்த்தன முதல் முறையாக தொடக்க ஆட்டக்காரராக ஆடினார். அந்த போட்டியை நான் நேரில் பார்த்தேன். அவர் கடைசியாக டெஸ்ட் விளையாடப் போகும் கொழும்பு மைதானத்தில் 5 நாட்களும் எங்கள் குடும்பத்தினர் அனைவரும் சங்கமித்து விடுவோம்.

இந்த போட்டி முதலில் கொழும்பு பிரேமதாச அரங்கில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானம் மஹேலவின் சொந்த ஊர் என்பதால் அவருக்காக போட்டியை இலங்கை கிரிக்கெட் சபை அங்கு மாற்றியிருக்கிறது. அவரது ரசிகர்கள், ஆதரவாளர்கள அவரை உற்சாகப் படுத்துவார்கள்.

தனது முன்னாள் பயிற்சியாளர்கள், பள்ளி, கல்லூரி முதல்வர்கள் மற்றும் கிறிஸ்தவ மத குருமார்கள் என்று தனது கிரிக்கெட் வளர்ச்சிக்கு பக்கபலமாக இருந்த அனைவருக்கும் கடைசி போட்டியை பார்க்க நேரில் வரும்படி மஹேல அழைப்பு விடுத்துள்ளார்.

ஒரு கட்டத்தில், எனது இன்னொரு மகன் திசால் (மூளை கட்டியால் 16-வது வயதில் இறந்தார்) இறந்த போது மஹேல கிரிக்கெட்டை முழுமையாக துறக்க விரும்பினார்.

ஏனெனில் சகோதரர்கள் இருவரும் அந்த அளவுக்கு பாசமாக இருந்தனர். பார்ப்பதற்கு இரட்டையர் போன்று இருப்பார்கள். 'அதன்பிறகு கிறிஸ்தவ மதகுருமார்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்கள்தான் மஹேலவை சகஜ நிலைக்கு கொண்டு வந்து தொடர்ந்து கிரிக்கெட் விளையாட வைத்தனர்.

தனது கடைசி டெஸ்டில் அவர் சதம் அடிப்பார் என்று நாங்கள் நம்புகிறோம். 2009-ம் ஆண்டு பாகிஸ்தானில் இலங்கை அணி மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய சம்பவம் அவரை உலுக்கி விட்டது. அது தான் அவரது கடைசி பாகிஸ்தான்பயணமாக எப்போதும் இருக்கும.

ஏனெனில் எதிர்காலத்தில் பாகிஸதானில் கிரிக்கெட் விளையாடும் வாய்ப்பு வந்தாலும், மஹேல ஒருபோதும் அங்கு செல்லமாட்டார். இவ்வாறு செரிநாத் கூறினார்.

டெஸ்டில் இருந்து விலகும் ஜெயவர்த்தன உலக கிண்ணபோட்டிவரை ஒருநாள் கிரிக்கெட்டில் தொடர்ந்து ஆட முடிவு செய்திருக்கிறார். (க)

# பாலிவுட் மொடல் அழகியை கர்ப்பமாக்கிய வசிம் அக்ரம்!





பாகிஸ்தான் மொடல் அழகி ஹுமாய்மாவுக்கும், பாகிஸ்தான் கிரிகெட் அணியின் முன்னாள் வீரர் வசிம் அக்ரமுக்கும் காதல் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தானில் பிரபல மொடல் அழகியாக உள்ள ஹுமாய்மா மாலிக பாலிவுட் படங்களான போல், இஷ்கூடா படங்களில் நடித்து உள்ளார்.

தற்போது ராஜா நட்வர்லால் என்ற படத்தில் இம்ரான் ஹஷ்மிக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

இந்நிலையில் 26 வயதாகும் ஹுமாய்மாவுக்கும், 48 வயதான பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் வசிம் அக்ரமுக்கும் காதல் ஏற்பட்டுள்ளது. வசிம் அக்ரமுடன் ஹுமாய்மா வெளியில் பல இடங்களுக்கும் சென்று கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. ஆனால் இந்த தகவலை ஹுமாய்மா மறுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது அந்த நடிகை கர்ப்பமாக இருப்பதாகவும், அதனால் இருவரும் விரைவில் திருமணம் செய்யவிருப்பதாகவும் பாலிவுட்டில் கிசுகிசுக்கப்படுகிறது.

இவர் ஏற்கனவே ஒரு பேட்டியல் தன்னுடைய போய் பிரண்ட் ஒருவரின் வயது 45க்கும் மேல் இருக்கும் என கூறியுள்ளார்.

அதேபோல் ஹுமாய்மா ஏற்கெனவே தனது 18 வயதில் திருமணம் முடிந்து விவாகரத்து ஆனவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## பொலிஸ் - பொது...

பட்டுள்ளது.

தற்போது அந்த பகுதியில் பொலிஸாருடன் மேலதிகமாக இராணுவம மற்றும் சிறப்பு அதிரடிப் படை பாதுகாப்புக்கு நிலை நிறுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த கிராமத்திலுள்ள வீடொன்றில் சட்ட விரோதமாக மதுபானம் வற்பனை செய்யப்படுவதாகக்கிடைத்த தகவலையடுத்து கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்திலிருந்து சென்றிருந்த பொலிஸார் சந்தேக நபரான பெண்ணொருவரை கைது செய்து அழைத்து செல்ல முற்பட்ட போதே இந்த அமைதியின்மை ஏற்பட்டதாகவும பொலிஸ் ஊடகப் பேச்சாளரான அஜித் ரோகண தெரிவித்தார்.

சந்தேக நபரான பெண்ணும் அவரது உறவினர்களுமே பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியதோடு, பொலிஸ் வாகனத்திற்கும் தீ வைத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக தகவல் அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன், மாகாண சபை உறுப்பினர்களான பிரசன்னா இந்திரகுமார் மற்றும் இரா. துரைரெத்தினம் ஆகியோர் அந்தக் கிராமத்திற்கு நேரடியாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து சம்பவம் தொடர்பாக கேட்டறிந்தனர்.

சம்பவத்தின் போது பொலிஸார் கிராம மக்கள் மீது தாக்குதல்களை நடத்தியதோடு துப்பாக்கிச் சூடும் நடத்தியதாக கிராம மக்களால் தனது கவனத்திற்கு கொண்டு வரப்படடுள்ளதாக அங்கு சென்று திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் குறிப்பிட்டார்.

காயமடைந்த பெண்களில் ஒருவர் சந்தேக நபராக பொலிஸாரால் அழைத்து செல்லப்பட்டவர் என்றும் அடுத்தவர் அவரது மகள் என்றும் அவர் தெரிவிக்கிறார்.

பொது மக்கள் மீதான பொலிஸாரின் துப்பாக்கிச் சூடு தொடர்பாக பக்கச் சார்பற்ற விசாரணை நடைபெற்று தொடர்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என மாகாண சபை உறுப்பினரான இரா.துரைரெத்தினம் கூறியுள்ளார்.

இதேவேளை பொலிஸார் மீதான தாக்குதல்கள் தொடர்பாக விசாரனைகளை மேற்கொண்டு வரும் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் பெண்கள் உட்பட கிராமவாசிகள் சிலர் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த...

ளுக்கான பொறுப்புகளை சில சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் மீது சுமத்த முயற்சிக்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று மதியம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட சுயாதீனமான தேசிய விசாரணையை நடத்துவதே நாட்டின் உள் விவகாரங்களில் சர்வதேச தலையீடுகளை நிறுத்த ஒரே வழி என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு.

இதனை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளோம். விசாரணை ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதி நியமித்துள்ள மூன்று நிபுணர்கள், ஜனாதிபதியையும் பாதுகாப்புச் செயலாளரையும் காப்பாற்றி, சில இராணுவத்தினருக்கு எதிராக அறிக்கையை வழங்க போவது உறுதி.

கட்டளையிடும் உயர் அதிகாரிகளை காப்பாற்றி கீழ் மட்டத்தில் இருப்பவர்களை காட்டிக்கொடுக்கும் வரலாறு இவர்களுக்கும் உள்ளது எனவும் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தை காட்டிக்கொடுக்க ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் இடமளிக்காது எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்தினர் இன்று நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அடிமைகளாக மாறியுள்ளனர். உலகில் உள்ள சிறந்த இராணுவங்களில் ஒன்றாக உலகம் இலங்கை இராணுவத்தை ஏற்றுக்கொண்டிருந்தது.

ஒழுக்கம் நிறைந்த இராணுவமாக உலகம் இலங்கை இராணுவத்தை ஏற்றுக் கொண்டிருந்தது.

இதன் காரணமாக இலங்கையில் மாத்திரமல்லாது வேறு நாடுகளின் அமைதியை பாதுகாக்க இலங்கை இராணுவம் அழைத்து செல்லப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அமைப்பும் மிகவும் சிறந்த இராணுவம் இருக்கும் நாடுகளில் இருந்து மட்டுமே இராணுவத்தினரை தெரிவு செய்யும்.

எனினும் தலைவர்களின் தவறுகள் காரணமாக, தலைவர்கள் வழங்கிய கட்டளைகளை செயற்படுத்தியதால், இலங்கையின் இராணுவம் இன்று உலகில் மதிப்பிழந்த இராணுவமாக மாறியுள்ளதுடன் மிக வும் துரதிர்ஷ்டவசமான நிலைமையாகும்.

இராணுவம் ஒழுக்கமானதாக இருந்தாலும் மேல் மட்டத்தில் வழங்கப்படும் தவறான உத்தரவுகளாக இருந்தாலும் அதனை செயற்படுத்த வேண்டும்.

எப்படியான தவறான கட்டளையாக இருந்தாலும் கீழ் மட்டத்தில் இருக்கும் இராணுவ வீரன் அதனை செயற்படுத்தியே ஆக வேண்டும். முடியாது என்று கூற இயலாது. மறுத்தால் அவர்கள் இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்படலாம். அல்லது சுட்டுக் கொலலப்படலாம். பல பிரச்சினைகள் இருக்கின்றன.

இதன் காரணமாகவே போரில் சில குற்றங்கள் நிகழ்ந்திருக்கலாம் என நான் கூறுகிறேன். அதில் உள்ள உண்மை, பொய்கள் எமக்கு தெரியாது. எனினும் குற்றச்சாட்டுக்களை தவிர்த்து விட முடியாது.

அவற்றை எதிர்கொண்டு எமது நற்பெயரை பாதுகாக்க வேண்டும். நாட்டின் நற்பெயரையும் இராணுவத்தின் நற்பெயரையும் பாதுகாக்க வேண்டும்.

சர்வதேசத்திற்கு சென்று விடுதலைப் புலிகளின் குற்றங்களை ஏன் கூறுவதில்லை என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கேட்கிறார். விடுதலைப் புலிகளில் பொறுப்புக் கூற கூடியவர்கள் எவருமில்லை. இதனால் அதை பேசி பயனில்லை எனவும் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# இந்திய...

62 விசைப்படகுகளும் இலங்கை அதிகாரிகள் பாதுகாப்பில் இருப்ப தாகவும் கூறி மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கடந்த மாதம் 24ஆம் திகதியிலிருந்து ராமேஸ்வரம் மீன்வர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மீனவர் பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதங்களை முன்வைத்து சர்ச்சைக்குரிய விதத்தில் ஒரு கட்டுரையை இந்த மாதத்தின் முற்பகுதியில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டிருந்தது.

பின்னர் அதற்கு மன்னிப்பும் கோரியது என்பதும் குறிப்பிடதக்கது. (செ-11)

# ஆலோசனை...

கும் நோக்கில் தாம் இலங்கைக்கு செல்ல உள்ளதாக சேர் டெஸ்மன் டி சில்வா தெரிவித்துள்ளார். இதேவேளை, நிபுணர் குழுவினர் விசாரணைகளில் நேரடியாக பங்கெடுக்க மாட்டார்கள் என ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வல் பரணகம தெரிவித்துள்ளார்.

நிபுணர் குழுவின் தற்போதைய மூன்று உறுப்பினர்களுக்கு மேலதிகமாக ஜப்பான், பாகிஸ்தான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் நிபுணர் குழுவில் இணைந்து கொள்ள உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# பாதுகாப்பு...

ளைக் கடத்தப் போவதாக விடுத்துள்ள மிரட்டலால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை நாடு முழுவதும் 68-வது சுதந்திர தின விழா கொண்டாடப்பட உள்ளது. பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான அரசாங்கம் மத்தியில் பதவியேற்றதற்குப் பின் இடம்பெறும் முதலாவது சுதந்திர தினம் இது என்பதால், மத்திய அரசு டெல்லி சுதந்திர தின விழாவை சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்து வருகிறது.

இதனிடையே சுதந்திரத் தினக் கொண்டாட்டங்களைச் சீர்குலைக்கும் வகையில் சதிவேலைகள் இடம்பெறலாம் என்பதால் முன்னெச்சரிக்கையாக முக்கிய இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

தேசியக் கொடித் தயாரிப்பு, கலை நிகழ்ச்சிகள், பாதுகாப்பு அம்சங்கள் என அனைத்தும் முன்கூட்டியே திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பாதுகாப்புப் பணியில் ஆயிரக்கணக்கான பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டின் ஏனைய இடங்களைக் காட்டிலும் டில்லியில் கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகள் விமர்சையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (செ-11)

# விசாரணை...

தவிர நாட்டைத் தண்டிக்கும் நோக்கிலானதாக அமையக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனாலேயே சர்வதேச விசாரணைகளுக்கு நாம் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். அது மட்டுமன்றி இலங்கையில் எந்தவித மான மனித உரிமை மீறல்களும் இடம்பெறவில்லை. அவ்வாறானதொரு நிலையில் இலங்கை தொடர்பில் உயர்மட்டத்தில் கவனம் செலுத்தப்படுவதானது அதிர்ச்சிதரும் வகையில் அமைந்துள்ளது.

பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டமைக்காக நாட்டைத் தண்டிக்கும் நோக்கில் செயற்பட்டுவரும் வெளிநாடுகளில் வாழும் தமிழீழ விடுதலைப் புலிகள ஆதரவுக் குழுவினரின் முயற்சியாகவே இந்த விசாரணைக்குழு அமைநதுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் தனது செவ்வியில் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரம், வர்த்தக மற்றும் அரசியல் செயற்பாடுகளில் தமிழர்கள் முழுமையாக ஈடுபடுத்தப்படுவதில்லை யென்ற குற்றச்சாட்டு தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அமெரிக்கத் தூதுவர் பிரசாத் காரியவசம்,

இது தவறானதொரு கருத்து. கொழும்பு நகரிலுள்ள 70 வீதமான வர்த்தக நிலையங்கள் தமிழர்களுக்குச் சொந்தமானவை.

தமிழ் அரசியல்வாதிகள் பலர் உள்ளனர்.

வடமாகாணத்தில் தமிழ் முதலமைச்சர் உள்ளார். தமிழ் கட்சிகளுடன் அரசாங்கம் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை நடத்தத் தயாராகவே உள்ளது என்றார்.

எனினும், தமிழ் பிரிவினைவாத குழுவினர் இலங்கைக்கு எதிராக நீண்ட காலமாகவே பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் காரியவசம் குறிப்பிட்டார். (செ-11)

# புகையிரதம்...

குகன் என்று அழைக்கப்படும் சாந்தலிங்கம் சாந்தகுமார் உறவினர் ஒருவரை வழி அனுப்புவதற்காக கொழும்புக்குப் பயணம் சென்றுள்ளார்.

இதன் போது வெள்ளவத்தைப் புகையிரத நிலையத்திற்கு அருகே தனது வாகனத்தை நிறுத்தி விட்டு கைத்தொலைபேசியில் உரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

முதலாவது புகையிரதக் கடவையை புகையிரதம் வருவதை அவதானித்து சரியாகக் கடந்துள்ளார். இரண்டாவது கடவையை கடக்கும் போது புகையிரதம் வருவதை அவதானிக்காமல் கடந்ததால் புகையிரதத்தால் மோதப்பட்டு தூக்கி வீசப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த பிரஸ்தாப் வர்த்தகர் உடனடியாக கொழும்பு வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலமானது பிரேத பிரிசோதனையின்பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-15,271)

# சிறுத்தைக்...

ண்டு குட்டிகள் முல்லைத்தீவில் மீட்கப்பட்டுள்ளன.

சர்வதேச அளவில், அழிந்து வரும் இனங்களை அடையாளப்படுத்தும் சிவப்பு பட்டியலில் இந்தவகை சிறுத்தைகளும் இடம்பெற்றுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பகுதியில் காட்டுக்கு வேட்டைக்குச் சென்ற சிலர் எப்படியோ சிறுத்தைக் குட்டிகள் இரண்டைப் பிடித்து வந்து விற்பனை செய்ய முற்பட்டிருக்கின்றார்கள்.

இது பற்றி இரகசியமாகக் கிடைத்த தகவலையடுத்து, அதிகாரிகளுடன் அங்கு விரைந்த வட மாகாண விவசாயத்துறை அமைச்சர் ஐங்கரநேசன் அந்தக் குட்டிகளை மீட்டு, வன விலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளார்.

சட்டவிரோதமான வகையில் இந்தச் சிறுத்தைக் குட்டிகளை விற்பனைச் செய்ய முயன்றவர்கள் அதிகாரிகளைக் கண்டவுடன் தப்பிவிட்டனர்.

அழிந்து வரும் பட்டியலில் இருக்கும் இந்தச் சிறுத்தை வகையை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதாகக் அமைச்சர் ஐங்கரநேசன் கூறினார்.

உலகின் அரிய வனவிலங்குகளை அழியாமல் பாதுகாப்பதுடன், அவற்றை வணிக நோக்கத்திற்காகக் கடத்துபவர்கள், விற்பனை செய்பவர்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வனவிலங்கு அதிகாரிகளிடம் கோரியிருப்பதாகவும் வட மாகாண விவசாயத்துறை அமைச்சர் ஐங்கரநேசன் கூறினார். (செ-11)

# கொழு...

பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை நேற்று முன்தினம் மாலை பொலிஸார் பெற்றுள்ளனர்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த அமைப்புக்கள் நேற்று ஆர்ப்பாட்டங்களை நடத்த விருப்பதாக தெரிய வந்தமையை அடுத்தே பொலிஸார் தடையுத்தரவை பெற்றுள்ளனர். (செ-11)


## கட்டார் நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு!



கட்டார் நாட்டில் உள்ள Al Massera முன்னணி நிறுவனத்தில் மரத்தளபாட உற்பத்தி மற்றும் அதனை அழகுபடுத்தும் துறையில் கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

| | | |
|---|---|---|
| Carpenters | 15 | 1400+OT |
| Spray painters (Furniture) | 15 | 1400+OT |
| Foreman | 10 | 1900+OT |
| Project Co-ordinator | 05 | 2800+OT |
| Autocad DraftMan | 05 | 2800+OT |
| Project Manager | 02 | 4400+OT |
| Driver (Heavy vehicles) Gulf Licence | 10 | 2000+OT |
| AC Technician (Gulf Experience) | 10 | 2200+OT |
| **Trolly Boy (new Qatar airport)** | 25 | 900+OT+Tip |

தங்குமிடம் மருத்துவம் இலவசம் நாளாந்த வேலை நேரம் 8 மணித்தியாலம். மேலதிக வேலைநேரம் உண்டு. கைவசம் வீசா உள்ளதால் இரண்டே வாரத்துக்குள் பயணம் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இடங்கள்.

எதிர்வரும் 16.08.2014சனிக்கிழமை
காலை 9.00-1.00 மணிவரை
Lanka Voice
இல. 26/2, புகையிரத நிலைய வீதி, வவுனியா. T.P:-0245615610, 0766697789

எதிர்வரும் 17.08.2014 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00-2.00 மணிவரை
Green Grass Hotel
வைத்தியசாலை வீதி, ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். T.P:- 0779527575

உடன் தொடர்பு கொண்டு உங்கள் விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ள
Lanka Voice-Mannar. Vavuniya. 0766697789
Lanka Voice-Jaffna 0779527575

AIR TRUST LL.No.2490
Overseas Manpower Consultant
No.945 1/1 Maradana Road, Colombo-08.
(C-8189)



## Granton Group Sri Lanka Vacancy

எமது Granton Group Companyக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள துடிப்பும் ஆர்வமும் தன்னம்பிக்கையும் கொண்ட இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர்.

பயிற்சியின் போது 15,000/= பயிற்சியின் பின் 60,000/=
எம்மிடம் 4 பணிகள் உள்ளன.
- மேற்பார்வையாளர்(Supervisor)
- முகாமைத்துவ பயிற்சியாளர் (Management trainee)
- நிர்வாக அதிகாரி(Administrative)
- சந்தைப்படுத்துனர்(Distributors)

வயதெல்லை 18-30 தகைமை -O/L or A/L
தங்குமிடவசதி வழங்கப்படும். அனுபவம் அவசியமற்றது.
அழைக்க:- 0774458134
(7401)



## SYLO ஐஸ் கிறீம் SWEET YOUR LIFE ORBIT



உங்கள் அபிமான SYLO ஐஸ் கிறீம் நிறுவனத்தினர் இம்முறை நல்லூரில் இல.251C பருத்தித்துறை வீதியில் (கோயில் முன்புற வீதி) தமது விற்பனை நிலையத்தை அமைத்துள்ளதுடன் பிரதி வெள்ளிக்கிழமை சந்நிதி முருகன் கோவிலிலும் ஞாயிற்றுக்கிழமை வல்லிபுர கோவிலிலும் தமது விசேட விற்பனை வாகனத்தை நிறுத்தியுள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றார்கள்.

தரம், சுவை, சுகாதாரம் விரும்புபவர்கள் ஒருமுறை சுவைத்துப் பாருங்கள்

021 492 6003

இவ்விளம்பரத்தை எடுத்து வந்து இலவசமாக உங்களுக்கான 25/- பெறுமதியான ஐஸ் கிறீமை சுவைத்து மகிழுங்கள்

SYLO FOOD & BAVAREGES (Pvt) Ltd
இல.76, அம்மன் கோவில் வீதி
கொக்குவில் கிழக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.